# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 20 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 01, வெள்ளிக்கிழமை 16.12.2016


## எமில்காந்தனுக்கு பன்னாட்டுப் பிடியாணை

யாழ்ப்பாணம், டிசெ. 16

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் நிதிப் பொறுப்பாளர் எமில் காந்தனுக்குக் கொழும்பு உயர் நீதிமன்றம் பன்னாட்டுப் பிடியாணை பிறப்பித்துள்ளது. ராடா நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பான வழக்கு நீதிபதி குசல சரோ

>> 25

## ஒற்றையாட்சி மட்டுமே தீர்வு வேறெதையும் ஏற்காது சு.க.

### அழுத்தம் திருத்தமாகக் கூறினார் அமைச்சர் பைசர் முஸ்தபா



யாழ்ப்பாணம், டிசெம்பர் 16

ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரிக்காது.

இவ்வாறு அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

மருதானையில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

>> 25

## அரசின் எச்சரிக்கையால் போராட்டத்தை கைவிட்ட துறைமுகப் பணியாளர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 16

அம்பாந்தோட்டைத்துறைமுக ஊழியர்கள் நேற்றைய தினம் தமது போராட்டத்தைக் கைவிட்டுப் பணிக்குத் திரும்பியுள்ளனர். துறைமுக அதிகார சபையில் தம்மை இணைத்துக் கொள்ளுமாறு

>> 25

## நாட்டை விற்றவர் மகிந்தவே

### சாடுகிறார் நிதியமைச்சர்

கொழும்பு, டிசெ. 16

நாட்டின் பொது வளத்தை விற்றதும், வீண்விரயம் செய்ததும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே. இப்படிப்பட்ட ஒருவர் எமது நாட்டை ஆண்டிருப்பதை

>> 04

## கே.கே.எஸ், திருமலையை யாருக்குக் கொடுப்பீர்கள்?

### நல்லாட்சியிடம் கேட்கிறார் மகிந்த



யாழ்ப்பாணம், டிசெ. 16

அம்பாந்தோட்டையைச் சீனாவுக்குக் கொடுத்த இந்த அரசு காங்கேசன்துறையையும், திருகோணமலையையும் யாருக்கு கொடுக்கப் போகின்றது.

>> 25

## அதிகாரப் பகிர்வுக்கு அளவுகோல் உண்டு

### கூறுகிறார் பிரதமர் ரணில்

யாழ். டிசெ. 16

தமிழர்களுடனான அதிகாரப் பகிர்வு சம்பந்தமான இணக்கப்பாட்டுக்கு ஓர் அளவு இருக்கின்றது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இந்தியாவின் 'தஹிந்து' ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்

>> 25

## மகிந்த போன்றே மைத்திரி அரசும்

### நாட்டை விற்க முயற்சி என சாடுகிறது ஜே.வி.பி.

யாழ்ப்பாணம், டிசெ. 16

கடந்த அரசைப் போன்று நாட்டை விற்கும் முயற்சியில்தான் தற்போதைய அரசும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த முயற்சியை- நடவடிக்கையைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

>> 04

## உண்மையான நல்லாட்சியை இனிமேல்தான் பார்ப்பீர்கள்

யாழ். டிசெ. 16

இதுவரை கண்டது எதுவும் இல்லை. இனிமேல் நீங்கள் பார்க்கப்போவது தான் நல்லாட்சியின் உண்மையான வேலைத் திட்டங்கள் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க

>> 25

## நாடு திரும்புவோருக்கு திட்டங்கள் ஏதுமில்லை

### அரசு மீது துறைசார் நிபுணர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 16

புலம்பெயர்ந்தவர்களை மீண்டும் நாட்டுக்கு வருமாறு அரசு விடுத்த அழைப்பை ஏற்று வந்தபோதும், தமது வாழ்வாதாரத்துக்கான எவ்வித திட்டமிடல்களையும் அரசு

>> 25

## இலங்கைக்கு அமெ. பாராட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 16

இலங்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதை மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்புச் சபையின் தீர்மானம் எடுத்துக் காட்டுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

புதிய மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் பணிப்பாளர் சபை, பொருளாதார

>> 04

## மாகம்புர துறைமுகத்தில் நிரந்தர கடற்படை முகாம்

### தளபதிக்குப் பிரதமர் பணிப்புரை



யாழ்ப்பாணம், டிசெ. 16

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நிரந்தர மாகக் கடற்படை முகாமொன்றை அமைக்கவுள்ளதாகவும் இது தொடர்பில் கடற்படைத் தளபதிக்கு

>> 04

முச்சந்தி முரளி



உப்புடி விடாப்பிடியா நிண்டா எப்பிடி தீர்வு வரும்...

## கிளிநொச்சி ம.வி. காணியை விடுவிக்கின்றது இராணுவம்

### மைத்திரிபால பதவியேற்று 2 ஆண்டு நிறைவையொட்டி

யாழ்ப்பாணம், டிசெ. 16

கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தைப் படையினர் மீளவும் பாடசாலைச் சமூகத்திடம் விரைவில் ஒப்படைக்கவுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று இரண்டாவது ஆண்டு நிறைவாக இந்தக் கையளிப்பு நடைபெறவுள்ளதாக, ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள், வடக்கு மாகாண தலைமைச் செயலர் ஆகியோருக்கும்,

>> 04



## மலேசியாவில் மைத்திரிக்கு நேற்று இராணுவ மரியாதை

யாழ்ப்பாணம், டிசெ. 16

மலேசியா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இராணுவ அணி வகுப்பு மரியாதையுடனான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

>> 04

## அளவுக்கதிகமாக முல்லைத்தீவில் இராணுவத்தினர்

### பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அச்சத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினர் அளவுக்கு அதிகமாகக் காணப்படுவதால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

>> 25

## ஓமந்தையில் 20 ஏக்கரை இராணுவம் விடுவிக்கும்


### பதிலாக வேறிடத்தில் 6 ஏக்கர் காணி

யாழ்ப்பாணம், டிசெ. 16

வவுனியா மாவட்டம் ஓமந்தையில் உள்ள சோதனைச்சாவடி அமைந்துள்ள 20 ஏக்கர் காணியைவிடுவிக்க இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதற்குப் பதிலாக இராணுவத்தினருக்கு வேறொரு இடத்தில் 6 ஏக்கர் காணி ஏ-9 வீதியில்வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு வவுனியா மேலதிக மாவட்டச் செயலர்

>> 04



## கடற்படைத் தளபதிக்கு எதிராகப் போராட்டம்

### கோட்டை ரயில் நிலையம் முன் திரண்டனர் ஊடகவியலாளர்கள்

யாழ். டிசெ. 16

அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ச துறைமுக வளாகத்தில் வைத்து ஊடக வியலாளர் மீது கடற்படைத் தளபதி மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் கண்டன ஆர்ப்பாட்டம், கொழும்பு புறக்கோட்டை மை

>> 25

## 5000 ரூபாவுக்கு தடையில்லை

>> 04




எமது நடைமுறைக் கணக்கு மூலம் நீங்களும் வளர்ச்சி பெறுங்கள்

- நடைமுறைக் கணக்கு
- சேமிப்புக் கணக்கு
- வாகனக் கடன்
- லீசிங்
- தனிநபர் கடன்
- வீட்டுக் கடன்
- கல்விக் கடன்
- வர்த்தகக் கடன்

உங்கள் வளர்ச்சிக்கு உதவி புரியும் சேவைகள் பற்றி மேலும் விபரங்களை அறிந்து கொள்ள எம்மிடம் வாருங்கள்.
24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000 | www.dfcc.lk

DFCC வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா பயணமாகிறார் விமானப்படைத் தளபதி



யாழ்ப்பாணம், டிசெ. 16
விமானப்படைத் தளபதி எயர் மார்சல் கபில ஜெயம்பதி இந்தியாவுக்குப் பயணம்மேற்கொள்ளவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பயணத்தின்போது, தெலுங்கானா மாநிலத்தில் ஹைதராபாத்தில், உள்ள தண்டிகல் விமானப்படைப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் நிகழ்வில் தலைமை விருந்தினராக விமானப்படைத் தளபதி பங்கேற்கவுள்ளார்.

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பயிற்சிகளை முடித்த அதிகாரிகளின் அணி வகுப்பு மரியாதையை விமானப்படைத் தளபதி பார்வையிடுவார்.

விமானப்படைத் தளபதியின் இந்தியப் பயணத்தின் போது, இந்தியாவில் தயாரிக்கப்படும் தேஜஸ் போர் விமானங்களின் திறன் குறித்த மதிப்பீடுகளையும் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விமானப்படைக்கு எட்டு வரையான போர் விமாணங்கள் விரைவில் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், சுவீடன் ஆகிய நாடுகளின் தயாரிப்புகளுடன், இந்தியாவின் தேஜஸ் போர் விமானங்களும், விமானப்படையின் பரிசீலனையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஜனாதிபதி செயலகத்துக்கு முறையிட்டமையால் பயன்

### கிளிநொச்சியில் சட்டவிரோத மதுபானம் விற்ற இருவர் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 16
ஜனாதிபதி செயலகத்துக்குப் பொதுமக்கள் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் அனுமதிப் பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிராமத்தில் மதுபான விற்பனை சட்டவிரோதமாக இடம்பெறுகின்றது. இதனால் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக அந்தப் பகுதி மக்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு கடிதம் அனுப்பியிருந்தனர். ஜனாதிபதி செயலகத்தினால் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கு அமைவாகக் கிளிநொச்சி மற் றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்னவால் நியமிக்கப்பட்ட சிறப்புப் பொலிஸ் குழுவினர், மக்கள் முறைப்பாடு செய்த இடத்திற்குச் சென்று மதுபானப் போத்தல்களைக் கைப்பற்றினர். சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

750 மில்லி லீற்றர் கொள்ளவுடைய 18 போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. (த-5-35)

## மார்ச்சில் தேர்தல் அதில் மாற்றமில்லை

### எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை டிசெ. 28 கிடைக்கும் என்கிறார் பைசர்

யாழ்ப்பாணம், டிசெ. 16
உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை எதிர்வரும் 28 ஆம் திகதியளவில் கிடைக்குமாக இருப்பின் அதனை வர்த்தமானியில் பிரசுரித்து அடுத்தாண்டு மார்ச்சில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியும் என்று அமைச்சர் பைசர் முஸ்தப்பா தெரிவித்தார்.

> “உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பான எல்லை நிர்ண யக் குழு தமது பணிகளை நிறைவு செய்யக் கால அவ காசம் கோரியிருந் தது. எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை அவர்களுக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

மருதானையில்அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பான எல்லை நிர்ணயக் குழு தமது பணிகளை நிறைவு செய்யக் கால அவகாசம் கோரியிருந்தது. எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை அவர்களுக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்தக் குழுவினர் தமது அறிக்கையை எதிர்வரும் 28 ஆம் திகதி கையளிள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர். அவ்வாறு கிடைக்கப்பெற்றவுடனேயே நாம் அது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலைவெளியிடுவோம். மார்ச் மாதத்தில் தேர்தலை நடத்தக் கூடியதாக இருக்கும் - என்றார். (த-5)

## இந்திய குடிமகனை நாடு கடத்த யாழ். நீதிவான் மன்றம் உத்தரவு

அனுமதிப்பத்திரமின்றி புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியக் குடிமகனை இலங்கையை விட்டு நாடு கடத்துமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது. அவரது லட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் அரசுடமையாக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து சுற்றுலா நுழைவு விசைவில் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணம் குருநகர்பகுதியில் துவிச்சக்கர வண்டியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கடந்த மாதம் 23ஆம் திகதி குறித்த இந்தியக் குடிமகன் குருநகர் சந்தைப்பகுதியில் வைத்து யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து பல இலட்ம் ரூபா பெறுமதியுடைய உடுபுடைவைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பொலிஸார் நீதிமன்றில் அவருக்கு எதிரான குற்றப்பத்திரத்தை முன்வைத்தனர். குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டை அவர் ஏற்றுக் கொண்டார். அதனையடுத்து மீரிஹான பிரதேசத்தில் அமைந்துள்ள புணர்வாழ்வு முகாம் ஊடாக இந்தியக் குடிமகனை நாடு கடத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மதுரையைச் சேர்ந்த கோபால் செட்டியார் இராமசாமி தன்னுடைய மனைவியுடன் இலங்கைக்கு வந்திருந்த வேளையிலேயே அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (வ-4,103)

## சைக்கிள் திருடர்கள் யாழ். நகரில் சிக்கினர்

துவிச்சக்கரவண்டிகள் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள், இதுவரை சுமார் 50 சைக்கிள்களைத் திருடியுள்ளதாகவும், அவற்றை விற்று மது அருந்துவதை வழமையாகக் கொண்டுள்ளனர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

'யாழ். நகரப் பகுதியில் இந்தவருடம் இடம்பெற்ற 50க்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டி திருட்டுக்களில் இவர்களுக்குத் தொடர்புகள் உள்ளன. இவர்களால் திருடி விற்பனை செய்யப்பட்ட 20 க்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகளை யாழ்ப்பாணம், குருநகர்ப் பகுதிகளிலிருந்து கைப்பற்றப்பட்டன. திருடிய துவிச்சக்கரவண்டிகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்து, அதன் மூலம் பெற்ற பணத்தை மதுபானத்துக்கும் போதைப் பொருளுக்கும் இந்தக் கும்பல் பயன்படுத்தியுள்ளது.

முன்னர் 2 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் பின்னர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். அவர்களில் ஒருவர் கோப்பாய் பிரதேசத்தையும் மற்றைய இருவர் யாழ்ப்பாணம் குருநகர் பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பாண மாநகர சபையில் கடமையாற்றுபவர் என்பது விசாரணையில் தெரியவந்தது. இன்னொருவர் முச்சக்கர வண்டிச் சாரதி. இந்த 3 பேரும் வெவ்வேறு இடங்களில் திருட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர். அது பற்றிய மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன' என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,103)

## நிரந்தர வீடுகள் வழங்குமாறு உணவு ஒறுப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 16
நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அடப்பன்குளம் மக்கள் நேற்றுக் காலை உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா செட்டிகுளம் வீதியில் உள்ள அடப்பன்குளம் அம்மன் ஆலய வளாகத்தில் காலை 8 மணிக்கு ஒன்று கூடிய மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கிராமத்துக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் திடீரென வேறு கிராமத்திற்கு மாற்றப்பட்டது என்றும், அதற்கான காரணம் இதுவரை தமக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.



கிராமத்தில் 45 குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களில் வீட்டுத் திட்டம் நிராகரிக்கப்பட்ட 20 குடும்பங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. போரால் 1984 ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறி இந்தியா மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்திருந்த மக்கள் 2009 ஆம் ஆண்டின் பின்னர் மீளக்குடியமர்ந்தனர்.

சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்து 7 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படாது புறக்கணிக்கப்படுகின்றோம்.- என்று அவர்கள் தெரிவித்தனர். எமது மதிப்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே எங்கள் கிராமம் உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா?, தேர்தல் காலங்களில் மட்டுமா தெரியும்? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர்.

உணவு ஒறுப்பில் ஈடுபட்ட மக்கள் நேற்றிரவு 8 மணியுடன் போராட்டத்தைக் கைவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் போரினால் அங்கவீனமானோரை புறக்கணிக்கிறது அரசு

## சாந்தி சிறிஸ்கந்தராசா எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 16

போரால் அங்கவீனமான இராணுவத்துக்கு அரச விசேட நிதி ஒதுக்கீடுகளை, சிறப்புச் சலுகைகள் திட்டங்களை மேற்கொள்வது போன்று வடக்கில் போரால் பாதிக்கப்பட்டு அங்கவீனமாக்கப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாற்றுவலுவுள்ளோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தெரிவித்ததாவது:

2017ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் போரில் அங்கவீனமான இராணுவத்துக்கு விசேட நிதி ஒதுக்கீடுகளும், விசேட சலுகைகளும் ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டன. வடக்கில் போரால் அங்கவீனமானவர்களுக்கு எந்த சிறப்புத் திட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. வடக்கில் போரால் அங்கவீனமாக்கப்பட்ட மாற்று வலுவுள்ளவர்களைப் புலிகளாகத் தொடர்ந்தும் பார்க்க வேண்டாம். அவர்கள் புனர்வாழ்வு பெற்று இந்தச் சமூகத்தில் இணைந்து வாழ்கின்றவர்கள். நல்லாட்சி என்று கூறப்படுகின்ற இந்த அரசு தெற்கில் உள்ளவர்களுக்கு வழங்குகின்ற சிறப்புச் சலுகைகள் போன்று வடக்கில் உள்ளோருக்கும் சிறப்புச் சலுகைகளை வழங்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் தொடர்பாகவும் அவர்களின் உரிமைகள் நலன்கள் தொடர்பாகவும் கதைப்பவர்களாக மட்டும் நாம் இருந்துவிடாது எங்கள் அடி மனங்களில் மாற்றம் ஏற்படுகின்றவர்களாக நாம் மாறவேண்டும்.

நானும் ஒரு மாற்றுத்திறனாளி என்ற வகையில் எனது அனுபவத்தின் அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளான எமக்கு விழிப்புணர்வு தேவையில்லை. எங்களுடன் கூட இருக்கின்ற சமூகத்துக்கே விழிப்புணர்வு தேவை. நாம் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகளை எவரிடமும் இரந்து கேட்கவில்லை. எங்களுக்குரிய உரிமைகளை எமக்குத் தாருங்கள் என்று தான் கேட்கின்றோம். மாற்றுத்திறனாளிகள் போக்குவரத்து செய்கின்றபோது குறிப்பாக பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு என்று இருக்கைகள் ஒதுக்கி வைத்திருக்கின்றபோதும் சில சமயங்களில் ஒற்றைக் காலுடன் ஒருவர் நின்று வருகின்றபோது இருக்கைகளில் இருப்பவர்கள் எழுந்து இடம்கொடுக்காத தன்மை உள்ளது. அவர்களின் மனங்களில் மாற்றம் வரவேண்டும். அவ்வாறானவர்களுக்குத்தான் விழிப்புணர்வு தேவை.

இந்த மண்ணின் விடிவுக்காகத் தமிழ் இனத்தின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த பலர் இன்று கையை இழந்து காலை இழந்து இடுப்பை இழந்து பல்வேறு பட்டப் பெயர்களுடன் கூனிக்குறுகி வாழ்கின்றனர். அவர்கள் தொடர்பான சமூகத்தின் மனநிலை மாற வேண்டும்.

அன்று அவர்களுக்கு எப்படி மதிப்பு கொடுத்தோமோ அதனைவிட மேலான மதிப்பு தற்போது கொடுக்க வேண்டும்.

மாற்று வலுவுள்ளோருக்கு ஏற்ற வகையில் திட்டங்கள் சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தப் பிரதேசத்தில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க வேண்டும். இந்தத் தொழிற்பேட்டையில் மாற்று வலுவுள்ளோர் தங்கள் இயலுமைக்கு அமைவாக தொழில் மேற்கொள்ளக்கூடிய வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் இவர்கள் சுயமாக உழைத்து தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல இயலும் - என்றார். (ற-10.35)

# இராணுவ இரகசியத்தை ஒளிப்பதிவு செய்வதற்கு முயன்றார் செய்தியாளர்

## அதனாலேயே கடற்படைத் தளபதி தள்ளினார் என்கிறார் சரத் பொன்சேகா



யாழ்ப்பாணம், டிசெ. 16

இராணுவ இரகசியத்தை ஊடகவியலாளர் ஒளிப்பதிவு செய்ய முற்பட்டதாலேயே அவரைக் கடற்படைத் தளபதி தள்ளினார். இவ்வாறு அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத்பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர் இராணுவ இரகசியத்தை வீடியோவில் பதிவு செய்துள்ளார். இதன்போது கடற்படைத் தளபதி ஒளிப்பதிவு செய்ய வேண்டாம் எனக்கூறி, ஊடகவியலாளரைப் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியில் கொண்டு சென்றார்.

வெளியில் இருந்து பார்க்கும்போது கழுத்தை நெரித்தது போலவும் தள்ளுவது போலவும் தெரியும். ஆனால் உண்மை அதுவல்ல. கடற்படைத்தளபதி ஊடகவியலாளரைத் தாக்கியதாகத் தகவல்கள் இல்லை.

கப்பலை விடுவிக்கும்போது பைலட் என்ற கடமையைச் செய்ய நேரிடும். அவ்வாறான கடமையைச் செய்யக் கூடிய இரண்டு அதிகாரிகளே இலங்கையில் இருக்கின்றனர். அவர்களில் கடற்படை தளபதியும் ஒருவர். பைலட் என்ற கடமையைச்செய்யும்போது நீலநிற ரீசேர்ட் மற்றும் காற்சட்டை என்பன அந்த உடைக்கான சீருடை என்றார். (த-5)

# உயர் பதவியில் பாலித மகிபால



யாழ்ப்பாணம், டிசெ. 16

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பாலித மகிபால உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய வலய நாடுகளுக்கான தொற்றா நோய், இடம்பெயர்வு சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பான ஒருங்கிணைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய வலய காரியாலயத்தில் அவர் இன்று பதவியைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலித மகிபால சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடந்த 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்றுள்ளதுடன், இவர் 30 வருட சேவை அனுபவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# கிண்ணியாவில் புத்தர் சிலை வைப்பதற்கு நேற்றுத் தடை

அம்பாறை, டிசெ.16

திருகோணமலை - கிண்ணியா துறையடிப் பகுதியில் புத்தர் சிலை வைக்கப்படுவதற்காக அமைக்கப்பட்டுவரும் சட்டவிரோத கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு மாவட்டச் செயலர் ஜெகத் புஸ்பகுமார நேற்று உத்தரவிட்டார்.

நேற்று நடைபெற்ற திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் அன்வர் குறித்த கட்டடம் தொடர்பாக மாவட்டச் செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து திருகோணமலை மாவட்டத்துக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபருடாக, சீனன்குடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மேற்படி சட்டவிரோத கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை உடன் நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டது. (த-ய-49)

# ஆசிரியர் தர அவைக்காற்றுகை

யாழ்ப்பாணம், டிசெ. 16

செல்வி செல்வப்பிரியா சுந்தரலிங்கத்தின் ஆசிரியர் தர அவைக்காற்றுகை நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள வட இலங்கைச் சங்கீத சபையில் நடைபெறவுள்ளது. (த-5)

# கே.பியைக் கைது செய்ய உத்தரவிட முடியாது

## மேன் முறையீட்டு நீதிமன்று அறிவிப்பு

விசாரணை நிறைவடைவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் பொறுப்பாளரான கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதனை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்க முடியாதென்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்று நேற்று அறிவித்தது.

குமரன் பத்மநாதனை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரும் மனு ஒன்று மக்கள் விடுதலை முன்னணியினால் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் விஜித் மழல்கொட இதனைத் தெரிவித்தார்.

'ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டால் மாத்திரமே ஒரு நபரை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்க முடியும். ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு கைது உத்தரவைப் பிறப்பிக்க முடியாது' என்று நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

குமரன் பத்மநாதன் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற காரணத்தால் இந்த மனுவை விசாரணை செய்யும் அவசியம் ஏற்படவில்லை யென அரசு தரப்பு சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார். அவற்றைப் பரிசீலித்த நீதியரசர், குமரன் பத்மநாதன் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸாருக்கு மேலும் கால அவகாசம் வழங்கி மனு மீதான விசாரணை எதிர்வரும் மாசி மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வ-4)

# வடக்கு அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு ஆண்டு நிறைவையொட்டி இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் முடிவுறாத திட்டங்கள், வீட்டுத் திட்டங்களை உரியவர்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள், முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தின் திறப்புவிழா உள்ளிட்ட நிகழ்வுகள் தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டது.

மீள்குடியேற்ற அமைச்சர், இராணுவத் தளபதி, யாழ்ப்பாணம் , முல்லைத்தீவு மாவட்டங்களின் மாவட்டச் செயலர்கள், மூன்று மாவட்டங்களின் கட்டளைத் தளபதிகள், வடக்கு மாகாண முதன்மைச் செயலாளர் உள்ளிட்டோர் இதில் பங்கு கொண்டனர். (த-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மக்களின் பங்களிப்புடன் புதிய அரசமைப்பு

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

புதிய அரசமைப்பு அனைத்து மக்களதும் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் என்று மேல் மாகாண அபிவிருத்தி மற்றும் மெகா பொலிஸ் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

'இதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட இரண்டு அரசமைப்புக்களும் கட்சி அல்லது ஒருதலைவரின் விருப்பத்துக்கு அமைய உருவாக்கப்பட்டன. எனினும் புதிய அரசமைப்பானது அனைவரது இணக்கத்துடனும் மேற் கொள்ளப்படும். பன்னாட்டுச் சக்திகளினதோ அல்லது அடிப்படைவாதிகளின் அழுத்தங்களுக்கு அமைவாகவோ அரசமைப்பு உருவாக்கப்படப்போவது இல்லை. புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டின் ஒருப்மைப்பாடு, மதச் சுதந்திரம் மற்றும் பௌத்த மதத்துக்கு உள்ள முன்னுரிமை ஆகிய வற்றில் எந்தவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை' என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (வ-5)

### மகிந்த...

இதற்கு எதிரான எமது தீவிரமான-கடுமையான போராட்டத்தை அடுத்த ஆண்டில் அரசு சந்திக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி எச்சரித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் வளங்களை விற்றுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியுமென இப்போது மட்டுமன்றி, 1988 ஆம் ஆண்டுகளிலும் கருத்தொன்று நிலவிவந்தது. அப்போதும் இதே போன்று அரச வளங்களை விற்க முயற்சித்தபோது மக்களின் எதிர்ப்புக்கள் வந்தமையால் மக்கள் மயப்படுத்தல் என்று விற்றனர்.

இதேபோன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசிலும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அந்த வகையில், அரசின் இந்த விற்பனைப் பட்டியலில் பிரதானமாக அம்பாந்தோட்டைத் துறைமுகம் காணப்படுகின்றது.

துறைமுகத்தைக் கப்பல்களுக்கு எரிபொருள் மற்றும் உணவுகளை விநியோகிக்கும் துறைமுகமாக அமைக்கும் வகையிலேயே ஆரம்பத்தில் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால், ராஜபக்ச ஆட்சியில் பொருள்களை ஏற்றி இறக்கும் இடமாக அது மாறியிருந்தது.

இந்த நிலையில் அதற்குக் கப்பல் வருவதில்லை எனவும் மற்றும் கடன் சுமை காணப்படுவதாகவும் தெரிவித்து அதனை விற்க அரசினால் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனை விற்காது சேவைகள் வழங்கும் நிலையமாக மாற்றினால் தொடர்ந்தும் நடத்திச் செல்லலாம்.

கற்பிட்டிப் பகுதியில் காணப்படும் தீவுகளை விற்கவும் முயற்சிக்கப்படுகின்றன. ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் அங்குள்ள 14 தீவுகளை விற்க முயற்சிக்கப்பட்டது. இறுதியில் 2 தீவுகளை மட்டுமே விற்க முடிந்தது. தற்போதைய அரசோ சுற்றுலாத் துறை அபிவிருத்தி என்ற போர்வையில் ஏனைய தீவுகளையும் விற்க முயற்சிக்கின்றது. நாட்டுக்குச் சொந்தமான தீவுகளை விற்கும் நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டுள்ளது.

உலகத்தில் சிறந்த துறைமுகங்களில் ஒன்றான கொழும்பு துறைமுகத்தையும் விற்கத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்குள்ள இறங்குதுறைகளைத் தனியார் நிறுவனங்களுக்கு விற்க யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதுபோன்று எமது நாட்டின் பல்வேறு வளங்கள் தனியாருக்கு விற்கப்படவுள்ளன.

அரசின் இந்த நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். எமக்கு மட்டுமன்றி எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் சொந்தமான இவற்றை விற்கும் அரசின் நடவடிக்கைக்கு நாம் மக்கள் போராட்டம் மூலம் தகுந்த பதில் வழங்குவோம். இதற்கான நடவடிக்கைகள் அடுத்த ஜனவரி முதல் சூடுபிடிக்கும் – என்றார். (த-5)

### ஓமந்தையில்...

திரேஸ்குமார் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வவுனியா ஓமந்தைப் பகுதியில் படையினரின் பிடியில் உள்ள நிலம் தொடர்பில்வவுனியா மாவட்டச்செயலகக் கேட்போர் கூடத்தில் இறம்பைக்குளம் காணி உரிமையாளர்களுக்கும் மேலதிக மாவட்டச் செயலருக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஓமந்தை சோதனைச்சாவடி அமைந்திருந்த 20 ஏக்கர் காணியில் 6 ஏக்கர் காணியை மட்டும் எடுத்து மிகுதிக் காணியை விடுவிக்க இராணுவத்தினர் இணக்கம் வெளியிட்டனர். ஏ-9 வீதியில் 6 ஏக்கர் நிலம் வேண்டுமே அன்றி இந்தக் காணிதான் வேண்டும் எனக் கோரவில்லை எனவும் படையினர் தெரிவித்திருந்தனர்.

அந்தப் பகுதியில் சுமார் 45 குடும்பங்களுக்குச் சொந்தமான காணி உள்ளதாகவும், கடந்த 23 ஆண்டுகளாக இராணுவத்தினர் வசமுள்ள அந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்றும் உரிமையாளர்கள் கோரியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த விடயத்தை இராணுவத்தினரின் கவனத்துக்குக் கொண்டுசென்றோம். அதற்கிணங்கவே சந்திப்பு மாவட்டச் செயலரினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

சோதனைச் சாவடி அமைந்திருந்த பிரதேசத்துக்கு அண்மையாக ஒரு நிலம் பாவனை இன்றி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் காணி தொடர்பில் பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு அது அரச காணி என்றால் அதனைப் படையினருக்கு வழங்கி மக்களின் காணிகளை மக்களுக்கே வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன – என்றார். (த-5-101)

### கிளிநொச்சி...

ஜனாதிபதியின் செயலருக்கும் இடையிலான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில் போருக்குப் பின்னர் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இதனால் பாடசாலை மிக நெருக்கடியின் மத்தியில் இயங்கி வந்தது. படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து காணியை விடுவிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கடந்த மாதம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்குச் சென்றிருந்தபோதும் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசி காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதியின் செயலர் நேற்று மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (த-5-101)

### 5000...

தேவையில்லை. இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

மத்திய வங்கியில் ஏற்படும் சிறிய பிரச்சினைகளையும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் சகாக்களே பெரிதுபடுத்துகின்றனர். இவ்வாறானவர்களின் பெயர் விவரங்களை வெகுவிரைவிலேயே நாம் வெளியிடுவோம்.

தேசியப் பிரச்சினைகள் தொடர்பில் செய்திகளை வெளியிடும்போது ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள் தடை செய்யப்படும் என்று செய்திகள் வந்துள்ளன. நான் அப்படி ஒருபோதும் கூறவில்லை.

5 ஆயிரம் ரூபா தாள் தொடர்பில் எதிர்ப்புகள் காணப்படுகின்றன. அது தொடர்பில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என்று மட்டுமே கூறியிருந்தேன். ஆனால், சில ஊடகங்களோ அந்தச் செய்தியை மாறுப்பட்ட கோணத்தில் வெளியிட்டுவிட்டன. 5 ஆயிரம் நாணயத்தாள் ஒருபோதும் தடைசெய்யப்படமாட்டாது. இது தொடர்பில் மக்கள் அச்சம் அடையவும் தேவையில்லை -என்றார். (த-5)

### மாகம்புர...

பணிப்புரை விடுத்துள்ளதோடு, ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளரிடம் கலந்துரையாடியதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஏற்பட்ட பதற்ற நிலமை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிமரசிங்கவைச் சந்தித்துக் கடற்படை தளபதியான வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தன நேற்று வியாழக்கிழமை சிறப்பு அறிக்கையொன்றைக் கையளித்தார்.

அலரிமாளிகையில் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனவரி 7 ஆம் திகதி முதல் சீன நிறுவனத்தின் கீழ் அம்பாந்தோட்டை துறைமுக நிர்வாகம் வரவுள்ளது. இதனுடன் துறைமுக அதிகார சபையும் இணைந்து செயற்பட்டு, ஊழியர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகப் பிரச்சினையானது தற்போது முடிவுக்கு வந்துள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டுவந்த ஊழியர்கள் அனைவரும் பணிக்குத் திரும்பியுள்ளனர். இவை தொடர்பில் கடற்படைத் தளபதி எனக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

கப்பல்களைத் தடுத்து வைத்து ஊழியர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டமையால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. இது துறைமுகங்கள் மீதான நம்பிக்கையில் தாக்கம் செலுத்தியுள்ளது. அதிக கப்பல்கள் வர ஆரம்பித்துள்ள நிலையில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளமையானது கவலையளிக்கின்றது.

கப்பல்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளபோதிலும், கே லைன் என்ற நிறுவனமானது தனக்கு 4 லட்சம் டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அரசுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. இந்தத் தொகையைத் தற்போது யார் செலுத்துவது? சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் பேசுமாறு அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நிரந்தரமாக இருக்கும் வகையில் கடற்படை முகாமொன்றை அமைக்குமாறும் நான் கடற்படைத் தளபதிக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன். இது குறித்து ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரிடமும் பேசினேன். சீன நிறுவனம் உட்பட வெளிநாட்டு நிறுவனங்கள் பலவும் இந்தக் கோரிக்கையை விடுத்தன. அம்பாந்தோட்டையில் பாதுகாப்பு கருதி அங்கு நிரந்தரக் கடற்படை முகாமொன்று அமைக்கப்படும். மத்தள விமான நிலையத்துக்கும் விமானப்படையினர் அனுப்பி வைக்கப்படுவார்கள் – என்றார். (த-5)

### நாட்டை...

நினைத்து மிகுந்த கவலையடைகிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

துறைமுகங்களை அரசு விற்பனை செய்கிறது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருந்தார். மகிந்த ராஜபக்ச இப்போதுதானா நித்திரையிலிருந்து எழுந்தார்? அவர் போன்றவர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்ததை நினைத்து மிகுந்த கவலையடைகிறேன்.

கொழும்பு நகரத் திட்டமிடல், போர்ட் சிற்றி மற்றும் சில நிறுவனங்களை விற்றும், துறைமுகங்களை விற்றும், கடன்களை பெற்றும் நாட்டைப் படுகுழியில் தள்ளியவர் மகிந்தவே. அவர் வாங்கிய கடனைச் செலுத்தவே நாங்கள் கலப்பு முறையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் நிர்வாகத்தை ஒழுங்கு செய்துள்ளோம்.

கடந்த தேர்தலின்போது ஆயிரத்து 200 கோடி ரூபா பணம் மத்திய வங்கியிலிருந்து வெளியே சென்றது. அது தொடர்பான விடயங்கள் மூடி மறைக்கப்பட்டன. தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாந்தோட்டைத்துறைமுகத்தை விற்பனை செய்வதன் மூலம் கொழும்பு துறைமுகத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அம்பாந்தோட்டையில் ஈட்டப்படும் மூலதனத்தைக் கொழும்பு துறைமுகத்தினூடாகப் பெறுவதற்கே இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசும் தனியாரும் சேர்ந்து செயற்படும் நிலை ஏற்படும்–என்றார். (த-4)

### இலங்கைக்கு...

வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்பை ஊக்குவிப்பதற்கான நாடாக இலங்கையைத் தேர்வு செய்துள்ளது.

மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் உதவித் திட்டத்துக்குள் இலங்கை உள்வாங்கப்பட்டுள்ளமை குறித்து ருவிட்டர் பதிவொன்றின் ஊடாக அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வால் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் பணிப்பாளர் சபையின் சந்திப்பில் இலங்கை, புர்கினோ, பசோ மற்றும் ரியூனியா ஆகிய நாடுகள், இந்த ஊக்குவிப்பு திட்டத்துக்கென தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இலங்கை மக்களுடனான ஆறு தசாப்த அபிவிருத்திப் பங்களிப்புக்கு பெரிய உந்துசக்தியாக, மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பு குறிப்பிடத்தக்க ஆதரவை வழங்கியுள்ளதாக அமெரிக்க தூதுவர் அத்துல் கெசாப் தெரிவித்துள்ளார்.

மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் உதவியை பெறுகின்ற நாடாக இலங்கை தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படையில், ஜனநாயக ஆட்சி, மக்களுக்கான முதலீடு மற்றும் பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பை நிரூபிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

நல்லாட்சி, ஊழலுக்கு எதிராகப் போராடுதல், பெண்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தல், வறுமைக்கு எதிராகப் போராடும் திறனை அதிகப்படுத்தல், மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தல் போன்ற விடயங்களில் சிறந்த தரங்களை அடைவதே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடான ஒத்துழைப்பின் நோக்கம் என்று மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் தலைமை நிறைவேற்று அதிகாரி டனா ஜே ஹைடி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயக உரிமைகளை நிலைநிறுத்துவதில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளமை உள்ளிட்ட தொடர்ச்சியான மேம்பாடுகளை காண்பித்ததன் அடிப்படையில் மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் உதவித் திட்டத்திற்கென இலங்கை தேர்வு செய்யப்பட்டுள்ளது. (த-5)

### மலேசியாவில்...

மலேசிய அரசின் சிறப்பு அழைப்பில் மூன்றுநாள் உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு சென்றுள்ளார்.

நேற்றுப் பி.ப. 2.30 (மலேசிய நேரம்) மணிக்குக் கோலாலம்பூரை சென்றடைந்தார். மலேசிய அரசின் சார்பில் அந்த நாட்டின் மனித வள அபிவிருத்தி அமைச்சர் உள்ளிட்ட பிரதிநிதிகள் ஜனாதிபதியை வரவேற்றனர். இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பு இடம்பெற்றது. இரண்டு நாடுகளினதும் நீண்டகால நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் விமான நிலைய வளாகத்தில் இரண்டு நாடுகளினதும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

ஜனாதிபதி சிறிசேனவுக்கும் மலேசிய மனிதவள அபிவிருத்தி அமைச்சருக்குமிடையே சுமுகமான சந்திப்பொன்றும் விமான நிலைய வளாகத்தில் இடம்பெற்றது. (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.16

உள்ளூராட்சி மாதத்தையும் தேசிய வாசிப்பு மாதத்தையும் முன்னிட்டு வலி. தென்மேற்கு பிரதேச சபையின் கீழுள்ள நூலகங்களால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேசசபைச் செயலாளர் கு.சற்குணராஜா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் தலைமை விருந்தினராக வடமாகாண முதலமைச்சரின் செயலாளரும் உள்ளூராட்சி அமைப்பின் செயலாளருமான திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் என்.திரிலிங்கநாதன், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி செல்வி சிந்துஜா, சண்டிலிப்பாய் பிரதேச செயலகக் கணக்காளர் சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ற-115)

# பணம் அபகரித்தவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

தென்மராட்சி, டிசெ.16

வீதியில் சென்றவரைத் தாக்கி அவரிடமிருந்து 20 ஆயிரத்து 710 ரூபாவை அபகரித்த கைதடி குமரநகர் வாசிக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 9 மாத சிறைத் தண்டனை விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

சாவகச்சேரி நகரப் பகுதியில் நடந்து சென்ற நபரை வழி மறித்து தாக்கி அவரிடமிருந்து பணத்தை அபகரித்தார் என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

அதையடுத்து பொலிஸார் அந்த நபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கு விசாரணைகளின் பின்னர் நேற்று நீதிவான் ஒத்தி வைத்த சிறைத்தண்டனையை விதித்தார். (ற-9)

ABI FASHION WORLD



நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு
எமது வாடிக்கையாளர்களுக்கு விசேட
விலைக்கழிவுகள்
15.12.2016 முதல் 31.12.2016 வரை

அனைத்து ஆடைத்
தெரிவுகளுக்கும் 30%வரையான
சிறப்பு விலைத்தள்ளுபடி!!

முந்துங்கள் ! தள்ளுபடி விலையில்
புடைவைகளை அள்ளிச்
செல்லுங்கள்.

+94 21 222 3738
abifashionworld
No. 112, K.K.S . Road, Jaffna.

ABI Fashion World
Largest Textile SHOWROOM in Jaffna

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின்
மாபெரும் மலிவு விற்பனை

Table mat - ~~2400/=~~ - 1550/=
Kitchen Rack - ~~2000/=~~ - 1450/=
Iron Board - ~~1300/=~~ - 990/=

மெத்தை ~~2600/=~~ 2250/=
பிரம்பு செற் ~~16500/=~~ 14750/=
லெதர் சோபா செற் (ஈபோ இலவசம்) ~~41400/=~~ 36500/=
6 கதிரை ரீப்போ ~~5500/=~~ 4000/=

ஸ்ரீல் அலுமாரி ~~10999/=~~ 8750/=
6X4 கட்டில் ~~10500/=~~ 8750/=
TV ஸ்டான்ட் ~~10700/=~~ 8500/=

இல.230, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி
சந்திக்கு இடையில்)
021 791 6911, 076 821 9415,
077 358 3879

British College of Higher Studies
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான

A1 IELTS Life Skills

இப்பாடநெறியானது எளிதாகக் கற்கக்கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகின்றது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி.

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான

IELTS (Academic / General)

ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்.

Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன்கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.
இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

Diploma in English 2½ Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி. உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English Course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாடநெறி.

வகுப்புகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாக (Audio & Video Visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்.
எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
Excellent Teacher's Panel & Individual Attention
கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15, Sirambiyadi Lane, (Off Stanley Road,) Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel: 021 222 4550 Hotline: 077 730 4545

நற்செய்தி
ஆரம்பப் பிரிவு மாணவர்களின்
பெற்றோர்களே! ஆசிரியர்களே!

15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உடைய கொழும்பு முன்னணி ஆசிரியர்கள் குழுவால் தயாரிக்கப்பட்ட கீழ்வரும் சுயநிலை வழிகாட்டல் கையேடுகள் பிரமாண்டமான ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளன.

* தரம் - 2 குட்டிச்சுடர் (ஜனவரி மாதம் தரம் - 2க்கு வகுப்பேறவுள்ள மாணவர்களுக்கானது.) விலை 60/=
* தரம் - 3 புலமைச்சுடர் (2019ஆம் ஆண்டு பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கானது.) விலை 25/=
* தரம் - 4 புலமைச்சுடர் (2018ஆம் ஆண்டு பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கானது.) விலை 40/=
* தரம் - 5 புலமைச்சுடர் (2017ஆம் ஆண்டு பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கானது.) விலை 40/=
* டிசம்பர் மாத ஒளிஅரசி (திருத்தர் சேவையுடன் கூடிய பரீட்சையை தாங்கிய ஒளிஅரசி) விலை 75/=

உங்கள் பிரதிகளை சகல பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக தொடர்புகளுக்கு - 0776569617
தலைமை அலுவலகம் - 0714114990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலைகளின் கதைக்கதம்ப விழா

யாழ்ப்பாணம், டிச.16
ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் 42ஆவது ஆண்டு நிறைவு மற்றும் மழலைகளின் கலைக்கதம்ப விழா நிகழ்வுகள் நாளை பி.ப. 2 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் சுபாசினி மதியழகன் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## தர்மாசிரியர் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 16
அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இந்து தர்மாசிரியர் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுல அலுவலகத்தில் நடைபெறும் என்று குருகுல அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலக்சுமி அறிவித்தார்.
இந்தக் கருத்தரங்கில், 'வேதங்களும் ஆகமங்களும்' எனும் தலைப்பில் சைவப் புலவர் நித்திய தசிதரனும், 'சமய ஞானிகளும் பெரியார்களும்' எனும் தலைப்பில் கலாபூசணம் சிவகாமலிங்கமும், 'சைவசமய வரலாறு' எனும் தலைப்பில் கு.பாலசண்முகனும், 'பன்னிரு திருமுறைகள்' எனும் தலைப்பில் திருமதி மா. அனந்தலக்சுமியும், 'கோயில்களும் கலைகளும்' எனும் தலைப்பில் கந்த. சத்தியதாசனும் விரிவுரையாற்றவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

## மார்க்சிய குழுவின் கருத்துரை நாளை

யாழ்ப்பாணம், டிச. 16
யாழ். சர்வதேச மார்க்சிய குழுவின் கருத்துரை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள டி. எம்.ஐ கல்வி நிறுவனத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
ஏ.சி.ஜோர்ச் தலைமையில், சமதர்ம இயக்கத்தின் 81ஆவது அகவை நிரந்தர புரட்சியிலிருந்து வர்க்க சமரசம் வரை எனும் தலைப்பில் இந்தக் கருத்துரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## 60 ரூபாவுக்கு அ சியின் விலை வருமாம்

கொழும்பு, டிச. 16
இரண்டு மாதங்களுக்குள் ஒரு கிலோ கிராம் அரிசி 60 ரூபாவுக்கு விற்பனை செய்ய எதிர்பார்ப்பதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
அரசின் வாழ்க்கைச் செலவுக் குழுவின் கூட்டத்தின் போது சந்தையில் காணப்படுகின்ற அரிசி விலை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக அவர் கூறினார்.
இந்தமுறை உயர் பருவகாலத்தில் தேவையான மழை பெய்யவில்லை என்பதனால் அடுத்த ஆண்டு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. அந்த நிலைமையை எதிர்கொள்வதற்காக இருக்கின்ற நெற்தொகையை பாதுகாக்க வேண்டும் என்பதால் வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய அரசு தீர்மானித்திருப்பதாக அமைச்சர் அமரவீர கூறினார். (வ)


### திருவாதிரை உற்சவத்துக்கு

# கே.கே.எஸ் – தமிழகம் இடையே கப்பல் சேவை

யாழ்ப்பாணம், டிச. 16
யாழ்ப்பாணம், காங்கேசன்துறையிலிருந்து தமிழகம் காரைக்காலுக்கு எதிர்வரும் ஜனவரி 13ஆம் திகதி கப்பல் சேவையை நடத்த கொழும்பு அயலுறவு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று யாழ்ப்பாணம் சிவசேனை அமைப்பு அறிவித்துள்ளது.
இந்துக்களின் திருநாளான திருவாதிரை உற்சவத்துக்கு சிதம்பரம் ஆலயத்துக்கு செல்ல விரும்பும் அடியவர்கள் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு அந்த அமைப்புக் கேட்டுள்ளது.
'இந்துக்களினால் கடைப்பிடிக்கப்படும் மார்கழி திருவெம்பாவை உற்சவத்தினை இலங்கை வாழ் சைவ மக்கள் சிதம்பரம் நடராஜப் பெருமானை தரிசிப்பதற்கு டிசெம்பர் 27ஆம் திகதி முதல் ஜனவரி 13ஆம் திகதி வரை காங்கேசன்துறையிலிருந்து தமிழகம் நாகப்பட்டினத்துக்கு கப்பல் சேவையை நடத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக கொழும்பு அயலுறவு அமைச்சிடம் கோரியிருந்தோம்.
எமது கோரிக்கையை ஏற்று புதுடில்லி அரசுடன்பேசிகாங்கேசன்துறையிலிருந்து காரைக்காலுக்கு கப்பல் சேவையை நடத்த அயலுறவு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடனும் நாம் கலந்துரையாடியுள்ளோம்.
சிவசேனைப் பொறுப்பாளர் காண்டீபனுடன் 0770870414 என்ற அலைபேசியில் தொடர்பு கொண்டு சிதம்பரம் செல்ல விரும்புபவர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்யுங்கள்' என்று சிவசேனை அமைப்பு தெரிவித்துள்ளது. (வ)

## அனுமதியின்றி ஆற்று மணலை ஏற்றிய நால்வர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், டிச. 16
முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட வெவ்வேறு இடங்களில் சட்ட விரோதமாக ஆற்று மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்த 4 உழவியந்திரங்களும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.
'மாங்குளம் பொலிஸ் நிலைய முதன்மை பொலிஸ் பரிசோதகர் பிரியதர்சன தலைமையிலான அணியினர் நேற்று மதியம் 12 மணியளவில் வன்னிவிளாங்குளம் பகுதியில் வைத்து 2 உழவியந்திரங்களில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற 2 பேரைக் கைது செய்தனர். மாங்குளம் பொலிஸ் நிலைய முதன்மைப் பொலிஸ் பரிசோதகர் உதய குமார தலைமையிலான அணியினர் நேற்று மாலை 4 மணியளவில் பனிச்சங்குளம் பகுதியில் வைத்து உழவியந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற ஒருவரைக் கைது செய்தனர். மாங்குளம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் லால் தலைமையிலான அணியினர் நேற்று மாலை 5 மணியளவில் பனிச்சன்குளம் பகுதியில் வைத்து உழவியந்திரத்தில் ஆற்று மணலை சட்டவிரோதமாக ஏற்றிச் சென்றவரைக் கைது செய்தனர்.
சந்தேக நபர்கள் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவர். அத்துடன் சான்றுப்பொருள்களான உழவு இயந்திரங்களும் மன்றில் பாரப்படுத்தப்படும்' என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,7)



ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள கோத்தபாய, யசூசி அகாசியை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

## இலங்கை வங்கியின் சேவை ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 16
இலங்கை வங்கி அறிமுகப்படுத்தியுள்ள இலத்திரனியல் சேவையின் ஒரு அங்கமான ஸ்மாட் சோன் (B.O.C Smart Zone) சேவை ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கி கிளையில் இன்று முற்பகல் 9 மணியளவில் வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் எம்.ஜெ.பிரபாகரனால் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்தத்தொகுதியானது தன்னியக்க பணவைப்பு,பண மீளப்பெறல்,வசதிகளை கொண்ட இயந்திரமாகும். இதன் ஊடாக வாடிக்கையாளர்கள் வருடத்தின் அனைத்து நாள்களிலும் 24 மணி நேரமும் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

## ஊடகங்களிடம் பெரும் பொறுப்பு

### கூறுகிறார் பிரதியமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ. 16
உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் நாட்டில் புதிய கருத்தாடலை உருவாக்க வேண்டிய பொறுப்பு தற்கால ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக பிரதியமைச்சர் கருணாரட்ண பரணவித்தாரன தெரிவித்தார்.
தேசிய வானொலியில் நேற்று இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே பிரதியமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
அரசு ஊடகங்களைக் கட்டுப்படுத்தாமல் சுதந்திர ஊடகத்தை நாட்டில் உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறான பின்னணியில் தம்மை விட்டு விலகிச் சென்ற அரசியல் அதிகாரத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சிலர் நாட்டைப் பழைய நிலைக்குக் கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர். இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.
தற்போதைய சமகால நல்லாட்சி அரசு ஊடக சுதந்திரத்தை உயர்ந்தபட்ச அளவில் உறுதிப்படுத்தி அதைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.
ஊடகம் தொடர்பில் அரசு தெளிவான தூர சிந்தனையை கொண்டுள்ளது. இது நல்லாட்சி அரசு தேர்தலின்போது வழங்கிய உறுதிமொழியாகும். ஊடகங்கள் அரசியல் வாதிகளை விமர்சிக்கலாம். அரசியல்வாதிகளும் ஊடகங்களை விமர்சிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். எனினும் ஊடகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியல்வாதிகளுக்கு உரிமையில்லை. நாட்டில் ஊடகங்கள் கட்டுப்படுத்தப்படுவதாக எடுத்துக் கூறுவதற்குப் பல்வேறு நபர்களும் குழுக்களும் முயற்சித்து வருகின்றனர். அரசு நாட்டில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாத்து வருகின்றது. நாட்டின் ஆட்சிக்குத் தடை ஏற்படுத்த எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது - என்றார்.
இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலன்சூரிய கல்வியியலாளர்களின் கருத்துகள் மூலம் விரிவான ஊடகக் கலாசாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (த-5)

## வெளியீட்டு விழா

தெணியானின் 'ஏதனம்' நாவல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் பி.ப. 3.30 மணிக்கு கொற்றவத்தை பூமகள் சனசமூக பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் என்று தெணியான் இலக்கிய ஆர்வலர்கள் தெரிவித்தனர்.
இந் நிகழ்வு பி.கிருஸ்ணானந்தன் தலைமையில் நடை பெறும். (வ-10)

## அரச பயங்கரவாதம் தடுக்க முயன்றால் மக்களின் போராட்டங்கள் வலுப்பெறும்

### கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.16
மக்களின் ஜனநாயக போராட்டங்களை அரச பயங்கரவாதம் மூலம் தடுக்க முற்பட்டால் அரசுக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெறுவதை தடுக்க முடியாது.
இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரசிறி கஜதீர எச்சரித்தார்.
சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெரியளவிலான நிதிப் பிரச்சினைக்கு அரசு ஆளாகியுள்ளது. அதனால்தான் மக்கள் மீது பெரியளவில் சுமைகளை ஏற்றிவருகின்றது. இன்று வங்கிகளில் டொலர் இல்லை. அதனால் 30இலட்சம் டொலர் சிங்கப்பூரிடம் இருந்து கடனுக்கு பெற்றுக்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துவருவதாகதெரிவிக்கப்படுகின்றது.
அரசு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினையை தீர்த்துக்கொள்ள அரச வளங்களை தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதைத் தவிர வேறு திட்டங்கள் அரசிடம் இல்லை.
விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவதாக தெரிவித்து விவசாயிகளின் உரமானியத்துக்கு இம்முறை வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. அரசின் இந்த நடவடிக்கையால் விவசாயிகள் வெறுப்படைந்துள்ளனர். இதனால் சிறு விவசாய செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் தங்கள் தொழிலை விடும் நிலை ஏற்பட்டுள்ளது.
இவ்வாறு நாலா பக்கத்தாலும் மக்களை அரசு தாக்கும்போது அவர்கள் அரசுக்கு எதிராக வீதிக்கிறங்குவதைத் தடுக்க முடியாது. அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஏற்பட்ட பிரச்சினைக்கு காரணமும் அதுவாகும். அவர்களின் தொழிலுக்கு உத்தரவாதம் வழங்குமாறு தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.
இவ்வாறு பல துறைகளைச்சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் போது அவர்களைத் தடுப்பதற்கு பொலிஸ் அதிகாரத்தை பிரயோகிப்பதைத்தவிர அரசுக்கு வேறு வழியில்லை - என்றார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசு மாடுகளை கடத்திய இருவர் மாங்குளத்தில் கைது

முல்லைத்தீவு, மாங்குளத்தில் இரண்டு கறவைப் பசுக்களையும் கன்று ஒன்றையும் சட்டவிரோதமாக ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் 2 பேரைக் கைது செய்துள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றது. சிறிய வாகனத்தில் அவற்றை ஏற்றிச் சென்றபோது பொலிஸாரிடம் அவர்கள் சிக்கினர். கைது செய்யப்பட்டவர்கள் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-7)

## கசிப்பு உற்பத்தி மையம் பளையில் அழிப்பு

கிளிநொச்சி, பளை சஞ்சீவிக்காடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு 25 லீற்றர் கசிப்பும் ஒரு பரல் கோடாவும் கசிப்பு உற்பத்திப் பொருள்களும் கைப்பற்றப்பட்டதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். உற்பத்தி செய்யப்பட்ட நிலையில் தப்பிச் சென்றவர்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-6)

# வடக்கு மக்களுக்கு பொருத்து வீடுகளை வழங்குவதில் தீவிரம்

## மீளவும் விவரங்களைச் சேகரிக்க மீள்குடியேற்ற அமைச்சு திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில், வீடு இல்லாதவர்களுக்குப் பொருத்து வீடு வேண்டுமா? என்று கேட்டு பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதற்கு மீள்குடியேற்ற அமைச்சு மீண்டும் ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கூட்டத்துக்குச் சென்றிருந்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாவட்டச் செயலர்களை, கூட்டம் நிறைவடைந்த பின்னர் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தனது அமைச்சின் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார். அங்குவைத்து அவர் இந்த விடயத்தை அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

மாவட்ட ரீதியில் தேவையான வீட்டு விவரங்கள் அந்தந்த மாவட்டச் செயலர்களிடம் கேட்டு அறியப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 14 ஆயிரம் வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 13 ஆயிரம் வீடுகளும், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 30 ஆயிரம் வீடுகளும் தேவை என்று கண்டறியப்பட்டது.

வீடுகளைப் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் பொருத்து வீட்டின் மாதிரிகளைப் பகிரங்கமாக விளம்பரப்படுத்தி அந்த வீடுகளுக்கும் தேவையானவர்கள் விண்ணப்பிக்குமாறு கோரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொருத்து வீடானது வடக்கு மாகாணத்துக்குப் பொருத்தமற்றது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்திவரும் நிலையில், பொருத்து வீட்டுக்கான முன்னெடுப்புக்கள் மீள்குடியேற்ற அமைச்சினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. (வ-4,101)

## கசிப்பு உற்பத்தியை முறியடித்தனர் கிளி. பொலிஸார்

கிளிநொச்சி, டிசெ. 16

கிளிநொச்சி பெரியகுளம் இரட்டைப்பனைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை இயக்கி வந்த குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்



யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த உற்பத்தி நிலையத்திலிருந்து 55 லீற்றர் கசிப்பும், 674 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

'நேற்றுப் பிற்பகல் கிடைத்த தகவலின்படி குறித்த இடத்துக்குச் சென்று அவை மீட்கப்பட்டன. அங்கு காணப்பட்ட கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களும் மீட்கப்பட்டன. கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். அவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவர். சான்றுப் பொருள்களும் மன்றில் பாரப்படுத்தப்படும்' என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,34)

# குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்களுக்கு ஓய்வூதியத்திட்டம்

## வலியுறுத்தி மனுக் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்களுக்கு சிறப்பு ஓய்வூதியத்திட்டம் அல்லது அதற்குப் பதிலாக சிறப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டு அதனைப் பெறும் தகுதி எமக்கு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு 30 ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட அமரா குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியம் கோரிக்கை விடுத்தது.


பெண்கள் தலைமை தாங்கும்குடும்பங்களை வலுப்படுத்தல் நல்லிணக்கவழிமுறையின் முன்னேற்றப் பாதை என்ற தேசிய மாநாடு யாழ்ப்பாணத்திலுள்ள ரில்கோ விடுதியில் நேற்று நடைபெற்றது.



அதில் வடமேல் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் உதவிப்பணிப் பாளர் ரவீந்திர கருநாயக்க ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர். அந்த மாநாட்டில் குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றிணைந்த அமரா ஒன்றியம் அதிதிகளிடம் மனுவைக் கையளித்தது. அமராவில் 15 மாவட்டங்களைச் சேர்ந்த 30 ஆயிரம் பெண்கள் அங்கத்தவர்களாகவுள்ளனர். அவர்கள் வழங்கிய மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நாம் உழைப்பதற்கு அஞ்சுபவர்களல்ல. ஆனாலும் எமக்குரிய வாழ்வாதார முயற்சிகள் பொருத்தமானவையாக ஏற்படுத்தித்தரப்படவேண்டும். அதற்கான பயிற்சிகள், முதலீடுகள் ஏனையோரைப் போன்று எமக்கும் வழங்கப்படவேண்டும். உதவித்திட்டங்களில் வயது, பாரபட்ச நிலைமைகள் முதன்மையான காரணிகளாக நோக்கப்படுகின்றன. இவற்றுக்கான மாற்று வழிமுறைகள் கவனத்திற் கொள்ளப்படவேண்டும். சிறப்பு ஓய்வூதியத்திட்டம் அல்லது அதற்குப் பதிலாக சிறப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டு அதனைப் பெறும் தகுதி எமக்கு வழங்கப்படவேண்டும்.

பிள்ளைகளுக்கான சிறப்புக் கல்விச் சலுகைகளை, உளவியற் தேவைகள் குறித்து ஆற்றுப்படுத்தற் திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவேண்டும். சுகாதாரம், சத்துணவு, கலாசார உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட எங்களது உறவுகளின் உண்மை நிலைமை பற்றி எமக்குக் காலதாமதமின்றி அறியத் தரப்பட வேண்டும். பக்கச் சார்பின்றி ஆராய்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவேண்டும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட பொருத்தமான பரிந்துரைகள் விரைவாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். எங்கள் சமூக, பொருளாதார, அரசியற் பண்பாட்டு உரிமைகளை நாம் அனுபவிக்கும் விதத்தில் எங்கள் வேண்டுகோள்களை செவிமடுத்து எங்களது வாழ்வில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்துமாறு வேண்டிக் கொள்கின்றோம். நிலைமாறுகால நீதியை நாம்பெற்றுக்கொள்ள உதவுமாறு அனைத்துத் தரப்பினரையும் 30 ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியத்தினராகிய நாம் கோருகின்றோம் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4,7)



## பொலிஸாரின் சிறப்பான சேவை முல்லை. மக்களுக்கு கிடைக்கும்

### வன்னி எஸ்.எஸ்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 16

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை நன்கு அறிவேன். அவர்களுக்கு எம்மாலான சிறந்த சேவையை எமது திணைக்களம் வழங்கி வருகிறது என்று முல்லைத்தீவு, கிளிநொச்சி பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ்வவி வெலிக்கன்ன தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தினரால் முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த ஒருமாத காலமாக நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் இறுதிநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த ரட்ணசிங்க தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், அவர் இதனைத் தெரிவித்தார்.

நான் பார்த்த அளவில் கல்வியோடு கலைகளையும் கற்று மிகவும் சிறந்த கலைநிகழ்வுகளை நடத்தியுள்ளனர். மாணவச் செல்வங்களின் கலை கலாசாரம் உயர வாழ்த்துகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்கு முல்லைத்தீவுப் பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கத்தவத்த, பொலிஸ் அதிகாரி ஜெ.பி.டி.ஜயசிங்க, மாங்குளம், புதுக்குடியிருப்பு பொலிஸ் அதிகாரிகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனிருத்தனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், 6 பாடசாலைகளுக்கு குறிப்பிட்டளவு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (வ-4,7,500)

## மரக்குற்றிகளை கடத்தியவர் கைது

வவுனியா, டிசெ.16

வவுனியா, ஓமந்தை கல்லுபோட்டகுளம் காட்டுப் பகுதியில் மரக்கடத்திலில் ஈடு பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

'அவர் நேற்றுக்காலை 7.30 அளவில் 42 பனை மரக்குற்றிகளை ஓமந்தைக்குக் கடத்த முற்பட்டார். அது தொடர்பில் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் 26 வயதுடைய குறித்த இளைஞரைக் கைதுசெய்ததுடன், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட மரங்களின் பெறுமதி சுமார் ஒன்றரை லட்சம் ரூபா. சந்தேகநபர் வவுனியா நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்' என்று பொலிஸார் தெரிவித்தார். (வ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வெள்ளம் பாதித்தோருக்கு நிவாரண உதவித் தொகை

தென்மராட்சி, டிசெ.16
தென்மராட்சி பிரதேசத்தில் 2014/2015 ஆண்டில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவித் தொகைகள் நேற்று பிரதேச செயலக இடர் முகாமைத்துவப் பிரிவால் பாதிக்கப்பட்ட மக்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டன.
பாதிக்கப்பட்ட 536 குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகைகள் வீட்டின் பாதிப்புக்கேற்ற வகையில் வழங்கப்பட்டன.
மழை வெள்ளத்தால் வீடு முழுமையான சேதமடைந்த குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும், பகுதி சேதமடைந்தவர் களுக்கு 50 ஆயிரம் ரூபா வரையும் உரிய படிவங்களில் கையொப் பம் பெறப்பட்டு வங்கிக் கணக்குக்கு கொடுப்பனவின் ஒரு பகுதி அனுப்பி வைக்கப் பட்டது. கொடுப்பனவு மூலம் பாதிப்புகள் நிவர்த்தி செய்யும் பட்சத்தில் கட்டம் கட்டமாக மிகுதித் தொகை பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலி டப்படும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-9)

# கலாசார விழா நாளை

யாழ்ப்பாணம், டிசெ. 16
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் கலாசார விழா நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.
வவுனியா பிரதேச கலாசார பேரவையின் உபதலைவர் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நாளை சனிக்கிழமை முதல் நாள் நிகழ்வு நடைபெறவுள்ளது.
அதில் முதன்மை விருந்தினராக வவுனியா மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஸ்குமாரும், சிறப்பு விருந்தினராக வவுனியா வர்த்தகர் சங்கத்தின் தலைவர் கே.இராஜலிங் கமும் கலந்து கொள்ளவர்.
நிகழ்வில் வவுனியா பிரதேச தொல்லியல் வரலாறு என்ற தலைப்பில் தொல்லியல் ஆய்வாளர் அருணா செல்லத்துரை, வவுனியா பிரதேச கிராமிய கலைகள் என்ற தலைப்பில் நா.தியாகராஜாவும், வவுனியா பிரதேசத்தின் நாட்டுக்கூத்தும் நாட்டாரிசையும் என்ற தலைப்பில் சி.தமயந்தியும், வவுனியா பிரதேசத்தின் ஊர்ப்பெயராய்வு என்ற தலைப்பில் ஞா.ஜெகநாதனும், வவுனியா பிரதேசத்தின் பண்பாட்டு வழக்காறுகள் என்ற தலைப்பில் சு.ஜெயச்சந்திரனும் உரை நிகழ்த்தவுள்ளனர்.
வவுனியா தமிழ் மாமன்றம் எதிர்கால வாழ்வுக்காக தமிழர்கள் மீட்டெடுக்க வேண்டியவை என்ற தலைப்பில் சுழலும் சொற்போரும், இவர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என ஆசைப்படுகின்றோம் என்ற தலைப்பில் கவியரங்கமும், இலங்கை வேந்தனின் புகழ்கூறுவதில் விஞ்சி நிற்பது இராமாயணமே என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது. வவுனியா பிரதேச செய லாளர் கா. உதயராஜா தலைமையில் நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ் வுக்கு முதன்மை விருந்தினராக கைத் தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாட் பதியு தீன் கலந்து கொள்ளவுள்ளார்.
இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ற-10, 402)

## அலுவலக திறப்பு விழா

முல்லைத்தீவு உடையார்கட்டு கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான ஒளிரும் வாழ்வு, அலுவலக திறப்பு விழாவும், பன்னாட்டு வலுவிழந்தோர் தின விழா நாளை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது என்று 'ஒளிரும் வாழ்வு' அமைப்பின் செயலாளர் தெரிவித்தார்.
நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் நடராஜன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-16)


## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் பிரதம பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் தி.கலைச்செல்வன் அவர்களின் பாசமிகு தந்தையார்
**இளையதம்பி திருநாவுக்கரசு**
அவர்கள் 27.11.2016 அன்று சிவபதமடைந்து விட்டார். அவரின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், கோப்பாய்.**

## சிவலோக பிராப்தியடையப் பிரார்த்திக்கின்றோம்



எமது ஆரம்ப வித்தியா குருவும் அன்புக்கும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய அன்னை
**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**
**(இளைப்பாறிய ஆசிரியை)**
அவர்களின் மறைவு குறித்து கவலையும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தவர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
**இந்து மதகுருபீடாதிபதி**
**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள், குடும்பத்தவர்கள்.**
(ஜே.6885) (13.18) **சுதுமலை, மானிப்பாய்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது விழிப்புல வலுவிழந்தோர் இல்லமாகிய வாழ்வகத்தின் மிக நெருங்கிய ஆதரவாளரான செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறுதிருமுருகன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**
(இளைப்பாறிய ஆசிரியர்)
அவர்களின் பிரிவு குறித்து வேதனையடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆத்மாசாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
***வாழ்வக சமூகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.***

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களினதும் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறுதிருமுருகன் அவர்களினதும் அன்புத் தாயார்
**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**
அவர்கள்இயற்கையெய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரது ஆத்மா அம்பாளின் திருவடிகளில் சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
***ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், கீரிமலை.***

## துயர் பகிர்வு



எமது சங்கத்தின் மகளிர் குழுத் தலைவியாக பல ஆண்டுகள் அளப்பரிய சேவைகள் புரிந்த
**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அவரது குல தெய்வமான மருதனார்மடம் பல்லப்ப வைரவரைப் பிரார்த்திக்கிறோம்.
**பணிப்பாளர்கள், பணியாளர்கள்.**
**ப.நோ.கூட்டுறவுச்சங்கம்.**
**சுன்னாகம்.** (C 27031) (22.18)

## மரண அறிவித்தல்

**நடராஜா சோமஸ்கந்தராஜா (சோமாஸ்)**
முகாமையாளர் NATURE COLOURS

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சோமஸ்கந்தராஜா 14.12.2016 புதன்கிழமை சிவபதம் எய்தினார்.
அன்னார் அராலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராஜா-பார்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் - நாகம்பாள் தம்பதியினரின் மருமகனும் அம்பிகாவின் (C.M.L.T NEW DELMON HOSPITAL) அன்புக் கணவரும் நந்தினி, நித்தியகுமார், நளினி, ராஜ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலா, விஸ்வகாந்தன், ஸ்ரீ மகிழ்காந்தன், ரேணுகா, ஜெயக்குமார், நவலட்சுமி, குலசிங்கம், லதா ஆகியோரின் மைத்துனரும் சாயி ஜெகன், பிரணவன், டிலக்ஷன், சுபன் ஆகியோரின் பெரியப்பாவும் அகிலனின் சித்தப்பாவும் தனுஷ், தர்ஷிகா, யகுலன், கயானன், சந்தியா, வசீகரன் ஆகியோரின் அன்பு மாமாவும் காலஞ்சென்ற இராஜதேவா, சுப்பிரமணியம், வனஜா, இரஞ்சினி ஆகியோரின் சகலனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 18.12.2016 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
**மனைவி, சகோதரர்கள்**
011 272 8507, 021 300 8393

## மரண அறிவித்தல்

தோற்றம்
01
.
08
.
1920



மறைவு
13
.
12
.
2016

**சின்னர் கணபதிப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற ஓடலியார் - நெடுந்தீவு கிழக்கு)

யாழ். நெடுந்தீவு கிழக்கு, 15 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.24, றக்காவீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னர் கணபதிப்பிள்ளை 13.12.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னமுத்துவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான இராமநாதர், நாகமுத்து, செல்லையா மற்றும் பூவிலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, பசுபதி மற்றும் மங்களம், காலஞ்சென்றவர்களான மலர், பிறிஜிற்றம்மா, நோபேட், பெனடிற், வித்துவான் அந்தோனிப்பிள்ளை, சவிரிமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனரும், அந்தோனிப்பிள்ளை (ஜேர்மனி), யேசுதாசன் (விசுவமடு), மரியசீலன் (றக்காவீதி, யாழ்ப்பாணம்), அமலபுஸ்பம் (யாழ்ப்பாணம்), அமலராணி (கனடா), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கமலர் (ஜேர்மனி), மனோறஞ்சிதம் (விசுவமடு), தனலட்சுமி (யாழ்ப்பாணம்), குலசிங்கம் (ஜேர்மனி), ஜெயசோதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், வாசுகி (ஜேர்மனி), ஸ்டாலின் (பொறியியலாளர்- ஜேர்மனி), யூலியஸ் (பொறியியலாளர்), ஜனகா (பேராதனை பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற ஜனனி மற்றும் இளங்குமரன் (விசுவமடு மகா வித்தியாலயம் உயர்தர மாணவன்), விஜிதா (கனடா), கவிதா (கனடா), றுசானி (கனடா), றூசோ (கனடா), லீசா (கனடா), அபிஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், டாறியோ, யாறோன், ஜெஸ்டன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இல. 24, றக்காவீதி, யாழ்ப்பாணத்தில் இருந்து 17.12.2016 சனிக்கிழமை காலை 8 மணியளவில் நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 10 மணியளவில் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் காட்டுராமன் சல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.24, றக்காவீதி,**
**யாழ்ப்பாணம்.**
தகவல்:
**குடும்பத்தினர்**

யேசுதாசன் - 077 025 5934
மரியசீலன் - 077 967 2457
அமலபுஸ்பம் - 021 320 1032
(ஜே.6888 (13.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்புப் பழக்கத்தால் ஆளுமை அதிகரிக்கும்

## வவு. தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 16

எங்களது வாசிப்புப் பழக்கத்தை தொலைக்காட்சிகள் தடுக்கின்றன. நாம் இப்போது கேட்பதற்கும் பார்ப்பதற்கும் பழகிவிட்டோம். வாசிப்பதை மறந்து விட்டோம். வாசிப்புப் பழக்கம் மாணவர்களை ஆளுமை மிக்கவர்களாக மாற்றும்.

இவ்வாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கல்வி ஒருவரது நடத்தை ஊடாக வெளியே தெரியும். கல்வியை வழங்குவதற்கு ஒரு மொழி இருக்கின்றது. மொழி இல்லை என்றால் கல்வி இல்லை. மொழி பிரதானமானது. மொழியை வெளிக் காட்டுவதற்குரிய விடயம் வாசிப்பு. அதன் ஊடாகவே அறிவு உட்செல்கின்றது. வாசிப்பதன் ஊடாக மாணவர்கள் அந்த அறிவைப் பெற்றுக் கொள்கின்றார்கள். அனுபவத்தைப் பெற்றுக்கொள்கின்றார்கள். வாசிக்கும்போது நல்ல விடயங்கள் எங்களை அறியாமலே மனதில் பதிந்து விடும். மனிதர்கள் நாங்கள் மாத்திரமே வாசிக்கின்றோம். குறியீடுகளை அடையாளம் கண்டு அதற்கு ஒலிகளைப் பொருத்தி எழுத்துக்களையும் குறியீடுகளையும் சொற்களாக்கி வசனங்களாக்கி, வசனங்களுக்கு இடையே கருத்துக்களை பொதிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த வளம் மனிதர்களுக்கு மட்டுமே உள்ள வளம். நாங்கள் நல்ல மனிதர்களாக மானிடப் பிறவிகளாக இருந்தால் நாங்கள் வாசிக்க வேண்டும். வாசிப்பு அனுபவம் என்பது எங்களுடைய கற்பனை வளங்களைக் கூட்டும்.

தொலைக்காட்சியும், தொலைக்காட்சி நிகழ்சிகளும்தான் எங்களுடைய வாசிப்பைத் தடுகின்றன. எங்களுடைய உடலில் உள்ள உறுப்புக்கள் அனைத்தையும் பயன்படுத்தவேண்டும். அதனைப்பயன்படுத்தாமல் விட்டால் அது பயனற்றுப் போய்விடும். வாசிக்காமல் விட்டால் எங்களுக்கு குரலே வராது. மௌனமாக வாசிப்பது என்பது மற்றவர்களை ஏமாற்றுவது. மாணவர்கள் உரத்து வாசிக்க வேண்டும். வாசிப்பு என்பது சிறந்த ஆற்றுகை.

மாணவர்கள் சத்தமாக வாசிப்பதன் ஊடாகத்தான் அவர்கள் தங்களை ஆளுமை மிக்கவர்களாக மாற்றிக் கொள்ள முடியும் - என்றார். (ற-5)



மண்டைதீவில் அமையவுள்ள சுற்றுச்சூழல் சுற்றுலா மையத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று முன்தினம் பார்வையிட்டார். வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மண்டைதீவில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வீதிக்கு அருகில் இந்த மையம் அமையவுள்ளது. சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ அமைச்சால் 46 மில்லியன் ரூபா நிதி இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுச் சூழல் சுற்றுலா மையம் அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ற-5)




அரச சேவை அலுவலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட தேசியத் திறன் போட்டியில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. அதற்கான வெற்றிக் கேடயம் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளிக்கப்பட்டது. (ற-5,35)

# வலி.வடக்கின் கரையோரங்களை மீனவர் பாவனைக்கு விடுவியுங்கள்

## யாழ். கட்டளைத் தளபதியிடம் மாவை. எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 16

வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் கரையோரப் பிரதேசங்களை மீனவர்களின் வாழ்வாதாரத்துக்காக அனுமதிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மகேஸ் சேனநாயக்காவை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

பலாலி இராணுவப் படைத் தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

காங்கேசன்துறையை அண்மித்த பகுதிகளில் மக்களின் வாழ்விடங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய வாழ்வாதரத்தை மேம்படுத்துவதற்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கடற்கரைப் பிரதேசம், துறைமுகம், அவற்றுக்கு செல்வதற்கான பாதைகள் எல்லாம் பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டினுள்ளே இருக்கின்றன. மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதிகளை விடுவிக்க வேண்டும்.

காங்கேசன்துறையில் உள்ள மாம்பிராஞ், மாங்கொல்லைப் பகுதிகளில் உள்ள 120 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதன் மூலம் 400 குடும்பங்கள் உடன் மீளக்குடியமர முடியும். விடுவிக்கப்பட்ட தையிட்டிக் கிராமத்தின் எஞ்சிய சிறுபகுதியான வள்ளுவர்புரம் விடுவிக்கப்பட வேண்டும். மீனவர்களின் முக்கிய தொழில் மையமாக விளங்கிய மயிலிட்டித் துறைமுகப் பகுதி விடுவிக்கப்பட்டாலே குடாநாட்டில் உள்ள முகாம்களின் அரைவாசியை மூட முடியும்.

பலாலி வடக்கில் விடுவிக்கப்பட்ட பிரதேச மக்கள் உடனடியாகவே தமது பகுதிகளை துப்பரவு செய்து வீடுகளையும் அமைத்துள்ளனர். ஆனால் குடியமரத் தயக்கம் காண்பிக்கின்றனர். அந்தப் பகுதியில் குடியமர வரும் 150 குடும்பங்களிலும் உள்ள சிறுவர்கள் அவர்களது கல்விக்காக 10 கிலோ மீற்றர் தூரம் அலைய வேண்டியுள்ளமையே அதற்குக் காரணம்.

அவர்களின் குடியிருப்புகளுக்கு அருகில் 400 மீற்றர் தூரத்தில் உள்ள மிகப் பெரும் பாடசாலை இராணுவத்தினரின்

> “ மீனவர்களின் முக்கிய தொழில் மையமாக விளங்கிய மயிலிட்டித் துறைமுகப் பகுதி விடுவிக்கப்பட்டாலே குடாநாட்டில் உள்ள முகாம் களின் அரைவாசியை மூட முடியும்.

பிடியில் உள்ளது. மாணவர்களின் நன்மை கருதி அந்தப் பாடசாலையை விடுவிக்க இராணுவத்தினர் முன்வர வேண்டும் - என நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் சாதகமாக ஆராயப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கும் ஏற்ற ஒழுங்குகள் விரைவில் செய்யப்படும் என்று கட்டளைத் தளபதி மகேஸ் சேனநாயக்கா தெரிவித்தார். (ற-5,101)

## மாணவர்களுக்கு ஏற்றாற்போன்று போக்குவரத்தில் நேர மாற்றங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடக்கு மாகாணத்தின் புதிய பாடசாலை ஆரம்ப நேரத்துக்கு அமைவாக போக்குவரத்துச் சேவைகள் தீவகத்திலிருந்து வழங்கப்படும்.

இவ்வாறு வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இ.அங்கஜன், சி.சிறீதரன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது. அதில் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

வடக்கு மாகாணப் பாடசாலைகள் ஜனவரி மாதத்திலிருந்து காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. தீவகத்தில் இருந்து நகருக்குச் செல்லும் பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்துக்குச் செல்வதற்கு ஏற்ற வகையில் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிநிதிகள், பாடசாலை நேர மாற்றத்துக்கு ஏற்றால் போல் பேருந்து சேவைகளின் நேரம் மாற்றியமைக்கப்படும் என்று தெரிவித்தனர். (ற-5)

# சோலை வரி நிலுவை வவுனியாவில் 40 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், டிசெ. 16

வவுனியா நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் 40 மில்லியன் ரூபா சோலை வரி நிலுவையாக உள்ளது என்று தெரிவித்தார் வவுனியா நகர சபைச் செயலாளர் ஆர். தயாபரன்.

கடந்த காலங்களில் செலுத்தப்படாத சோலை வரிகளாகக் கிட்டத்தட்ட 40 மில்லியன் ரூபாவுக்கு மேல் உள்ளது. அவற்றை அறவிடுவதற்காக தற்போது உத்தியோகத்தர்கள், நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் வீடு வீடாகச் சென்று வசூலித்து வருகின்றனர். கடந்த சில தினங்களாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. பொதுமக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த நிலுவைப் பணம் கிடைக்கும் பட்சத்தில் வவுனியா நகரை மேலும் மேம்படுத்த முடியும். சோலை வரியைச் செலுத்தும் கால அவகாசம்நீடிக்கப்பட்டுள்ளது. சோலை வரி செலுத்தத்தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் சத்துணவு பொதி வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.16

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் கர்ப்பிணிகளுக்கான டிசெம்பர் மாத சந்துணவுப் பொதிகளை விநியோகிக்கின்றது.

பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட சத்துணவுக்கான முத்திரைக்கு ஒதுக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் ஊடாகப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. கர்ப்பிணிகளுக்கு மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த சத்துணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. (ற-17)

# ரின்களில் பனங் கள்

யாழ்ப்பாணம்,டிசெ.16

வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பனங் கள்ளை ரின்களில் அடைத்து ஏற்றுமதி செய்யத் தீர்மானித்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் இந்தப் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான இயந்திர சாதனங்களைத் தருவிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சமாசத் தலைவர் தெரிவித்தார்.

ரின்களில் அடைக்கப்படும் கள் தெற்கு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். தற்போது இந்த பனங் கள் போத்தலில் அடைக்கப்பட்டே சந்தைப்படுத்தப்படுகின்றது. (ற-17)

# சுகாதாரத்துக்கு ஒவ்வாத இறைச்சி விற்றவர்கள் மீது வழக்கு

யாழ்ப்பாணம், டிசெ.16

சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியின்றி வெட்டப்பட்ட சுகாதாரத்துக்கு ஒவ்வாத மாட்டிறைச்சியை விற்பனை செய்த இருவரைதலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் நகர்ப் பகுதியிலுள்ள மாட்டிறைச்சிக் கடையொன்றில் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலை அடுத்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அ.சுஞ்ஜீவன் நேற்று முன்தினம் அங்கு சோதனை மேற்கொண்டார்.

கடையிலிருந்த 18 கிலோ சுகாதாரத்துக்கு ஒவ்வாத இறைச் சியைக் கைப்பற்றி ஊர்காவற் றுறை நீதிமன்றத்தில் ஒப்படைத்த சுகாதாரப் பரிசோதகர் கடை முதலாளிக்கும் விற்பனையாள ருக்கும் எதிராக நிதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். (ற-115)



புதிய அரசமைப்பில் இளைஞர்களின் பங்களிப்பு தொடர்பான விரிவுரைகளும், கலந்துரையாடலும் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை வவுனியா மாவட்டச் செயலரின் கேட்போர் கூடத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஒழுங்கமைப்பில் நடத்தப்பட்டது. அதில் வளவாளர்களாக யாழ். பல்கலைக் கழகத்தின் சட்ட பீட விரிவுரையாளர் திருமதி. கோ.மதன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வட மாகாண சபையின் எதிர் கட்சித் தலைவர் சி.தவராஜா ஆகியோர் விரிவுரையாற்றினர். கருத்துகள் அறியும் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (ற)

# கட்டாக்காலி கால்நடைகளால் அழிவடையும் நெற்செய்கை

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வேலணை விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.16

கடந்த ஆண்டை விட அதிகளவான ஏக்கரில் நெற் பயிர்செய்கையை மேற்கொண்டுள்ளோம். கட்டாக்காலி கால்நடைகளால் தொடர்ந்தும் அழிவு ஏற்படுகின்றது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதிலேயே இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு போன்ற பிரதேசங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. கடந்த காலங்களை விட இந்த ஆண்டு அதிகளவிலான ஏக்கரில் நெற் செய்கையும் மேற்கொண்டுள்ளோம்.

கட்டாக்காலி கால்நடைகளால் எமது நெற்செய்கை நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. உரிய விளைச்சலை பெற முடியுமோ தெரியவில்லை. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.- என்று மக்களும், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்தனர்.

இணைத் தலைவர்களான, நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் மற்றும் சி.சிறீதரன் ஆகியோர் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்தனர்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.விந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-5)

# உர மானியக் கொடுப்பனவு: 4 மாவட்டங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி உள்ளிட்ட 4 மாவட்டங்களுக்கு மானிய உரத்துக்குப் பதிலான பணக் கொடுப்பனவுப் பட்டியல் அனுமதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. விவசாயிகளுக்கு மானிய உரம் இதுவரை காலமும் வழங்கப்பட்டது. தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. மானிய உரத்துக்குப் பதிலாக ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. ஒரு விவசாயி அதி உச்சமாக 5 ஏக்கருக்கான மானிய உரப் பணத்தைக் கோர முடியும்.

இந்த நடைமுறை பின்பற்றத் தொடங்கியதன் பின்னரான காலபோக நெற்செய்கை தற்போதே மேற்கொள்ளப்படுகின்றது. புதிய நடைமுறையின் கீழான பண விநியோகத்துக்காக சகல மாவட்டங்களிலும் உள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாக தகவல்கள், பெரும்பாக உத்தியோகத்தர்களால் திரட்டப்பட்டது. சகல மாவட்டங்களினதும் பட்டியல் கமநலசேவைகள் திணைக்களத்துக்குச் சமர்பிக்கப்பட்டது.

சமர்பிக்கப்பட்ட சகல மாவட்டங்களினதும் பெயர்ப் பட்டியல் சீர் செய்யப்பட்டு 4 மாவட்டங்களின் கொடுப்பனவுகள் முதல் கட்டமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக அனுமதிக்கப்பட்ட பட்டியலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. அனுமதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கான கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படும் என்று தெரியவருகின்றது. (ற-5,101)

# வலி. தென்மேற்கில் பரவுகின்றது டெங்கு

## தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

யாழ்ப்பாணம், டிசெ.16

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றுக்குள்ளான இருவர் இனங்காணப்பட்டதை அடுத்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளனர்.

சுகாதாரப் பகுதியினர் நுளம்புக் குடம்பிகளை அழிக்கும் வகையில் மருந்துவிசிறும்நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் ஏற்கனவே சாவற்கட்டு, ஆனைக்கோட்டை, மானிப்பாய், உயரப்புலம் ஆகிய இடங்களில் டெங்குத் தொற்றுக்குள்ளான 45 பேர் இனங்காணப்பட்டனர். அந்தப் பகுதியில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மக்கள் மத்தியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதுடன், குறிப்பிட்ட பகுதியில் புகையூட்டலும்மேற்கொள்ளப்பட்டன.

சாவற்கட்டுப் பகுதியில் நேற்று முன்தினமும் இருவர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அந்தப் பகுதியில் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் அந்தப் பகுதியிலுள்ள ஜாவில் குளத்தில் உற்பத்தியாயிருக்கும் நுளம்புக்குடம்பிகளைஅழிக்கும்வகையில் மருந்து விசிறு கின்றனர்.

சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் பங்கெடுத்துள்ளனர்.

அதேவேளை- நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 15 நாள்களில் 11 பேர்டெங்குத்தொற்றுக்குள்ளாகியுள்ளனர். வீடுகளில் நடத்தப்பட்ட சோதனையில் நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுவான சூழலைக் கொண்டிருந்த குடியிருப்பாளர்கள் இருவருக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ற-115)

# தேநீர் இடைவேளையுடன் மாயமாகும் எம்.பீ.சிக்கள்

## வடக்கு அவைத் தலைவர் கவலை

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடக்கு மாகாண சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் சபை அமர்வு நாள்களில் தேநீர் இடைவேளையுடன் வெளியேறிவிடுகின்றனர்.

இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 69 ஆவது அமர்வு நேற்று முன்தினம் கைதடி பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது-

சபை உறுப்பினர்களில் சிலர் தேநீர் இடைவேளையுடன் அவையில் காணாமற் போகின்றனர். மதிய உணவு விடுகையின் பின்னர் அநேகமான உறுப்பினர்கள் சபைக்கு வருவதில்லை.

வட மாகாண சபை கூடுவது முக்கியமான விடயங்களை ஆராய்வதற்கே. எமது மாகாண சபையினூடாக நியதிச் சட்டங்கள் கூட உருவாக்கப்படுகின்றன.

அனைத்து உறுப்பினர்களும் என்ன விடயங்கள் ஆராயப்படுகின்றன என்பதை அறிய வேண்டும். எவ்வளவோ முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை ஆராயும் போது சபையில் உறுப்பினர்களின்பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீடு தொடர்பில் ஆராய்கின்றோம். இதுவரை காலமும் நீங்கள் சபையில் இருந்து இடைநேரத்துடன் சென்றது போன்று செல்ல வேண்டாம். சகல உறுப்பினர்களும்சபைஅமர்வில்இருக்க வேண்டும் - என்றார்.(ற-5,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின் காணியில் புதிதாக இராணுவ முகாம்

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கண்டனம்

எருவில், டிச.16

அம்பாறை - கஞ்சிகுடிச்சாற்றில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான இடத்தில் புதிதாக இராணுவ முகாம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்தார்.

இறந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கும் இடத்தில் இராணுவ முகாம் அமைக்கப்படுவதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்கள் என்னுடன் தொடர்புகொண்டு எமது பிரதேசத்தில் புதிதாக இராணுவமுகாம் அமைப்பதற்கான முன்னேற்பாடுகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாக கூறியதற்கு அமைவாக நான் அங்கு சென்றேன்.

எமது மக்களுக்குச் சொந்தமான இடங்களிலும், முன்னர் இறந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கும் இடத்திலும், புதிதாக இராணுவமுகாமை அமைப்பதற்கான எல்லைகள் இட்டு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான புதிய இராணுவமுகாம்களை அமைப்பதென்பது தற்போதைய சூழலில் பொருத்தமில்லாத ஒரு செயற்பாடாகும்.

> “இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்கள் என்னுடன் தொடர்புகொண்டு எமது பிரதேசத்தில் புதிதாக இராணுவமுகாம் அமைப்பதற்கான முன்னேற்பாடுகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாக கூறியதற்கு அமைவாக நான் அங்கு சென்றேன்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் பல இடங்களில் இராணுவ முகாம்களை மூடி, அங்கிருந்து இராணுவம் வெளியேறி இருக்கின்றது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் அம்பாறையில் உள்ள பொதுக் கட்டடங்களில் இருந்தும், பாடசாலைகளில் இருந்தும் இராணுவம் வெளியேறவில்லை.

திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள கள்ளியந்தீவு பாடசாலை, ஆலையடிவேம்பு கண்ணகி கிராமத் தில் உள்ள கண்ணகி வித்தியாலயம், நாவிதன்வெளி, காரைதீவு போன்ற இடங்களிலும் இராணுவ முகாம்கள் தற்போதும் உள்ளன.

மக்களுக்குச் சொந்தமான இடங்களில் இருந்தும், பாடசாலைகளில் இருந்தும், பொதுக் கட்டடங்களில் இருந்தும் இராணுவத்தினரை உட னடியாக வெளியேற்றுவதுடன் இனி மேலும் புதிய இராணுவமுகாம்களை அமைப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் - என்றார். (த-ய)

## தீகவாபியில் முஸ்லிம்களை தாக்கிய இருவர் மறியலில்

அம்பாறை, டிசெ.16

அம்பாறை – தீகவாபியில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டில் கைதுசெய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிவான் நளினி கந்தசாமி நேற்று உத்தரவிட்டார்.

தீகவாபியில் கடந்த 2ஆம் திகதி முஸ்லிம்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தமண பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருசிங்களவர்களும் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சம்பவ தினம் சந்தேக நபர்கள் மதுபோதையில் வீதியால் சென்றவர்களை மறித்துத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

இறக்காமம் பிரதேசத்தைச் சேர்ந்த தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவனான இம்ரான் மற்றும் அக்கரைப்பற்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் அஸ்மி ஏ கபூர் உட்பட வீதியால் பயணித்த பலரை, சந்தேகநபர்கள் தாக்கியதுடன், அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள்களையும் உடைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் காரணமாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவன் பலத்த காயத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் மேலும் சிலர் கைது செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (த-ய-49)

# 10,000 ஏக்கர் நெல்வயல்கள் மட்டக்களப்பில் கருகி நாசம்

### மேட்டுநிலப் பயிர்களும் வாட்டம்



மட்டக்களப்பு, டிசெ.16

இம்முறை பருவமழை பொய்த்துப் போனதால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் மேட்டுநில நெல் வயல்கள் கருகிப் போயுள்ளதுடன், குறிப் பிடத்தக்க அளவான உப உணவுப் பயிர்களும் நீரின்றி வாடிவிட்டதாக மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஆர்.கோகுலதாஸன் தெரிவித்தார்.

மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பான விவரங்களைத் தெரிவித்த அவர், வழமைக்கு மாறாக வறட்சி நிலைமை நீடிப்பதால் விவசாயிகள் இம்முறை அதிக பாதிப்புக்களைச் சந்தித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இவ்வாண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகப்படியாக 91,567 ஏக்கர் மேட்டுக் காணியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் 10வீதமானவை ஏற்கனவே கருகிவிட்டன.

அடுத்த சில நாள்களுக்குள் மழை பெய்யா விட்டால் ஏனைய வயல்களும் கருகிப்போகும் நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன் நீர்ப்பாசனமல்லாத சோளம், இறுங்கு, கௌபி, நிலக்கடலை மற்றும் குரக்கன் போன்ற தானியங்களும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக ஒரு லட்சத்து 55ஆயிரத்து 391ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

பெரு நீர்ப்பாசனத்தின் கீழ் 56,124 ஏக்கரும், சிறு நீர்ப்பாசனத்தின் கீழ் 7,700 ஏக்கரும் செய்கை பண்ணப்பட்டன.

இதேவேளை-தொடர்ந்து மழைபெய்யாது விட்டால் நீர்ப்பாசனக் காணிகளும் பாதிப்பை எதிர்நோக்கும். குளங்களில் ஏற்கனவே தண்ணீர் குறைவடைய ஆரம்பித்துவிட்டது - என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, கிரான், வந்தாறுமூலை, கரடியனாறு, ஆயித்தியமலை, உன்னிச்சை, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி மற்றும் பழுகாமம் ஆகிய பிரதேசங்கள் வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மொத்தமாக இம்முறை மாவட்டத்தில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் 40 வீதம் கருகி மடிந்துவிட்டதாக விவசாய அமைப்புக்கள் கூறின. (த-ய-46)

## அப்துர் ராசிக் மீதான வழக்கு பெப்ரவரிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ 16

பௌத்த மதத்தை இழிவுபடுத்தியதாகக் குற்றஞ்சாட்டி தவ்ஹீத் ஜமாஅத் செயலாளர் அப்துர் ராசிக் மீது பொதுபல சேனாவினால் தாக்கல் செய்யப்பட்ட மத நிந்தனை வழக்கு மீண்டும் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மார்க்க நிகழ்வொன்றில் அப்துர் ராசிக் ஆற்றிய உரையில் பௌத்த மதத்தை இழிவுபடுத்திப் பேசினார் என்று குற்றஞ்சாட்டி-பொதுபல சேனாவினால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கின் விசாரணை நேற்று நீதிபதி கலன்சூரிய முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே வழக்கை நீதிபதி பெப்ரவரி மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் ஜமா அத்தின் தலைவர் ரியாழ், துணைத் தலைவர் பர்சான், பொருளாளர் ரிழ் வான், துணைச் செயலாளர் ரஸ்மின் மற்றும் தவ்சீப் அஹ்மத் ஆகியோர் மன்றில் முன்னிலையானார்கள். தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க, மூத்த சட்டத்தரணிகளான ஷிராஸ் நூர்தீன் மற்றும் மைத்திரி குணரத்ன, மஞ்சுலபதிராஜ, அஞ்சுல பெண்டிக், சுகந்தி சிறிவர்தன,நுஸ்ராஸரூக் உள்ளிட்ட குழுவினர் முன்னிலையாகினர். (து)

## அதிக அளவில் அரச சாராயம் வைத்திருந்தவருக்கு தண்டம்

சாவகச்சேரி, டிசெ.16

அனுமதிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக கொண்டு செல்லப்பட்ட அரச சாராயத்தைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்ட நீதிவான் அவற்றைக் கொண்டு செல்ல முயன்ற பளை செல்வபுரம் வாசிக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

சாவகச்சேரியிலிருந்து பளைக்கு 100 காற்போத்தல் சாராயம் கொண்டு செல்ல முயன்ற நபரை பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

தனிநபர் ஒருவர் ஆகக்கூடியது 10 போத்தல் சாராயம் கொண்டு செல்லமுடியும் என்பதால் இவர் கொண்டு சென்ற 40 காற்போத்தல் சாராயத்தை மீள ஒப்படைக்குமாறும் மிகுதி 60 போத்தல் அரச சாராயத்தைப் பறிமுதல் செய்து அழிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் அனுமதிப் பத்திரமின்றி அனுமதிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக அரச சாராயம் கொண்டு சென்றமைக்காக 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தார். (ற-9)

## பிணை முறி விடயம் என் கையில் இல்லை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 16


மத்திய வங்கியின் பிணை முறிகள் விநியோக விவகாரம், இனித் தன் கையில் இல்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தாம் சட்டமா அதிபரிடம் கையளித்துள்ளதாக அவர் கூறினார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறிகள் விநியோக மோசடி குறித்து தாமே முதலில் உள்ளக விசாரணையை ஆரம்பித்ததாக இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

குறித்த விசாரணை தொடர்பான அறிக்கையை தாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும், பிணை முறி மோசடி குறித்து கோப் குழுவும் விசாரணை மேற்கொள்வதற்குத் தாம் அனுமதி வழங்கியதாகவும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

கோப் குழுவின் தலைவரான மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்திக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கியதாகக் குறிப்பிட்ட பிரதமர், கோப் குழு சமர்ப்பித்துள்ள பரிந்துரைகள் ஒருமனதானது எனவும், மேலதிக விசாரணைகளுக்காக அவை சமர்ப்பிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வான் பரப்பை ஆக்கிரமித்த விமானங்கள்

*வர்தா புயல் அபாயம் காரணமாக*



கொழும்பு, டிசெ. 16
தமிழகத்தின் சென்னை நகரத்தைத் தாக்கிய வர்தா புயல் காரணமாக இலங்கையின் வான் பரப்பில் அதிகளவான விமானங்கள் பறந்துள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த 12ஆம், 13ஆம் திகதிகளில் இலங்கைக்குச் சொந்தமான வான் பரப்பில் பறந்த விமானங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 13ஆம் திகதி மாத்திரம் இலங்கையில் தரையிறங்காமல், இலங்கைக்குச் சொந்தமான வான் பரப்பின் ஊடாகப் பயணித்த விமானங்களின் எண்ணிக்கை 182 என விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் உதவிச் செயலாளர் ராஜித செனவிரத்ன தெரிவித்தார்.

ஒரு நாளில் இலங்கைக்குச் சொந்தமான விமானப் பரப்பில் பயணித்த அதிகமான எண்ணிக்கை இதுவென அவர் குறிப்பிட்டார். இதனால் இலங்கை விமான வான் பரப்புப் பயன்படுத்துவதன் வருமானம் அதிகரித்ததாக அவர் குறிப்பிட்டார்.

பொதுவாக ஒரு நாளில் இலங்கையில் தரையிறங்காமல் இலங்கையின் வான் பரப்பில் 80 முதல் 90 விமானங்களே பயணிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி)

# ஊழல்களை கட்டுப்படுத்த நீதிமன்றப் பொறிமுறை

*15 அமைச்சர்கள் கூட்டாக அமைச்சரவைக்குப் பிரேரணை*

கொழும்பு, டிசெ. 16
ஊழல், மோசடிகள் தொடர்பான வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவெடுக்கக் கூடியவகையில் நீதிமன்றப் பொறிமுறையொன்று உருவாக்கப்படவேண்டும் என்ற பிரேரணையொன்று 15 அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தற்போதுள்ள சட்டப் பொறிமுறை போதுமானதல்ல எனவும், விசாரணைகளைத் துரிதப்படுத்தித் தீர்ப்பு வழங்கக்கூடிய புதிய பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்படவேண்டும் எனவும் இந்தப் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டிருப்பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ராஜித சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க, கலாநிதி சரத் அமுனுகம, அர்ஜுன ரணதுங்க, ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அத்துகோரள, மகிந்த அமரவீர, சரத் பொன்சேகா ஆகியோர் உட்பட 15 அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பிரேரணையில் கையொப்பமிட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. (தி)

## டுபாய் வங்கிகளில் ரூ. 58,500 கோடி கறுப்புப் பணம்

*அதனை இலங்கைக்குக் கொண்டுவருவதில் சிக்கல்*

கொழும்பு, டிசெ. 16
டுபாய் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த இலங்கைக்குச் சொந்தமான 58 ஆயிரத்து 500 கோடி ரூபா கறுப்புப் பணத்தை மீள இலங்கைக்குள் கொண்டுவருவதற்கு இலங்கை அதிகாரிகள் சிலர் மேற்கொண்ட முயற்சி பிழையான அணுகுமுறை காரணமாகச் சிக்கல் நிலையை அடைந்துள்ளது என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேறொரு நாட்டின் வங்கியொன்றில் இருக்கும் இலங்கைப் பணத்தை மீளப்பெறுவதற்கு ஒரு நடைமுறை இருக்கின்றது. அதற்கு மாறாகச் செயற்பட்டால் பணத்தைப் பெறமுடியாது. அப்படியொரு இலகுவான நிலைமை இருந்தால் பன்னாட்டு வர்த்தகர்கள் வெளிநாட்டு வங்கிகளில் முதலீடுசெய்ய முன்வரமாட்டார்கள். அவர்கள் பணத்தை உடனே திரும்பப் பெற்றுவிடுவார்கள்.

டுபாய் வங்கியிலிருக்கும் பணத்தை மீளப்பெறுவதற்கு டுபாய் அரச தலைவருக்கு எமது நாட்டு ஜனாதிபதி கடிதமொன்றை அனுப்பினால் இந்தப் பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கமுடியும் என்று அந்த நாட்டு அரசால் இலங்கை அரசுக்குச் சொல்லப்பட்டது. அதனடிப்படையில் கடிதமும் வழங்கப்பட்டது.

அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு முன்னாள் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் தலைவரும், சட்டத்தரணி ஒருவரும் தனியார் சட்ட நிறுவனமொன்றின் ஊடாக விண்ணப்பித்தனர். அது உடனே நிராகரிக்கப்பட்டது. மீண்டும் விண்ணப்பித்தனர். மீண்டும் நிராகரிக்கப்பட்டது.

இவ்வாறு விண்ணப்பித்தமை பிழையான அணுகுமுறையாகும். முதலில் அந்தப் பணம் கறுப்புப்பணம் என்பதையும், அந்தக் கறுப்புப்பணத்தை வெள்ளையாக்குவதற்காகவே அந்த வங்கியில் அந்தப் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது என்பதையும் எமது நாட்டு நீதிமன்றம் நிரூபிக்கவேண்டும்.


அந்த நீதிமன்றத் தீர்ப்பையும் ஜனாதிபதியின் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு எமது நாட்டு சட்டமா அதிபர் அந்த நாட்டின் சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு வேலையைத் தொடங்கவேண்டும்.

மிக் விமானக் கொள்வனவின்போதும் இவ்வாறானதொரு நிலைமைதான் பின்பற்றப்பட்டது. அதனால்தான் இந்தக் கொள்வனவு தொடர்பிலான ஆவணங்களை எம்மால் உக்ரைனிடமிருந்து இலகுவாகப் பெறமுடிந்தது.

இந்த முறைமை டுபாய் வங்கியிலுள்ள கறுப்புப் பணத்தை மீளப்பெற்றுக்கொள்ளும் விடயத்தில் பின்பற்றப்படாததால் அந்தப் பணத்தை மீளப்பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தாங்கள்தான் இந்தப் பணத்தைப் மீள இலங்கைக்குக் கொண்டுவந்தோம் என்று காட்டி ஜனாதியிடம் பெயர் வாங்குவதற்காகச் சில அதிகாரிகள் மேற்கொண்ட முட்டாள்தனமான நடவடிக்கையே இதற்குக் காரணமாகும்.

இந்தப் பணத்தை மீளப்பெறுவதற்கு மேற்கொண்ட பிழையான நடவடிக்கை பணத்தை வைப்பிலிட்டவர்களுக்குத் தெரியவந்ததும் அவர்கள் அந்தப் பணத்தை வங்கியிலிருந்து மீள எடுத்துவிட்டனர். இருந்தாலும், அந்தப் பணத்தை எப்படியாவது கைப்பற்ற முடியும் என்று அரசு தெரிவிக்கின்றது. (தி)



# இலங்கைப் பொருள்களை கொள்வனவு செய்யத் தயார்

*தஜிகிஸ்தான் ஜனாதிபதி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 16
இலங்கையுடனான வர்த்தக பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தஜிகிஸ்தான் ஜனாதிபதி இமோமாலி ரஹ்மான் தெரிவித்தார்.

இலங்கையின் தேயிலை, ஆடை, இரத்தினக்கல், ஆயுள்வேத உற்பத்திகள், வாசனைத் திரவியங்கள், பீங்கான் பொருள்கள், இறப்பர் உற்பத்திகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்வதற்கு தஜிகிஸ்தான் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் மாலை நடைபெற்ற இலங்கை மற்றும் தஜிகிஸ்தான் வர்த்தக சபை உறுப்பினர்களுடனான சந்திப்பில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
இலங்கையில் தற்போது முதலீடு செய்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகிறோம். தஜிகிஸ்தான் வர்த்தகர்கள் இலங்கையில் விரிவாக முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட எதிர்பார்த்துள்ளனர்.

இலங்கை முதலீட்டாளர்களையும், எமது நாட்டுக்கு பயணம்செய்து முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம்-என்றார். (தி)

## துறைமுக ஊழியர்களை பதவி நீக்கவேண்டாம்

*ஜனாதிபதியிடம் மகிந்த கோரிக்கை*



கொழும்பு, டிசெ. 16
அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தின் ஊழியர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், தான் வேண்டுகோள் விடுத்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடித் தீர்வொன்றைப் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டதாகவும் மகிந்த கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மாகம்புர துறைமுக ஊழியர்கள் கடமைக்குச் சமூகமளிக்காது போனால், சுயமாக தமது தொழிலிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவார்கள் என துறைமுக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அறிவித்திருந்தார். இதனையடுத்தே ஜனாதிபதியிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக மகிந்த கூறினார். (தி)

## கண்ணீர்ப் புகையினால் பார்வை இழந்த சிப்பாய்

அண்மையில் அங்கவீனமுற்ற படைச் சிப்பாய்கள் முன்னெடுத்த போராட்டத்தின்போது பொலிஸாரின் நீர்த்தாரைக்கும் கண்ணீர்ப்புகைக்கும் இலக்காகிக் கண்பார்வையை இழந்த சிப்பாய் சிகிச்சைக்காகச் சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதும் அங்கு அவரது கண்களைக் குணமாக்க முடியாது எனத் தெரிவித்து அந்த வைத்திய சாலை அவரைத் திருப்பி அனுப்பியுள்ளது. நிஷாந்த மகிராஜ் எனும் அங்கவீனமுற்ற இந்தச் சிப்பாய் பொலிஸாரின் கண்ணீர்ப்புகைக்கு இலக்கான பின் இராணுவத் தளபதியின் ஏற்பாட்டில் சிங்கப்பூரிலுள்ள கெம்டல் மெடிக்கல் சென்ரருக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அவரது கண்களைத் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்திய கண் வைத்திய நிபுணர் டேவிட் ரேங்க் அவரது கண்கள் குணமாக்க முடியாத அளவுக்கு சேதமடைந்திருப்பதாகத் தெரிவித்ததையடுத்து நிஷாந்த மகிராஜ் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார். (தி)

# உள்ளூர்ச் சந்தையில் அரிசி விலை உயர்வு

*வெளிநாட்டு அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை தீர்மானம்*



கொழும்பு, டிசெ. 16
உள்ளூர்ச் சந்தையில் அதிகரித்துவரும் அரிசியின் விலையைக் குறைப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன், அரச களஞ்சிய சாலைகளிலுள்ள நெல்லை உடனடியாகச் சந்தைக்கு அனுப்பி வைப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பொதுமக்கள் அரிசியின் விலை உயர்வால் எதிர்நோக்கவுள்ள சிரமங்களைக் கருத்திற்கொண்டே அமைச்சரவை இந்த அவசர தீர்மானத்தை எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கச்சார்பானவர் வடக்கின் ஆளுநர்

## வடமாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 16
வடக்கு மாகாண ஆளுநர் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றார். அவர் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குகின்றார்.
இவ்வாறு குற்றஞ்சாட்டினார் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான க.சர்வேஸ்வரன்.
வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத் திட்ட அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் ஆளுநர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான விவாதம் நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநருக்கு நடப்பு நிதியாண்டுக்கு 61 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டுக்கு குறைக்கப்பட்டுள்ளது. ஆளுநர் செயலகத்துக்கு 57 மில்லியனே 2017 ஆம் ஆண்டு செலவினத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
விவாதத்தின்போதே சர்வேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
ஆளுநர் பக்கச் சார்பாக செயற்படுகின்றார். பௌத்தத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பது போல் செயற்படுகின்றார்- என்று அவர் குறிப்பிட்டார்.
ஆளும் கட்சி உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் ஆளுநருக்கு ஒதுக்கிய நிதியில் பத்து ரூபாவைக் கழித்துக் கொண்டு அனுப்புங்கள். என்றார். அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவ்வாறு செய்ய முடியாது என்று பதிலளித்தார்.
குழு நிலை விவாதத்தின் பின்னர் எதுவித எதிர்ப்புக்களும் இல்லாததால் ஆளுநர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டது. (ஐ-5,8)

## தரம் 7 மாணவர்களுக்கு கிழிக்க முடியாத புத்தகம்

*கொழும்பு, டிசெ.16*
*தரம் 7 மாணவர்களுக்கான புவியியல் அச்சுப் புத்தகம் நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில், அதன் ஏடுகளைக் கிழிக்க முடியாதவாறு உருவாக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.*
*அதிநவீன தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புத்தகம் கிழியாது என்றும் கசங்காது என்றும் கூறப்படுகின்றது. தூசி, அழுக்குகள், பேனா கீறல்கள் என்பவற்றைக் கழுவித் தூய்மைப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.*
*சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் புத்தகத்தைப் பெரும்பாலும் 8 ஆண்டுகள் பயன்படுத்த முடியும். புவியியல் வரைபடங்களுக்குத் தெளிவான வர்ணங்கள், தெளிவான அச்சு முக்கியம் என்பதால் புதிய தொழில்நுட்பத் துடன் இந்தப் புத்தகம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.*
*2017ஆம் ஆண்டு தரம் 7 இல் கற்கும் மாணவ, மாணவியருக்கே இந்தப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.* (ஐ)



## அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 16
தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 10 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு பிரான்சில் நந்தியார் பகுதியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தினர் நடத்தும் சங்கொலி-2016 பாட்டுத்திறன் போட்டியும் அதே மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. (ஐ-5)

## தென்னம் செய்கையை ஊக்குவிக்க 3000 நாற்றுகள்

யாழ்ப்பாணம்.டிசெ.16
வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தென்னைச் செய்கையையும் ஊக்கு விக்கும் பொருட்டு இந்த முறை 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென் னம் நாற்றுக்களை அங்கத்துவ சங்கங்களுக்கு விநியோகிக்கவுள்ளது.
இவ்வாறு சமாசத்தின் தலைவர் என். கணேசன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
மரம் நடுகை மாதத்தில் இந்த தென்னம் நாற்றுக்கள் பெறப்பட்டு உரிய அங்கத்துவ சங்கங்களுக்கு வழங்கப்பட்டன. 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாங் கன்றுகளும் வழங்கப்பட்டன. குடாநாட்டில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டே இந்த முறை சமாசம் அதிகளவிலான தென்னம் நாற்றுக்களை சங்கங்களுக்கு வழங்கியது.
அடுத்தாண்டிலும் கூடுதலான தென்னங்கன்றுகளை பெற்று விநியோகிப்பதற்கும் சமாசம் நடவடிக்கை மேற்கொள்ளும்- என்றார். (ஐ-17)

## வட்டிக் கடன் சுமையிலிருந்து மீள்கின்றனர் வாகரை மக்கள்

### பிரதேச செயலாளர் பெருமிதம்

களுவாஞ்சிகுடி, டிச.16
வாகரை பிரதேச மக்கள் அதிக வட்டிக் கடன் சுமையிலிருந்து விடுபட வழியேற்பட்டுள்ளது.
இவ்வாறு பிரதேச செயலாளர் எஸ். ஆர். ராகுலநாயகி தெரிவித்தார்.
பிரதேச செயலக வளாகத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட வியாபாரத் திட்டமிடல் கண் காட்சியை ஆரம்பித்து உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இதுவரை காலமும் இந்தப் பிரதேசத்தில் சில நிறுவனங்கள் சுமார் 26 வீதம் என்ற அதிகரித்த வட்டியில் மக்களுக்கு கடன்களை வழங்கி மக்களைச் சுரண்டி கடன் சுமைக்குள்ளாக்கியிருந்தன.
இந்த நிலைமையிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு கடந்த இரண்டு வருடங்களாக நாம் அயராது பாடுபட்டோம்.
கரையோரம் பேணல் திணைக்களம் உள்ளிட்ட இன்னும் சில நிறுவனங்கள் மக்களை கடன்பெறும் சுமையிலிருந்து மீட்டெடுப்பதற்கு பங்காற்றியுள்ளன.
மக்கள் தங்களுக்கு ஏற்படும் அதிக வட்டிப் பாதிப்பை உணர்ந்து கொண்டதால் பெருமளவு வெற்றி கிட்டியுள்ளது. அதன் வெளிப்பாடே இன்றைய கண்காட்சியாகும்.
ஆழிப்பேரலை பாதிப்பு, போர்க் காலத்தில் கணவனை இழந்தவர்கள், தொழிற் பாதிப்பிற்குள்ளானவர்கள் என்று சுமார் 300 குடும்பங்கள் சிறு கைத்தொழில் கடன் முயற்சியில் தங்களை இணைத்துக் கொண்டு வெற்றி கண்டுள்ளார்கள். அதிக வட்டிக்கு கடன் வழங்கும் நிறுவனங்களை மக்கள் புறக்கணித்துள்ளனர்.
கரையோரம் பேணல் திணைக்களத்தினால் சமூக மட்ட அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் 7 அமைப்புக்கள் சமூக சேவைத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு அந்த ஒவ்வோர் அமைப்புக்குமாக தலா 4 லட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது வட்டி யில் லாக் கடன் சுழற்சி முறைமூலம் பயனாளிகளுக்கு வழங்கப் படு கின்றது.
வெளியாரிடமிருந்து வரும் திணிப்புக்களால் எந்தவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை – என்றார். (ஐ-ய)



## காணாமல்போன துணைவேந்தருக்கு கிழக்கு பல்கலையில் நேற்று அஞ்சலி

செங்கலடி, டிசெ.16
கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் காணாமல் ஆக்கப்பட்டு நேற்றுடன் 10 வருடங்கள் கடந்த நிலையில் பல்கலையின் விவசாயபீடத்தில் அஞ்சலி நிகழ்வொன்று இடம்பெற்றது.
விவசாய பீடாதிபதி கலாநிதி பி.சிவராசா ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், முன்னாள் துணைவேந்தரின் உருவப்படத்துக்கு பிரதித் துணைவேந்தர் கலாநிதி ஏ.கருணாகரன் மலர்மலை அணிவிக்க இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.
பேராசிரியர் காணாமல்போய் 10 ஆண்டுகள் கடந்தும் நீதியான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. இதனுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பவில்லை என்று பீடாதிபதி கலாநிதி பி.சிவராசா குறிப்பிட்டார். (த-ய-47)

## 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட வெற்றிடங்கள் வடக்கில்

வடக்கில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்யும் பணியை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் பொதுச் சேவை ஆணைக் குழு தொடர்பான குழுநிலை விவாதம் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
வட்க்கு மாகாணத்தில் 35 ஆயிரத்து 6 வெற்றிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவற்றில் 31 ஆயிரத்து 818 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 3 ஆயிரத்து 188 வெற்றிடங்கள் தற்போதுள்ளன. அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.
கடந்த காலங்களில் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு நடத்திய போட்டிப் பரீட்சைகளிலும், நியமனங்களிலும் பல குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன. தொழில் வாய்ப்பை வழங்குவதற்குரிய போட்டிப் பரீட்சைகளை நடத்துவதற்கு மத்திய அரசில் உள்ள பரீட்சைத் திணைக்களம் போன்று வட மாகாணத் துக்கு என பிரத்தியேகமாக ஒரு திணைக்களம் அமைக்கப்பட வேண்டும்-என்று ஆளும்கட்சிஉறுப்பினரான க.சர்வேஸ்வரன் தெரிவித்தார். அதற்குப்பதிலளித்த அவைத் தலைவர் தெரிவித்த தாவது-
போட்டிப் பரீட்சை விடயங்கள் தொடர்பாக மத்திய அரசே வடமாகாண பரீட்சைகளைமத்தியபரீட்சைதிணைக்களம் ஊடாக நடத்துவதற்கான பரிந்துரைகளை முன்னாள் ஆளுநர் மேற்கொண்டிருந்தார். அது தொடர்பில் நான் முன்னாள் ஆளுநருக்கு கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தேன். அதில் வடமாகாண சபை அதிகாரத்துக்குட்பட்ட தனியான பரீட்சைத் திணைக்களம் நிறுவப்பட வேண்டும் என்று கோரியிருந்தேன்.- என்றார்.
உறுப்பினர்கள் மாற்றுக் கருத்துக்கள் எதுவும் தெரிவிக்காததால் வடமாகாண பொதுசேவை ஆணைக் குழுவின் நிதி ஒதுக்கீடு ஏற்கப்படுகின்றது என்று அவைத்தலைவர் தெரிவித்தார். (ஐ-8)

## டெங்குக் காய்ச்சல் காணப்பட்டால் அரச வைத்தியசாலையை நாடவும்

### சுகாதாரப் பணிப்பாளர் அலாவுதீன் அறிவுரை

எருவில், டிச.16
டெங்குக் காய்ச்சலுக்குரிய அறிகுறி தென்பட்டால் உடனடியாக அரச வைத்தியசாலைகளை நாடுங்கள் என்று அறிவுறுத்தியுள்ளார் கல்முனை சுகாதாரப் பணிப்பாளர் அலாவுதீன்.
சாய்ந்தமருது பிரதேசத்தில் நேற்று டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை ஆரம்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
டெங்குக் காயச்சல் அறிகுறி தென்பட்டால் உடனடியாக அரச வைத்தியசாலை ஒன்றுக்கு நோயாளியை கொண்டுசென்று முறையான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளுங்கள்.
கடந்தவாரம் கொழும்பிலிருந்து விசேட நிபுணத்துவ குழுவொன்று வரவழைக்கப்பட்டு, கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பில் முகாமைத்துவ பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது. மக்கள் நேரடியாக அங்கு சென்றுசிகிச்சைகளைபெற்றுக்கொள்வதே சிறந்தது.- என்றார். (ஐ-ய)

## விளம்பர தட்டிகளுக்கு அனுமதி தேவை

யாழ்ப்பாணம்,டிசெ.16
வடமராட்சி கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சபையின் அனுமதி பெற்றே சகல விளம்பரப் பலகைகள் மற்றும் தட்டிகள் அமைக்கப்பட வேண்டும் என்று சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.
சபையின் அனுமதி பெறப்படாது விளம்பர தட்டிகள், விளம்பர பலகைகள் ஊடான விளம்பரங்கள் வைக்கப்படுகின்றன. அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட விளம்பரத் தட்டிகள், விளம்பரப் பலகைகள் மற்றும் சுவர்களில் வரையப்பட்ட விளம்பரங்கள் யாவும் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பின்னர் அகற்றப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணிகம்

# சினமன் டோன்வெலி மால்டீவ்ஸ் முன்னணி சுற்றுலா விடுதியாக தெரிவுசெய்யப்பட்டது

*கொழும்பில் இடம்பெற்றிருந்த முதலாவது தெற்காசிய பயண விருதுகள் 2016 (sata) நிகழ்வில் தெற்காசிய பிராந்தியத்திலுள்ள முன்னணி சர்ஃப் சுற்றுலா விடுதி விருதினையும் கௌரவத்தினையும் சினமன் டோன்வெலி மால்டீவ்ஸ் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**கடலலை சறுக்கலில் ஆர்வமுள்ளவர்களுக்காக ஹோட்டல் வழங்கும் நிகரற்ற சேவை மற்றும் விருந்தோம்பலை அடையாளப்படுத்தும் விதமாக இந்த விருது அமைந்துள்ளது.**



முதலாவது தெற்காசிய பயண விருதுகள் 2016 தெரிவில் தென் ஆசியாவின் முன்னணி விருந்தோம்பல் வணிகநாமங்கள் பங்குபற்றியிருந் தன. குறிப்பாக இலங்கை உள்ளடங்கலான ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், கம்போடியா, சீனா, தென்கொரியா, இந்தியா, இந்தோனேசியா, லாவோ, மலேசியா, மாலைதீவு, மங்கோலியா, மியன்மார், நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய 19 நாடுகள் மேற்படி விருது விழாவில் பங்குபற்றியிருந்தமை நோக்கத்தக்கது.
அந்தவகையிலே மேற்படி வணிகநாமங்கள் 39 பிரிவுகளின் கீழாக 290 இற்கும் அதிகமான நியமனங்களை சமர்ப்பித்திருந்த போதும் நடப்பாண்டிற்கான முன்னணி சுற்றுலாவிடுதியாக சினமன் டோன்வெலி மால்டீவ்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
மேலும் சினமன் டோன்வெலி மால்டீவ்ஸ் இலங்கை விருந்தோம்பல் வணிகநாமமான சினமன் ஹோட்டல் மற்றும் சுற்றுலா விடுதியின் ஒரு பகுதி என்பதுடன் மாலைதீவிலுள்ள அது சார்ந்த 03 விடுதிகளில் ஒன்றாக விளங்குகிறது. ஒவ்வொரு விடுதியும் நவீன வசதிகள் மற்றும் அனுபவங் களுடன் மக்களின் வாழ்க்கைப் பாணிக்கு ஏற்ப அவற்றுக்கே உரித்தான தனித்துவத்தினை கொண்டுள்ளதாக சொல்லப்படுகிறது.
இந்தநிலையிலே மேற்படி முதலாவது தெற்காசிய பயண விருதுகள் - 2016 நிகழ்வுகளை கொழும்பு வணிகர் சம்மேளனம், இலங்கை வர்த்தகர் சங்கம், மாலைதீவு 'பயண முகவர்கள் சங்கம், மாலைதீவு லீவாபோர்ட் சங்கம், சுற்றுலா மற்றும் வணிக கூட்டணி மாலைதீவு, இந்திய சுற்றுலாத்துறை நிபுணர்கள் சங்கம், கேரளா ஹோட்டல் முகாமையாளர்கள் கிளப், அதிகாரம் பெற்ற சுற்றுலா செயற்பாட்டாளர்கள் கூட்டமைப்பு என்பன இணைந்து ஏற்பாடு செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.




## பேஸ்புக் மெசஞ்சரில் கேம்ஸ் அறிமுகம்

பேஸ்புக் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு அவ்வப்போது புதிய வசதிகளை அறிமுகம் செய்துவருகிறது. அந்தவகையிலே தற்போது புதியதான கேம்ஸ்களை தனது வாடிக்கை யாளர்களுக்கு அறிமுகம் செய்துள்ளது.
குறிப்பாக எவ்வித கேம்ஸ் செயலிகளின் தரவேற்றங்களும் இன்றி பேஸ்புக் மெசஞ்சர் செயலிகளில் இருந்து கொண்டே கேம்ஸினை விளையாட முடிகிறது.
இதன் பிரகாரம் தற்போது 17 விதமான கேம்ஸ்களை பேஸ்புக் அறிமுகம் செய்துள்ளது. நாளடைவில் அதிக அளவிலான கேம்ஸ்கள் பயனர்களுக்கு கிடைக்கப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி புதிய அறிமுகத்தினை கையாண்டு கேம்ஸ் விளையாடுவது மிக எளிதான காரியம் என்று சொல்லப்படுகிறது. அத்துடன் ஒரு கேம்ஸை விளையாட வேண்டும் என முடிவெடுத்தால் ஒன்லைனிலேயே தங்களுக்கான போட்டியாளரையும் தேர்வு செய்ய முடிவதாகக் கூறப்படுகிறது.
மேலும் தற்போது பேஸ்புக் மெசெஞ்சருக்கான செலவு, தமிழ் உட்பட 9 மொழிகளை எற்றுக்கொள்வதாகவும் ஒருவரிடமிருந்து குறுந்தகவல் வந்துவிட்டால் உடனடியாகவே கேம்ஸிற்கான பதிலீட்டை வழங்க முடிவதாகவும். பக் மான், கலகா, மற்றும் ஸ்பேஸ் இன்வடேர்ஸ் உள்ளிட்ட 17 வகை கேம்ஸ்கள் இதில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




## ஐ.சி.பி.ரி. கம்பஸில் பட்டப்படிப்பினை மேற்கொள்ள முடியும்

*"மிகச் சிறந்த ஆசிரியர் குழாம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மாணவர்களிடையே மேற்கொண்டுவருகிறது.*

இலங்கையின் முதற்தர கல்வி நிறுவனமான ஐ.சி.பி.ரி. கம்பஸ் வடபகுதி மாணவர்களின் நன்மை கருதி தமது கிளையை யாழ்ப்பாணத்தில் அமைத்துக் கொண்டுள்ளதுடன் யாழ். மாணவர் கள் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்யக் கூடியதான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.
அந்த வகையிலே வியாபார முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் மனிதவள முகாமைத்துவம் போன்ற பகுதி நேரக் கற்கைநெறிகளை இம்மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.
இதன்படி தொழில் புரிவோர் பகுதி நேரமாக தமது கற்கை நெறிகளைத் தொடர முடிவதுடன் மூன்று வருட காலப்பகுதியில் முகாமைத்துவப் பட்டதாரியாகலாம் என தெரிவிக் கப்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பிரித்தானிய பல்கலைக்கழக பட்டமொன்றினை வடபகுதியிலேயே கற்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடிகிறது.
மேலும் க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தர் சித்தியடைந்தவர்களும் தொழில் புரி வோரும் மிகச்சிறந்த கற்றல் அனுபவங்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன் நவீன ஆய்வுகூட வசதிகள், நூலக வசதிகள் என்பவற்றை பயனுறுதியுடன் கையாண்டு பட்டக்கற்கையை பூர்த்தி செய்து கொள்ள முடியுமெனத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
அத்துடன் பிரித்தானிய பல்கலைக்கழகங்களின் பட்டக் கற்கை நெறிகளை இலங்கையில் பூர்த்தி செய்து கொள்வதற்கான அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக ஐ.சி.பி.ரி. கம்பஸ் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.
மேற்படி கற்கை நெறிகள் தொடர்பி லான முழுமையான தகவல்களை அறிந்து கொள்ள இலக்கம் - 580, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஐ.சி.பி.ரி. கம்பஸ் யாழ். கிளையுடன் அல்லது நிரந்தர தொலைபேசி இலக்கமான 021 477 7888 உடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

## அதி வேகமான கைபேசி 3 ஜி இணைய சேவையை வழங்கும் எயார்டெல்

அதி வேகமான கைபேசி 3 ஜி இணைய சேவையை வழங்குவதில் எயார்டெல் லங்கா முதலிடத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி தொலைத் தொடர்பாடல்கள் ஒழுக்காற்று ஆணைக்குழுவின் ஆய்வானது பிரத்தியேகமாக பதிவிறக்க வேகங்களை அளவீடு செய்வதாகவும் ஹுவாவி முன்னெடுத்த ஆய்வானது அதற்கும் மேலாக கோப்புப் பதிவேற்ற வேகங்கள், இணைய உலாவல் மற்றும் பிங் தாமதங்கள் போன்ற ஏனைய பலவேறு அளவுருக்களையும் மதிப்பீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இந்தச் சாதனை தொடர்பில் எயார்டெல் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஜினேச் ஹெக்டே கருத்துரைக்கையில்,
"எமது வாடிக்கையாளர்களின் இணைய அனுபவத்தை மேம்படுத்துவதற்காக கடந்த ஆண்டில் நாம் ஏராளமான பணிகளை முன்னெடுத்துள்ளோம். வாடிக்கையாளர்களின் வருமான மட்டம் மற்றும் அவர்கள் எத்தகைய கைபேசி சாதனத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ளனர் என்ற வேறுபாடின்றி அனைத்து இலங்கையர்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையிலான தொழில்நுட்பங்களை வழங்குவதில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.




அதேபோன்று சிமாட் கைச் ரெக்னோலஜி என்ற தொழில்நுட்பமானது வேகங்களில் 40 வீதமான அதிகரிப்பை விளைவித்துள்ளதுடன், எமது வலையமைப்பில் இணைந்துகொள்ளும் அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது. மேலும் முதலாவது ஸ்தானத்திலுள்ள இணைய சேவை வழங்குநர் என்ற இனங்காணல் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமை எமது அணியின் கடின உழைப்புக்குச் சிறந்த சான்றாகவும் உண்மையில் வெகுமதியளிப்பதாகவும் அமைந்துள்ளது. இலங்கை மக்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டும் என்ற எமது நிறுவனத்தின் இலக்கு, எமது இணைய வாடிக் கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் முயற்சிகளை நாம் முன்னெடுப்போம்"- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# ஆறுமுகம் சரஸ்வதி அம்மையாருக்கு

## உதயன் இன் கண்ணீர் அஞ்சலி





குடும்பமே பல்கலைக்கழகமாய்
நல்ல கல்வியியலாளராகவும்,
குடும்பத் தலைவியுமாகி
நாட்டுக்கு நற்பணியாற்ற
நானிலம் சிறக்க
நற் புதல்வர்கள் புதல்வியர்களையும்
ஈன்றளித்த நற் தாயே!
நல்லாள் ஆறுமுகம் சரஸ்வதி
இறைபதமடைந்த செய்தி கேட்டு
விழி நீர் சொரிகிறது

துயருறும் குடும்பத்தாருக்கு
ஆறுதல் கூறி ஆற்றுகின்றோம்
அன்னாரின் ஆத்மா
அம்பாளின் திருவடிக் கமலங்களில்
சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**உதயன் குழுமத் தலைவரும்**
**ஊழியர்களும், பணியாளர்களும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பர்தா அணியாமல் புகைப்படம் எடுத்த பெண் கைதானார்

பர்தா அணியாமல் புகைப்படம் எடுத்து அதை ருவிற்றரில் பதிவுசெய்த பெண்ணை சவூதிப் பொலிஸார் கைது செய்தனர். மலக் அல் ஹெரி என்ற பெண்ணே அவ்வாறு கைதுசெய்யப்பட்டார். சவூதியை பொறுத்தவரை அங்கு சட்டங்கள், விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பெண் பர்தா அணியாமல் எடுத்த புகைப்படத்தை ருவிற்றரில் பதிவேற்றிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் அந்தப் பெண் தனக்கு அறிமுகமில்லாத ஆண்களோடு பேசும் பழக்கமும் உடையவர். குறித்த பெண்ணின் மீதான இந்த நடவடிக்கை இஸ்லாமிய விதிமுறைகளை கடைப்பிடிப்பதை பொதுமக்களிடையே வலியுறுத்தும் என சவூதி பொலிஸ் செய்தி தொடர்பாளர் பவாஸ் அல் மைமன் தெரிவித்தார்.

# ஒரு பில்லியன் கணக்குகள் யாகூவிடம் திருட்டு


வொஷிங்ரன், டிசெ. 16
யாகூவின் கணக்கில் உள்ள ஒரு பில்லியன் மின்னஞ்சல்கள் திருடப்பட்டன என்று அந்த நிறுவனம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.
2013 ஆம் ஆண்டுஓகஸ்ட் மாதம் இந்த ஊடுருவல்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் யாகூ தற்போதே அதை வெளிப்படுத்தியது. பாவனையாளர்களின் நிதி தொடர்பான விவரங்கள் திருடப்படவில்லை. ஆனாலும் பெயர், மின்னஞ்சல், கடவுச்சொல் என்பன திருடப்பட்டன. பாதிக்கப்பட்டவர்கள் புதிய கடவுச் சீட்டை பதிவு செய்யுமாறு யாகூ நிறுவனம் தனது பாவனையாளர்களிடம் கோரிக்கை விடுத்தது.
முன்னதாக யாகூ நிறுவனத்தின் 500 மில்லியன் கணக்குகள் திருடப்பட்டது. தற்போதைய ஒரு பில்லியன் கணக்குகள் திருடப்பட்டன என்ற அறிவிப்பு யாகூ பாவனையாளர்களுக்கு மேலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.
மேலும் யாகூவுடன் வர்த்தக ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நிறு வனங்கள், நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் யாகூவின் பங்குகளும் சரிவடைந்துள்ளது. (ம-எ)

# யாசிடிப் பெண்களுக்கு மிகவும் உயரிய விருது



வொஷிங்டன், டிசெ. 16
மனித உரிமைகள் அமைப்பின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில் யாசிடி இனத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களுக்கு மனித உரிமைகளின் சக்காரோவ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
லிமியா அஜிபசார் மற்றும் நடியா முறாட் ஆகிய இருவருமே குறித்த விருதை வென்றவர்களாவர். கடந்த ஆண்டு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் பாலியல் அடிமைகளாக இருந்த இவர்கள் பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்று ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் அட்டூழியங்களை வெளிச்சம் போட்டுக் காட்டினர். இதனையடுத்தே இருவருக்கும் குறித்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ம-எ)

# விலங்குகளுக்காக விநோத ஆர்ப்பாட்டம்




பார்சிலோனா, டிசெ.16
ஸ்பெயினில் தோல் உற்பத்திகளுக்கு எதிராகவும், மிருகவதைக்கு எதிராகவும் மிருக நல ஆர்வலர்கள் விசித்திர போராட்டத்தை நடத்தினர்.
ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் அண்மையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அந்த நகரில் முக்கிய வீதியொன்றில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆடையின்றி உடலில் போலி குருதியைப் பூசியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். மிருக வதைக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு, ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.
வருடாந்தம் 60 மில்லியனுக்கும் அதிகமான விலங்குகள் தோல் பதனிடுதலுக்காக ஐரோப்பாவில் கொல்லப்படுகின்றன. உலகத் தோல் உற்பத்தில் ஐரோப்பாவில் இருந்து 70 சதவீத உற்பத்திகள் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)



# மிகப்பெரிய … எதிர்நோக்கு…

## இன அழிப்பு எ…

டமஸ்கஸ், டிசெ. 16
சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவை இராணுவம் கைப்பற்றிவிட்டது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், அங்கு போர் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றும்-கிட்டத்தட்ட 80 ஆயிரம் மக்கள் நிர்க்கதியான நிலையில் அடிப்படைகள் ஏதுமின்றி அல்லற்படுகின்றனர் என்றும்-குறித்த பகுதியிலிருந்து-லினா ஷமி என்ற பெண், பன்னாட்டு ஊடகமான அல்ஜசீராவுக்கு தெரிவித்தார்.
மக்களுக்கான எந்தப் பாதுகாப்பு நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை. அத்தியாவசியப் பொருள்கள் கூட இல்லாமல் சாவை எதிர்கொண்டுள்ளோம். அரசு படைகள் எம்மை நெருங்குவதை அடுத்து, நில அறைகளில் நாம் வசித்து வருகின்றோம். எமது பாதுகாப்பு கருதி எம்மால் வெளியில்



நோர்வேயின் சொவோல்வா நகரில் ஆயிரத்து 200 அடி உயரத்தில் மலையின் ஓர் உச்சியில் இருந்து மற்றொரு உச்சிக்குத் தாவி நோர்வேயின் சாகச வீரர் ஒருவர் சாகசம் புரிந்தார். பால் ஹெரான்ஸ் (வயது-24) என்ற வீரரே அவ்வாறு சாகசம் புரிந்தார். குறித்த காணொலியை பன்னாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படுகொலைகளை
# தகிறது அலெப்போ
## ணவும் சாடல்

செல்ல முடியாது. இவ்வாறு நில அறையில் இருந்த 60 பேர் கொண்ட ஒரு குழுவை இராணுவத்தினர் தீயிட்டு உயிருடன் எரித்தனர். சமாதானத்துக்கான எந்த அறிகுறியையும் நாம் காணவில்லை. அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்ட போரில், இதுவரை 4 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காணாமல் செய்யப்பட்டும்-கொல்லப்பட்டும் உள்ளனர். இது இன அழிப்பு. எமக்காகச் செபியுங்கள். எமது நாட்டின் அயலுறவுத்துறை அலுவலகங்கள் முன்பு ஒவ்வொரு நாட்டு மக்களும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதன் மூலம், சிரிய அரசுக்கு அதிக அழுத்தத்தைக் கொடுத்து அதன் செயற்பாடுகளை முடக்க முடியும் என்று லினா ஷமி மேலும் தெரிவித்தார்.

சனல்-4 ஊடகத்துடன் வாட் அல் கெடீப் என்ற பெண் கிழக்கு அலெப்போவில் இருந்து உரையாடியுள்ளார். கிழக்கு அலெப்போவின் நிலை மிக கவலைக்கிடமாகவுள்ளது. மக்கள் செய்வதறியாது திகைத்த நிலையில் உள்ளனர். ஒரு சிறு பகுதிக் குள் பெருந்தொகையான மக்கள் உள்ளனர். எம்மைச் சுற்றி போர் விமானங்கள் வட்டமிடுகின்றன. எம்மை பாதுகாப்பாக வெளியேற்றாவிட்டால், இங்கு மிகப்பெரிய படுகொலைகள் அரங்கேறும் என்று தெரிவித்தார். (ம-எ)

# பென்சில்வேனியா முடிவில் மாற்றங்கள் எதுவுமில்லை
## ட்ரம்புக்கே வெற்றி



அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் வாக்குகள் மீண்டும் எண்ணப் பட்டதன் அடிப்படையில் ட்ரம்ப்பே வெற்றியாளர் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட முடிவுகளில் மாற்றமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனை வீழ்த்தி ஜனாதிபதியாகத் தெரிவானார். வாக்குகளின் எண்ணிக்கையில் ஹிலாரிக்கு அதிகம் கிடைத்தாலும், தொகுதிப் பிரதிநித்துவத்தில் ட்ரம்ப்புக்கு அதிகம் என்பதால் அவர் ஜனாதிபதியானார். ஆனால் வாக்குகளின் எண்ணிக்கையில் தவறு நடந்திருக்கலாம் என்று சில தரப்பினால் சந்தேகம் வெளியிடப்பட்டது. ஏனெனில் ஹிலாரியின் கோட்டைகள் என வர்ணிக்கப்பட்ட விஸ்கொன்சின், மெச்சிக்கன், பென்சில்வேனியா ஆகிய 3 மாகாணங்களில் டிரம்ப் வென்றார். எனவே அங்கு வாக்குகளைமீண்டும்எண்ணும்படிகோரிக்கை விடப்பட்டது. இதன்படி பென்சில்வேனியா மாகாணத்தில் மீண்டும் எண்ணப்பட்ட வாக்குகளின் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. ட்ரம்ப்வே வெற்றியாளர் என்று உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது. முன்னதாக விஸ்கொன்ஸினின் மாகாணத்தின் முடிவுகளும் மீண்டும் எண்ணப்பட்டு ட்ரம்பின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# ஜெயாவின் சாவில் சி.பி.ஐ. விசாரணை நடத்தக்கோரி வழக்குத் தொடரப்பட்டது
## ஸ்ராலினும் வலியுறுத்தல்



சென்னை, டிசெ. 16
தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயாவின் சாவில் மர்மம் இருக்கிறது என்று சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகிவரும் நிலையில், இந்த விடயத்தில் முழுமையான சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும்என்று உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடரப்பட்டது.

தி.மு.கழகத்தின் பொருளாளரும் தமிழ் நாட்டு எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்ராலினும் ஜெயாவின் விடயத்தில் அனைவரினதும் திருப்திக்காக முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்- என்று வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு, தெலுங்கு யுவசக்தி என்ற அமைப்பின் சார்பில் சட்டத்தரணி சரவண் குமார் என்பவரே குறித்த வழக்கைத்தொடுத்துள்ளார்.

அரச நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியமானது. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சாவு குறித்து அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், சமூகத்தில் பிரபலமானவர்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சில தலைவர்கள் எனப் பலரும் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இதனால்அவரது இறப்பின் போது உடனிருந்தவர்களின் நேர்மைத் தன்மைகேள்விக்குரியதாக இருக்கிறது. எனவே, ஜெயலலிதா இறப்பில் ஏதேனும் சதித்திட்டம் உள்ளதா? என்ற சந்தேகம் எழுகிறது. ஜெயலலிதா உடல்நலமின்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவருடைய புகைப்படமோ -காணொலியோ எங்கும் வெளியிடப்படவில்லை.

அதே போல அவரை சந்திக்கவோ, தூரத்தில் இருந்து பார்க்கவோ எவருக்கும் அனுமதி வழங்கப்பட வில்லை. எனவே, இறப் பதற்கு முன்பு ஜெயலலிதாவின் உடல்நிலை, அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை ஆகியவற்றை விரிவான முறையில் அறிக்கையாக மருத்துவமனை நிர்வாகம் சமர்ப்பிக்க வேண்டும் என்று-உத்தரவிடவேண்டும். ஜெயாவின் இறப்புத் தொடர்பான விசாரணையை சி.பி.ஐ. இடம் ஒப்படைத்து நடத்த வேண்டும் என்று குறித்த வழக்கில் குறிப்பிடப்பட்டது. (ம-எ)

# பலத்த பாதுகாப்பில் பிரான்ஸ்
# பண்டிகைகள் நெருங்குவதால்

பரிஸ், டிசெ. 16
கிறிஸ்மஸ், புதுவருடப் பண்டிகைகள் நெருங்கும் நிலையில் பிரான்ஸ் முழுவதும் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக பிரான்ஸ் உள்ளது. நைஸ் நகரில் அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 86 பேர் கொல்லப்பட்டனர். முன்னதாக பரிஸ் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் 130 பேர் கொல்லப்பட்டனர். ஒட்டுமொத்தமாக கடந்த இரு வருடங்களில் 230 பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நடத்திய தாக்குதலால் உயிரிழந்துள்ளனர். பிரான்ஸில் இன்னும் பல தாக்குதல்கள் நடத்தப்படும் என்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஏற்கனவே எச்சரித்திருந்தது. மக்கள் நெரிசலாக இருக்கும் இடங்களை அந்த அமைப்பு குறிவைத்து தாக்குதல் நடத்துவதால் அவ்வாறான இடங்களுக்குதற்போது பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. பொலிஸார், இராணுவச் சிப்பாய்கள் என கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் தற்போது பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தலைநகர் பரிஸில் அதியுயர் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.



பண்டிகைக் காலம் நெருங்கி வரும்நிலையில் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் புருணோ லீ ரொக்ஸ் தெரிவித்தார்.

விடுமுறைக் காலமாக இக்காலத்தில் பிரான்ஸுக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அவர்களின் எண்ணிக்கையை இன்னும் அதிகரிப்பதுடன், உயர்மட்டப் பாதுகாப்பும் வழங்க வேண்டும்.

எமது மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கையையும் நாம் உறுதிசெய்ய வேண்டும்.

பிரான்ஸில் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதனால் ஜுலை மாதம் வரை அவசர நிலைப் பிரகடனமும் விடுக்கப்பட்டுள்ளது என ரொக்ஸ் மேலும் தெரிவித்தார்.

பிரான்ஸ் மட்டுமல்லாது ஐரோப்பாவின் ஏனைய நாடுகளும் தமது மக்களுக்கு உயர் பாதுகாப்பை வழங்க தீவிரம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசுகளையே இல்லாமல் செய்துவிட்டால் என்ன?

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினர், நேற்றுமுன்தினம் தாம் நடத்திய செய்தியாளர் கூட்டத்திற்கு கைகளில் கறுப்புப்பட்டி அணிந்து வந்திருந்தனர். அம்பாந்தோட்டையில் ஊடகவியலாளர் ஒருவரைக் கடற்படைத் தளபதி தாக்கிய சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் இவ்வாறு கறுப்புப்பட்டி அணிந்து கொண்டார்களாம். அதை அறிகின்றபோதே, எல்லாக் கட்சிகளையும் எதிர்க்கட்சிகள் வரிசையிலேயே அமர்த்திவிட்டால் இந்த இலங்கை உண்மையிலேயே சொர்க்கமாக இருக்கும் என்கிற சிந்தனை வருகின்றது. ஏனெனில், எதிர்க்கட்சியில் இருக்கும்போதுதான், எல்லாக் கட்சியினரும் பத்திரிகைச் சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் குரல் கொடுக்கிறார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் தலைகீழாகவே மாறிவிடுகிறார்கள்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்திலேயே இலங்கையில் ஊடக சுதந்திரம் மிக மிக மோசமாக இருந்தது. ஆட்சியை, அரசை விமர்சித்து எவரும் கருத்துத் தெரிவிக்க முடியாததொரு நிலைமை காணப்பட்டது. லசந்த விக்கிரமதுங்க, நிமலராஜன், சிவராம் உட்பட ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டார்கள். அரசுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட சிங்கள ஊடகவியலாளர்களும்கூடக் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டார்கள். பலர் உயிரைக் காத்துக் கொள்வதற்கு தப்பி வெளியேறவேண்டியிருந்தது.

"மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் 13 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களில் 10 பேர் தமிழ் ஊடகவியலாளர்கள். 87 ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் காணாமல் ஆக்கப்பட்டார்" என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். எனினும் இந்தக் காலப் பகுதியில் 18 ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று சுயாதீனத் தகவல்கள் உள்ளன.

உதயன் பத்திரிகையின் மீதும் அதன் ஊடகவியலாளர்கள் மீதும் மட்டும் இந்தக் காலப் பகுதியில் சுமார் 30க்கும் அதிகமான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.


ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கடத்தல் தொடர்பில் நடத்தப்படும் விசாரணையில் முப்படைகளிலும் மகிந்தவின் கீழ் இருந்த படையினருக்குத் தொடர்புகள் இருந்தன என்று வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, ஆட்சியாளர்களின் ஆசீர்வாதம் இல்லாமல் ஊடகவியலாளர்களின் மீதான தாக்குதல்களும் கொலைகளும் அரங்கேறியிருக்க முடியாது என்பது திண்ணம்.

ஆனால், இன்றோ, அவர்கள் ஒரு ஊடகவியலாளரொருவர் தாக்கப்பட்ட தற்காகக் கறுப்புப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள். ஊடக சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கிறார்கள். அதிகாரத்தில் இருக்கும் போது ஊடகங்களை அடக்குவதும், எதிர்க் கட்சியாகியதும் ஊடகங்களை அரவணைப்பதும், அல்லது எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஊடகங்களை அரவணைப்பதும், ஆட்சியைப் பிடித்ததும் அவற்றை எட்டி உதைப்பதும் இலங்கையின் வரலாற்றில் ஒன்றும் புதிதில்லைத்தான்.

இன்று ஆட்சியில் இருக்கும் அரச தலைவரும், தலைமை அமைச்சரும்கூட ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இதேபோன்று ஊடக சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்தார்கள்; போராடினார்கள். ஆனால் ஆட்சியைப் பிடித்த பின்னர், தம்மை விமர்சிக்கும் ஊடகங்களைத் தாமும் சகட்டுமேனிக்கு விமர்சிப்போம் என்று அச்சுறுத்தும் பாணியில் நாடாளுமன்றத்திலேயே தெரிவிக்கிறார்கள். அவர்களின் ஆட்சியின் கீழேயே கடற்படைத் தளபதி ஊடகவியலாளரைத் தாக்குகிறார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஆட்சியில் எந்தவொரு கட்சியையும் இருத்தாமல், எல்லாக் கட்சிகளையும் எதிர்க் கட்சி வரிசையிலேயே இருத்திவிட்டால் ஊடகங்கள் தொடர்பிலும், மக்கள் தொடர்பிலும் அவை என்றென்றைக்கும் மிக நல்லவையாகவே இருக்குமோ என்கிற நப்பாசை ஏற்படுகிறது. அது நடக்கக்கூடியதில்லை என்கிற யதார்த்தத்தில், எதிர்க்கட்சியில் இருக்கும்போது ஊடக சுதந்திரத்திற்காகக் குரல் கொடுப்பதும், ஆட்சிக்கு வந்ததும் ஊடக சுதந்திரத்தை நசுக்கும் விதத்தில் செயற்படுவதுமான போக்கை இங்குள்ள கட்சிகள் – அதற்குள் தமிழ்க் கட்சிகளும்கூட அடக்கம் – கைவிடவேண்டும். பொறுப்புடன்கூடிய சுதந்திரமான ஊடகங்களின் இருப்பை உறுதிப்படுத்தவேண்டும்.

# விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் செயற்பாடுகளை வழிநடத்திய அன்ரன் பாலசிங்கம்



மு.ஈழத்தமிழ்மணி

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியரும், அரசு – புலிகள் பேச்சுக்களின்போது பெரும்பங்களிப்பை வழங்கியவருமான அன்ரன் பாலசிங்கம் காலமாகி (14.12. 2006) பத்தாண்டுகளாகிவிட்டன.

பாலா அண்ணா எனப் பலராலும் மதிப்போடு அழைக்கப்பட்ட அன்ரன் பாலசிங்கம் விடுதலைப்புலிகளின் நம்பிக்கைக்குரிய ஆலோசகராக விளங்கினார்.

### அன்ரன் பாலசிங்கத்தின் தனிப்பட்ட வாழ்க்கை விவரம்

1938 ஆம் ஆண்டு பிறந்த அன்ரன் பாலசிங்கம், தமது தொழில் வாழ்க்கையை ஒரு பத்திரிகையாளராகத் தொடங்கினார். வீரகேசரிப் பத்திரிகையில் பணியாற்றிய அவர், பின்னர் இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் வேலையில் சேர்ந்தார். அருகில் அமைந்திருந்த பிரிட்டிஷ் கவுன்சிலில் பணியாற்றிய ஒரு யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்ணையே காதல் திருமணம் செய்து கொண்டார்.

கடுமையான நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட அவரது மனைவி சிகிச்சைக்காக இலண்டன் சென்றபோது மரணமடைந்தார். அதன்பின்னர் அன்ரன் பாலசிங்கம் ஆஸ்திரேலியாவில் தாதிய உத்தியோகம் புரிந்த பெண்ணான அடேல் என்பவரை 1978 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசின் காலத்தில், தமிழர்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக் கலவரத்தையடுத்து, அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகளுடன் நெருக்கமானார்.

தமது கணவரான அன்ரன் பாலசிங்கமும் தானும் பிரபாகரனைச் சந்தித்தபோது, பாலாவின் தனிப்பட்டவரலாறு பற்றியும், குறிப்பாகத் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தொடர்பான பாலாவின் கருத்துப்பற்றியுமே அறிந்துகொள்ள பிரபாகரன் ஆர்வம் காட்டியதாக அடேல் கூறியிருந்தார்.

"பாலாவின் அரசியல் எழுத்துக்களையும், சேகுவேரா, மாவோ சேதுங் ஆகியோரின் கெரில்லாப்போர் முறை பற்றிய பாலாவின் மொழி பெயர்ப்புகளையும் தம்பி ஏற்கனவே படித்திருந்தார். ஆனாலும் பாலாவுடையதும், என்னுடையதுமான போராட்ட உறுதிப்பாடு பற்றி பிரபாகரன் நம்பிக்கை வைப்பதற்கு இவை போதுமானதாக இருக்கவில்லை. லண்டனில், தமிழீழப் போராட்டம் குறித்து ஈழத்தமிழர்களது ஈடுபாடு உண்மையானதுதானா? என்பது பற்றி அவர் விரிவாக அறிய விரும்பினார். அதேவேளை, ஆயுதப் புரட்சிப் போராட்டம் ஒன்றை முன்னகர்த்த அரசியல் கோட்பாடும் செயற்பாடும் எவ்வளவு அவசியம் என்பதைத் தம்பிக்கு உணர்த்துப் பாலா முற்பட்டார். என அடேல் தெரிவித்திருந்தார்.

நாளடைவில் விடுதலைப்புலிகளின் நம்பிக்கையாளரான அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகராக விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டிருந்தார்.

புலிகளின் இராணுவ பலம் வெகுவாக விரிவடைவதற்கு பயிற்சித்திட்டம் போதுமானதாக இருக்கவில்லை. சரியான தருணத்தில் நிதியும் அவசியமாகியது. இல்லையெனில் இந்திய அரசு வழங்கிய ஆதரவோடு இயக்கத்தைக் கட்டியெழுப்புவது பிரபாகரனுக்குச் சிரமமாகவே இருந்திருக்கும்.

தமிழ் நாட்டில் மிகவும் சக்தி வாய்ந்தவரான முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனிடமிருந்து உதவி பெற்றுக்கொள்ள புலிகள் இயக்கம் முடிவெடுத்தது. அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்தை எம்.ஜி. ஆரிடம் தமது சார்பில் புலிகள் அனுப்பி வைத்தனர்.

தம்மிடம் புலிகளுக்காக நிதி உதவி கோரிய பாலசிங்கத்திடம் நான்கு கோடி ரூபாவை எம்.ஜி. ஆர் கொடுத்திருந்தார். விடுதலைப் புலிகளைப் பலப்படுத்துவதற்கு 1984 ஆம் ஆண்டு பாலா தமிழக அரசிடமிருந்து நிதியுதவி பெற்றுக் கொடுத்ததன் மூலம், விடுதலைப் புலிகள் மத்தியில் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஒருவரானார்.



திம்புப் பேச்சுவார்த்தைகள் முறிவு அடையும் கட்டத்தை எய்திக் கொண்டிருக்கையில் 17.08.1985 அன்று வடக்கு மாகாணத்தின் வவுனியாவில் இராணுவத்தினர் தமிழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் பலரை வெட்டிக் கொலை செய்திருந்தனர். இது போர் நிறுத் தத்தை மீறும் செயல் எனத் தீர்மானித்த புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறுமாறு இயக்கப் பிரதிநிதிகளுக்கு அறிவிப்பதென முடிவெடுத்தது. நேரடித் தொலைபேசி மூலமாக இந்தச் செய்தியை ஈ.என்.டி.எல்.எப். பிரதிநிதிகளுக்கு அறிவிக்குமாறு பாலா கேட்கப்பட்டார். பாலாவும் அப்படியே செய்தார். இதன் விளைவாக பேச்சுவார்த்தை முறிவடைந்தது. திம்புப் பேச்சுவார்த்தை முறிவடைய விடுதலைப்புலிகளின் ஆலோசகரான பாலாவே காரணமென இந்தியாவின் புலனாய்வுத்துறையான 'றோ' முடிவு கட்டியது. அதற்காக பாலாவை இந்தியா நாடு கடத்தியது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 3 நாள் பேச்சுக்கள் தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்கொக்கில் 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி தொடங்கியது. நாட்டில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் விடுதலைப் புலிகளும் அரசும் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகளை நோர்வே நாட்டின் தூதுக்குழு செய்திருந்தது. இதில் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான நால்வர் கலந்துகொண்டனர். அவரது மனைவியான அடேல் பாலசிங்கமும் கலந்து கொண்டிருந்தார் பேச்சுவார்த்தையின்போது இனப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காண்பது மிகவும் சிரமமான காரியமாக இருக்குமென அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தியிருந்தார்.

அரசு தரப்பினரால் குதர்க்கமாக விடுக்கப்பட்ட பல கேள்விகளுக்குத் தர்க்க ரீதியிலான பதிலை உடனுக்குடன் வழங்குவதில் சமார்த்திய திறமை கொண்டவரான பாலசிங்கத்தின் பதிலால், அரசுதரப்புப் பிரதிநிதிகள் பேசமுடியாது திணறிய பலசந்தர்ப்பங்களுமுண்டு.

**விடுதலைப்புலிகளது அரசியல் ஆலோசகராக அன்ரன் பாலசிங்கம்**

ஈழத் தமிழர் மத்தியில் ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றிருந்த நிலையில் இராஜதந்திர முயற்சிகளுக்கான சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. தமிழர் தாயகத்தில் விடுதலைப் புலிகள் கட்டமைத்துக் கொண்டதொரு நடைமுறை அரசை, படைபலத்துடன் அமைத்திருந்தபடியாலும், தமிழர் பிரதேசமும் உறுதியான ஆட்சிக்குரிய நிலப் பரப்பாக அமைந்ததாலும், விடுதலைப் போராட்டத்துக்கான அங்கீகாரம் சர்வதேசத்தை நோக்கி விரிவாக்கம் கொண்டிருந்த நிலையில், புலிகளின் சர்வதேச இராஜ தந்திரியாக பாலசிங்கம் உருவானார். விடுதலைப் புலிகளின் போர்த்திறமைகள் யாவும் பன்னாடுகளால் பேசப்படுகின்ற நிலைக்கு வந்து கொண்டிருந்தது. அதேசமயம் இராஜதந்திர முயற்சிகளுக்கான புறச்சூழலும் அப்போது கணித்திருந்தது.

மிகவும் புத்திக்கூர்மை வாய்ந்த பாலசிங்கம், புலிகளின் தலைமைப் பேச்சாளராகவும் செயற்பட்டு, சர்வதேச அரங்கில் முக்கிய ராஜதந்திரிகள் மத்தியில் அறியப்பட்டவராகவும், தமிழர் பிரச்சினகளை, ஆயுதப் போராட்டத்தின் தற்பாரியங்களை, நியாயத்தன்மைகளை விளக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த மனிதராக, பெரு மதிப்பைப் பெற்றவராகவும் விளங்கினார்.

> மிகவும் புத்திக் கூர்மை வாய்ந்த பாலசிங்கம், புலிகளின் தலைமைப் பேச்சாளராகவும் செயற்பட்டு சர்வதேச அரங் கில் முக்கிய ராஜதந்திரிகள் மத்தியில் அறியப்பட்டவராகவும், தமிழர் பிரச்சினகளை, ஆயுதப் போராட்டத்தின் தற்பாரியங்களை, நியாயத் தன்மைகளை விளக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த மனிதராக, பெரு மதிப்பைப்பெற்றவராக விளங்கினார்.

இலங்கை அரசின் தவறான இராஜதந்திர அணுகுமுறைகளை அன்ரன் பாலசிங்கம் வெளிநாட்டில் நடைபெற்ற பேச்சுக்களின்போது அம்பலமாக்கினார். தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தின் உண்மையான தேவையைப் பன்னாட்டுச் சமூகத்துக்கு தெரியப்படுத்தி, இலங்கை அரசின் ஏமாற்றும் போக்கை பல தடவைகளில் அவர் முறியடிக்க வேண்டியிருந்தது.

ஆயுதப் போராட்ட வழிமுறைக்கும், இராஜதந்திர வழிமுறைக்கும் இடையில் நிலவிய வெளியை நிரப்பக்கூடிய ஆற்றல் உள்ளவராக அன்ரன் பாலசிங்கம் இருந்தமையால், அரசியல் இராஜ தந்திர செயற்பாடுகளை, மிகக் கடினமான சூழ்நிலைக்குள்ளிருந்து கொண்டு தான் தனது இறுதிக் காலம் வரையில் முன்னெடுத்துக் கொண்டிருந்தார்.



விடுதலைப் புலிகளின் தலைமையும், பாலாவும், திருமதி அடேலும் தம்மிடையே நல்ல புரிந் துணர்வை நீண்ட காலமாக வைத்திருந்தனர். புலிகள் அமைப்பை ஒரு தேசிய விடுதலை இயக்கமாக வளர்த்தெடுப்பதற்கான அரசியல் பணிகளைப் புரியவேண்டும் என்ற பேரவாக் கொண்டவர்களாக பாலசிங்கம் தம்பதியர் திகழ்ந்தனர்.

விடுதலைப் புலிகளது தலைமையோடு நெருக்கமான உறவையும் புரிந்துணர்வையும் கொண்டிருந்தமையால், புலிகளின் செயற்பாடுகள் பற்றிய விவரங்களை, இவர்களிருவரோடு பகிர்ந்து கொள்ளத்தக்க நம்பிக்கைக்குரியவர்களாக இவர்கள் ஆகியிருந்தனர். போராளிகள், போராட்டங்கள் சம்பந்தப்பட்ட யாவற்றிலும் அன்ரன் பாலசிங்கத்துக்கு பொறுப்புணர்வும் கடப்பாடும் இருந்தன.தமிழ் மக்கள் அரசியல் விழிப்போடு இருந்ததுபோல், சிங்கள இடது சாரிகளும் விழிப்பாக இருந்தார்கள். தனித் தமிழ் அரசுக்கான கோரிக்கை சர்ச்சைக்குரிய விவாதத்தைத் தோற்றுவித்தது.

**சிங்கள இடதுசாரி அரசியல்வாதிகளைச் சாடிய அன்ரன் பாலசிங்கம்**

இடதுசாரிச் சிங்கள அரசியல்வாதிகளிடையேயும் புரட்சியாளர்களிடையேயும் ஏற்பட்ட வெளிப்படையான கோட்பாட்டுக்குழப்பம், அன்ரன் பாலசிங்கத்திற்கு கடும் சீற்றத்தைக் கொடுத்தது. இந்தக் கோட்பாட்டுக்குழப்பத்தை, தீர்க்கும் வகையில் ஆவணம் ஒன்றைப் பாலா தயாரித்தார். அதில் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை மார்க்சிய - லெனினிச சிந்தனையின் அடிப்படையில் நியாயப்படுத்தினார்.

தமிழ்த் தேசியப் பிரச்சினை பற்றியது என்ற பெயரில் அதனைப் பிரசுரமாக பொதுமக்களிடத்தில் விநியோகித்தார். இதையடுத்து அன்ரன் பாலசிங்கம் தமது இரண்டாவது வெளியீட்டை "சோசலிச தமிழீழத்தை நோக்கி" என்ற தலைப்பில் தமிழில் எழுதி வெளியிட்டார். இந்த வெளியீடு விடுதலைப் புலிகளின் தலைவரைச் சென்றடைந்தது. பிரபாகரன் இந்த நூலைப்படித்தார். அதன் உள்ளடக்கம் அவரைக் கவர்ந்தது. அதையடுத்தே பிரபாகரனுடனான அன்ரன் பாலசிங்கத்தின் உறவு பலப்பட ஆரம்பித்தது. தமிழ் மக்களின் போராட்டம் நியாயமானது என்றும், அதற்கு ஊழியம் புரிவதே தர்மம் என்றும் அவர் கருதியதால், புரட்சிப் போக்கு அரசியலையே அவர் தேர்ந்தெடுத்தார். புரட்சிகரமான அரசியலையே தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்துக்கும் இனத்தின் சார்பான அரசியல் பிரச்சினைகளுக்கும்கையாண்டிருந்தார்.

மனோபலம், முதிர்ச்சி, விவேகம், கொள்கைப்பிடிப்பு, அடக்கம், ஆன்மிகப் பண்புகள்என்பன ஒருங்கேஅமைந்த ஆளுமை மிக்க மனிதரான அன்ரன் பாலசிங்கம் தொலை நோக்குள்ள சிந்தனையாளர். நீண்டகாலமாக அவருக்கிருந்த நீரிழிவு நோய் காரணமாக, அவரது இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து போனதால் சிறுநீரக மாற்றுச்சிகிச்சை 2000ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டில் லண்டனில் தொடர்ச்சியாக வைத்திய பராமரிப்பி லிருந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி 68 ஆவது வயதில் காலமானார்.

மறைந்த அன்ரன் பாலசிங்கத்துக்கு தேசத்தின் குரல் என்ற அதி உயரிய கௌரவத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அறிவித்தார். அன்ரன் பாலசிங்கம் போரும் சமாதானமும் விடுதலை ஆகிய நூல்களை எழுதியிருந்தார்.

இந்த நூற்றாண்டின் அதி உயர் இராஜதந்திரியான அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு ஈழத் தமிழ்மக்களுக்கு என்றுமே பேரிழப்பு. முற்றுப் பெறாத ஈழத்தமிழர்களினது எதிர்காலத் தீர்வுக்கு அன்ரன் பாலசிங்கத்தின் ஆலோசனைகளும் அவரது வகிபாகமும் முக்கிய இடத்தைத் தொட்டுநிற்கும்.



# வாசகர் திருமுகம்

## பொறுப்புடன் செயற்பட வேண்டும்

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பீட கலைப்பிரிவால் கோரப்பட்ட கலைப் பட்டதாரி நெறிக்கான விண்ணப்பத்துக்கு அதிக எண்ணிக்கையானோர் விண்ணப்பித்து, அதற்கான பரீட்சைக் கட்டணத்தை இலங்கை வங்கிக் கிளையில் செலுத்தியும் உள்ளோம். இருப்பினும் இதுவரைகாலமும் பரீட்சை குறித்து எவ்வித தகவல்களும் எமக்கு கிடைக்கப் பெறவில்லை. இது குறித்து வெளிவாரி பீட கலைப்பிரிவு தெளிவுபடுத்துவதுடன், ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் ஒரு முன் மாதிரியாக செயற்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தாழ்மையுடன் வேண்டி நிற்கிறோம்.

*பாதிக்கப்பட்ட*
*விண்ணப்பதாரிகள்*

## முதலமைச்சருக்கு இது சமர்ப்பணம்

வடமாகாணசபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியை ஆறு மில்லியனில் இருந்து 10 மில்லியன் வரை அதிகரிக்க வேண்டுமென மாகாணசபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை சில மாகாணசபை உறுப்பினர்கள் உரிய வகையில் பயன்படுத்துவதில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் மக்களிடமிருந்து எழுந்துள்ள நிலையில், நிதியை அதிகரிப்பதற்கு முன்னர், ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு உரிய வகையில் செலவு செய்யப்பட்டதா என்பது குறித்து முதலமைச்சர் ஆய்வு செய்ய வேண்டும் என்ற கருத்தும் பொது மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது.

மக்கள் நலத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதி தவறான விதத்தில் பயன்படுத்தப்படுமானால், அதனை அனுமதிக்க முடியாது என்பதைச் சகலரும் ஏற்றுக் கொள்வர் என்பது திண்ணம்.

முதலமைச்சரே இது உங்களுக்குச் சமர்ப்பணம்.

பா.இராகுலன்
மந்திகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## திறமை !!!!!

உங்களுக்கு எந்த விடயத்தில் திறமை உள்ளதோ அதிலேயே கவனத்தையும், நேரத்தையும் அதிகம் செலுத்துங்கள். மற்ற விடயங்களுக்காக அதிக நேரம் செலவழிக்காதீர்கள்.



## தோட்டத்துப் புற்கள்

தோட்டத்தில் உள்ள புற்களே
சோகமாய் இருப்பதேன் சொல்லுங்கள்.
தோட்டக்காரரையா வந்தாரே - நாங்கள்
தொல்லை தருவதாய் சொன்னாரே.
புற்களே புற்களே நீங்கள் யார்?
அவர் ஏன் உன்னை வெறுக்கிறார்?
திருட்டுத்தனமாய் நாங்கள் வந்தோம்
தண்ணீர் உரம் திருடித் தின்றோம்
அய்யோ! அய்யோ! பேசாதீர்
என் தோட்டத்திற்கு வர மறுக்காதீர்.
தோப்பில் வளர நீ விடுவாயா?
தொல்லை தருவதாய் சொல்வாயா?
ஆடும் பசுவும் மேய்ந்திடவே
அழைக்கிறேன் உன்னை வா! வா! வா!



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....





## வரலாற்றில் இன்றைய தினம்

1707 - ஜப்பான் பியூஜி எரிமலை வெடித்தது. இதுவே அந்த எரிமலை கடைசியாக வெடித்ததாகப் பதிவு.

1988 - ஜனாதிபதித் தேர்தல் நடந்தே தீரும் என தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு.

\- நாவற்குழியில் இளைஞன் சூட்டினால் சாவு.

1993 - மட்டக்களப்பில் சுற்றி வளைப்பு. ஆயிரம் தமிழர்கள் வரை கைது. இராணுவ முகாம்களில் வைத்து சித்திரவதை.

\- மூதூரில் முஸ்லிம் ஊர் காவற் படையினர் தமிழர் மீது கெடுபிடி.

1999 - தனங்களப்பைக் கடப்பதற்கு புலிகள் முயற்சியென படைத்தரப்பில் அறிவிப்பு.

\- நீதிமன்ற உத்தரவுகள் உதாசீனம் செய்யப்பட்டால் விபரீத நிலைமை யாழ்.நீதிவான் பொலிஸாருக்கு எச்சரிக்கை.



## எது வெற்றி?

- 4 வயதில், தனியாக நடக்க முடிந்தால், அது வெற்றி!
- 8 வயதில், தனியாக வெளியே சென்று வழி தவறாமல் வீடு திரும்பினால், அது வெற்றி!
- 12 வயதில், நல்ல நண்பர்கள் கிடைத்தால், அது வெற்றி!
- 18 வயதில், வாகன ஓட்டுனர் உரிமம் பெற்றால், அது வெற்றி!
- 22 வயதில், பட்டதாரியாக பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறினால், அது வெற்றி!
- 25 வயதில், நல்ல வேலை கிடைத்தால், அது வெற்றி!
- 30 வயதில், தனக்கெனக் குடும்பத்தை அமைத்துக்கொள்ள முடியுமானால், அது வெற்றி!
- 35 வயதில், போதுமான அளவு சம்பாரிக்க முடியுமானால், அது வெற்றி!
- 45 வயதில், இளைஞரைப் போன்ற உருவத்தை தங்கவைக்க முடியுமானால், அது வெற்றி!
- 50 வயதில், தன் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை அளிக்க முடியுமானால், அது வெற்றி!
- 55 வயதில், எம் கடமைகளைத் தொடர்ந்து சரியாகச் செய்ய முடியுமானால், அது வெற்றி!
- 60 வயதில், ஓய்வு பெறவேண்டியவர் என நிராகரிக்கப்படாமல் செயலாற்ற முடியுமானால், அது வெற்றி!
- 65 வயதில், நோயில்லாமல் வாழ முடியுமானால், அது வெற்றி!
- 70 வயதில், மற்றவர்களுக்குப் பாரமில்லாமல் வாழ முடியுமானால், அது வெற்றி!
- 75 வயதில், பழைய நண்பர்களுடன் உறவாடி மகிழ முடியுமானால், அது வெற்றி!
- 80 வயதுக்கு மேல் மற்றவர் துணையில்லாமல் வெளியே சென்று வழி தவறாமல் வீடு திரும்ப முடியுமானால், அது வெற்றி!



## கடவுள் இருக்கிறார்

ஒரு குருகுலத்தில் குருவாயிருந்தவரிடம் சீடன் ஒருவன், கடவுள் ஏன் அவர் இருப்பதை வெளிப்படுத்துவதில்லை? என்று கேட்டான்.

குரு அதற்கு ஒரு கதையைச் சொன்னார்:

கடவுள் இருக்கிறார் என்று நம்பிய ஒரு மனிதன் மெல்லச் சொன்னான், கடவுளே! என்னோடு பேசுங்களேன்! அப்போது குயில் ஒன்று பாடியது. அதைக் காதில் வாங்காத அவன், உரத்த குரலில் கத்தினான், கடவுளே, என்னோடு பேசுங்களேன்! உடனே சப்தமான இடியோசை எழுந்தது.

அதையும் பொருட்படுத்தாத அவன், கடவுளே நீ பேசாவிட்டாலும், உன் தரிசனமாவது எனக்குத் தரக்கூடாதா? என்று இறைவனிடம் கேட்டான்.


அப்போது சுடர்விட்டுப் பிரகாசித்தபடி, வானில் ஒரு நட்சத்திரம் தோன்றியது. அவன் அதையும் கவனிக்காமல் இருந்தான்.

கடவுளே, எனக்காக ஏதாவது ஓர் அற்புதம் நிகழ்த்த மாட்டாயா? என்றான் அவன்.

கடவுள் மெல்லக் கீழே இறங்கி வந்து, பட்டாம் பூச்சியாக மாறி அவனைத் தொட்டார். அவனோ தன் மேல் அமர்ந்த பட்டாம்பூச்சியை கைகளால் தட்டிவிட்டபடி சொன்னான். கடவுள் இல்லை... இருந்திருந்தால் என்னோடு பேசி இருப்பார், பார்க்க முடிந்திருக்கும். அற்புதமாவது நிகழ்ந்திருக்கும் எதுவுமே நடக்கவில்லையே... என்று சொன்னான் அவன்.

கதையைக் கேட்ட சீடன் சொன்னான்;

புரிந்தது குருவே! கடவுள், தான் இருப்பதை வெளிப்படுத்திக் கொண்டு தான் இருக்கிறார். நாம் தான் அதைப் புரிந்து கொள்வதில்லை...



## நிறைய நல்ல புத்தகங்களைப் படியுங்கள்

நிறைய நல்ல புத்தகங்களைப் படியுங்கள்.

எங்கு சென்றாலும், பிரயாணத்தின் போதும் ஒரு புத்தகத்துடன் செல்லுங்கள். காத்திருக்கும் நேரத்தில் வாசியுங்கள்.


உங்கள் பிரச்சினைகளை ஒரு தாளில் பட்டியலிடுங்கள். இவ்வாறு பட்டியலிடும்போதே உங்கள் மனப்பாரம் கணிசமாகக் குறையும். அதற்கான தீர்வு இதன் மூலம் கிடைக்கவும் வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2017 - 2020

சுப ஸ்ரீ துன்முகி வரும் தை மாதம் [26.01.2017] 13ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7:29 மணியளவில் சனிபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசுராசிக்குள் பிரவேசிக்கிறார். இங்கு அவர் 24.01.2020 வரை 3 ஆண்டுகள் சஞ்சாரம் செய்கிறார்.

**சனிபெயர்ச்சி ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் எவ்வாறானதாகப் பார்ப்போம்.**




**மேடம்**

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம் இராசிக்காரர்களுக்கு, சு, செ, சே, சோ, சொ, சை, ல, லி, லு, லோ, அ, ஆ, ஆகிய எழுத்துக்களில் பெயரை முதல் எழுத்தாகக் கொண்டவர்களும் சித்திரை மாதத்தில் பிறந்தவர்களுக்கும் இந்தப் பலன்கள் ஓரளவு பொருந்தி வரும்.

வான மண்டலத்தில் உள்ள ராசிகளில் முதல் ராசியான நவக்கிரகங்களில் மிகவும் பலம் வாய்ந்த கிரகமான செவ்வாயின் வீட்டுக்கு உரிய வரான மேடராசி நேயர்களே எவரையும் வசீகரிக்கும் ஆற்றலும் எதையும் தைரியமாக எதிர் கொள்ளும் வீரமும் அதிகமான தன்னம்பிக்கையும் உடையவர்கள் ஆவீர்கள்.

உங்கள் ராசிநாதனாக செவ்வாய் பகவான் விளங்குவதால் எதிலும் முதன்மையானவராகவும், எதையும் தலைமை ஏற்று நடத்தும் வல்லமையும் கொடுத்த வாக்கை காப்பாற்ற எதையும் இழக்கத் தயாராகவும் .இருப்பீர்கள். எடுத்த காரியங்களை முடிப்பதில் ஆர்வம் உடைய நீங்கள் அஞ்சா நெஞ்சமும் தைரியமும் வீரமும், விவேகமும் உடையவர்கள்.

இதுவரை உங்கள் ராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்து வந்த சனிபகவான் இதுவரையும் சொல்லொணாத் துயரங்களையும் துன்பங்களையும் அளித்ததோடு வீண் .வழக்குகள் பிரச்சினைகள், போராட்டங்கள், மனகுழப்பங்கள், அசிங்கம், அவமானங்கள் ஏற்பட வைத்து உங்களை ஒரு வழி பண்ணிவிட்டார். வேலையில் பிரச்சினை, விபத்து, சத்திரசிகிச்சை இப்படி பலதரப்பட்ட பிரச்சினைகளால் அல்லற்பட்டு வேதனைப் படவைத்தார். சனி பகவானுடன் உங்கள் ராசிநாதனாகிய செவ்வாயும் சேர்ந்து கடந்த 6 மாதங்களாக சொல்லொணாத் துன்பங்களைக் கொடுத்து வந்தார்.

இப்பேர்ப்பட்ட சனிபகவான் உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தில் அதாவது தனுசு ராசிக்கு பெயர்ச்சியாவது உங்களுக்கு மிகவும் நற்பலன் என்று தான் கூற வேண்டும். 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் தெய்வ அனுகூலத்தை உண்டு பண்ணுவார். மேலும் உங்களது ராசிக்கு ராகுபகவான் 5ஆம் இடத்திலும், குருபகவான் 6 ஆம் இடத்திலும், கேது பகவான் 11 ஆம் இடத்திலும் சஞ்சரிப்பது ஓரளவு நற்பலன் ஆகும்.

சனிப்பெயர்ச்சியால் இதுகாறும் உங்களுக்கு ஏற்பட்ட தடை நீங்கி எதிலும் சுயமாகவும், விரைவாகவும் செயற்பட ஆரம்பிப்பீர்கள். எப்பொழுதும் சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் செயற்படுவீர்கள். எதிலும் தலைமை ஏற்று நடத்தும் வண்ணம் உங்கள் செயற்பாடு அதிகரிக்கும். உங்களது மதிப்பும், மரியாதையும் உயரும். மற்றவர்கள் உங்களை நேசிப்பது மட்டுமில்லாமல் உங்கள் நட்பை விரும்பி போற்றுவர். உங்களை அறியாமலேயே ஒரு உற்சாகம் தொற்றிக்கொள்ளும். சமூகத்தில் நல்ல பெயருடன் வலம் வருவீர்கள். பேச்சில் சாமர்த்தியம் கூடும். பணப்புழக்கம் சற்று தாராளமாக இருந்து வரும். உங்கள் பேச்சை மற்றவர்கள் மதித்து நடப்பர். புதிய ஆடை ஆபரணங்கள் வந்து சேரும். எதிர்பாராத தனவரவும், பொருள்வரவும் ஏற்படும். வெளியில் இருந்த பத்திரங்கள், நகைகள் கைக்கு வந்து சேரும். உடன் பிறந்த சகோதர, சகோதரிகளால் நன்மை ஏற்படும். அவர்களுக்கு சுபகாரியங்கள் நடந்தேறும். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். உங்களைப் பற்றிய செய்திகள் பரவலாக பரவும். அவை நல்லவிதமாக அமையும்.

அடிக்கடி பயணங்கள் ஏற்படும். நீண்ட தூர பிரயாணங்கள் ஏற்படும். வீடு, இடம், மனை மாற்றம் ஒரு சிலருக்கு அமையும். உறவினர்களால் நன்மை ஏற்படும். எதிர்பார்த்த செய்திகள் சாதகமாக வந்து சேரும். எடுக்கும் புது முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். புதுப்புது விடயங்களைக் கற்பதில் ஆர்வம் அதிகரிக்கும். தாயாரின் அன்பும்-ஆதரவும் இக்காலங்களில் நன்கு அமையும். மேலும் ஒரு சிலருக்கு இடம், மனை, வீடு, வண்டி, வாகனங்கள், நிறைய வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்க வாய்ப்புகளும், சந்தர்ப்பங்களும் அதிகரிக்கும். மேலும் அடிக்கடி சுப நிகழ்ச்சிகளில், சுப காரியங்களில் கலந்துகொள்ள வாய்ப்புக் களும், சந்தர்ப்பங்களும் வந்து சேரும்.

விருந்து கேளிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டாமல் சற்று பொறுமையுடன் இருத்தல் வேண்டும். உங்களுடைய 5 ஆம் இடத்தில் ராகு சஞ்சாரம் செய்வதால் விருந்து கேளிக்கைகளில் பிரச்சினைகள் ஏற்படும். மேலும் குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். இருப்பினும் கடும் போராட்டத்துக்கு பின் புத்திர பாக்கியம் ஏற்படும். 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகு புத்திர சோகத்தை உருவாக்குவார். பங்கு சந்தையில் தேவையில்லாமல் முதலீடு கூடாது. தேவையில்லாமல் பிறருக்கு கடன் கொடுத்தல் கூடாது. குழந்தைகளால் நன்மையும், அதே சமயம் அவர்களால் தேவையற்ற பிரச்சினைகளும் ஏற்பட்டு விலகும். வேலை தேடுபவர்களுக்கும், இதுவரை வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கும் நல்ல வேலை வாய்ப்புக்கள் அமையும். சந்தர்ப்பங்களும் சேர்த்து வரும். சுய தொழில் செய்ய வாய்ப்பும், தள்ளிப் போன திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்க சந்தர்ப்பங்களும் வந்து சேரும்.

**பெண்களுக்கு**

9 ஆம் இடத்தில் சனி சஞ்சாரம் செய்வதால் ஓரளவு தெய்வ அனுகூலம் ஏற்படும். அதே சமயம் குரு பகவான் 6ஆம் 7ஆம் பாவங்களில் சஞ்சாரம் செய்யும் காலங்களில் திருமணம் நடைபெற சந்தர்ப்பங்கள் அமையும்.

மேலும் இதுவரை நடவாமல் தள்ளிப்போன சுபகாரியங்கள் இனிதே நடந்தேறும். மேலும் குழந்தை பாக்கியத்தில் ஆரம்ப காலங்களில் தடை ஏற்பட்டு, ராகு பெயர்ச்சிக்கு பின் நல்லபடியாக குழந்தை பிறக்க சந்தர்ப்பம் அமையும். குடும்பத்தில் புது உறுப்பினர் வருகை அமையும். ராகு 5 ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்வதால் குழந்தைகளால் மன வருத்தங்களும் வேதனைகளும் ஏற்பட்டு விலகும்.

கணவன்-மனைவி உறவு சுமாராக இருந்து வரும். கணவரின் உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. வேலைக்குச் செல்பவர்களுக்கு வேலையில் முன்னேற்றம் ஏற்படும். ஒரு சிலருக்கு உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் கிட்டும். பார்க்கும் வேலையில் அதிக கவனம் தேவை. அவசரப்பட்டு பார்க்கும் வேலையை விட்டு விடுதல்கூடாது. அடிக்கடி பயணங்கள் அதிகரிக்கும். சனி 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் காலங்களில் வெளியூர், வெளி மாவட்டம், வெளிநாடு செல்ல வாய்ப்புக்கள் வந்து சேரும்.

## நாளை

**மார்கழி-02**

சனிக்கிழமை -17.12.2016
திதி: சதுர்த்தி பி.இ.12.07
நட்சத்திரம்: பூசம் மா.06.18
ராகுகாலம்:09.22-10.52 வரை
சுபநேரம்:03.22-04.52வரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

# நிதியும்-நீதியும்-நிர்க்கதியில்! ஜனநாயகம் ஏய்க்காட்டப்படுகிறது!

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை ஜனநாயகம் என்பதான மக்கள் உரிமை திருவிழாக் காணுகின்றது. தேர்தல் அறிக்கை, தேர்தல் விஞ்ஞாபனம், விளம்பரங்கள், ஊர் ஊராய் சுற்றித்திரிந்து கூட்டம் போடும் சுயநல நாட்டங்கள் என அத்தனையும் நிதியின் பிடி கொண்டு நீதியற்று பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. இதனிடை திருவிழா முழுமை என்பதோ ஜனநாயகம் என்ற உயரிய பண்பின் அருளலோடு மக்கள் பிரதிநிதித்துவம் என்ற திருமுகப்பொலிவை உரிமை பேசலுக்கான ப(பா)லமாக தந்து ஓய்வுறுகிறது. இந்த நிலையிலே மேற்போந்த ஆரம்பங்களுக்கான மக்கள் ஆணையின் ஓய்தல் என்பது பயணக்காலத்தின் வரையறையை உடைய கால ஓட்டத்தின் ஆரம்பங்களில் வீரியமாக நடை போடுகின்றபோதும் காலச் சுழிவினுள் உரிமை பேசல் என்ற பலங்களில் இருந்து பயனற்ற இளைப்பாறலாக சாய்வுநிலையை எப்போதும் பெற்று நிற்கிறது. எப்போதும்போல தற்கால நகர்வினுள்ளும் பற்றியிருக்கிறது.வேகம்-விவேகம் என்ற வீரத்தனங்களின் சூட்சுமங்கள் மட்டுப்படுத்தப்பட்டதோடு ஜனநாயகங்கள் அரசின் இராஜ தந்திரங்களினுள் கட்டுப்பட்டு, தட்டுத் தடுமாறவும் வல்லரசுகளின் எல்லைகளோடு நல்லிணக்கம் என்பதாக முட்டுப்படவும் நேர்ந்திருக்கிறது.

ஓய்வுநிலை-சாய்வுநிலை என்ற சமாந்தரங்களிடை ஒத்திசைவான வலுப்பெறலை பெற்றுக்கொள்ள தமிழர் தலைமைகள் தடுமாற்றமின்றி பையப் பைய அன்றி, நீண்டு நிதானித்து நடைபயில வேண்டியிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்திலே இலங்கையின் வடக்காக உள்ள தமிழர் பிராந்தியங்களுக்கான அபிவிருத்தி சார் நிதியும்-நீதியும் -சமத்துவம் தரவில்லை.மிகப் பிரதானமாக போர் முடிவுற்றதன் பின்பான மாகாண சபை உருவாக்கமும் மத்திய அரசை நோக்கியதான தமிழர் பிரதிநிதித்துவங்களின் அசைவியக்கமும் இதனை எடுத்துக்காட்டி நிற்கின்றது.குறிப்பாக 2017 ஆம் ஆண்டுக்குரித்தான வடமாகாணசபைக்கான நிதி மூலங்களின் கோரிக்கை என்பது 16 சதவீதமே முடிவுறுத்தப்பட்டுள்ளது.ஏனையவை நிலுவையில் போடப்பட்டுள்ளது.இதனிடை உறுப்பினர்கள் மக்களோடு ஒன்றித்து சேவை செய்வது என்ற தன்னிலைகளை மறந்து ஏவல் புரிவதில் ஆர்வம் காட்டுகின்றனர். பிரமாண அடிப்படை என்ற கோவணத்துண்டைப் பற்றிப் பிடிக்கின்றனர். இவை தாண்டி வலுவாக செயற்பட்டு தமிழருக்கான உரித்துக்களை பெறுவதில் இருந்து வார்த்தை ஒப்பாசரங்களின் காட்சிப் படுத்தலோடு விடை பெற்றுக்கொள்கின்றனர்.

இதனிடை மத்தியில் அமர்ந்து சத்தியம் தவிர்த்து அசாத்தியம் பேசும் வல்லமைகளும் தமிழர்களுக்கான




நீதியை தருவதற்கு இன்னமும் தங்களுக்குள் ஒத்திசைந்து செயற்பட முன்வரவில்லை. இனவாத சாயம் பூசி கருத்துரைப்பதிலேயே விடாப்பிடியாக நின்று கொண்டுள்ளனர். குறிப்பாக மாகாண சபைகளுக்கான காணி பொலிஸ் அதிகாரங்களை பகிர்வதற்கும் ஆளுநரின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கும் தாம் உடன்படமாட்டோம் என ஜே.வி.பி கருத்துரைத்துள்ளது. அதேபோன்ற கூட்டாட்சி தீர்வுத் திட்டத்துக்கு நாடாளுமன்றில் ஆதரவு கிடைக்காது. புதிய அரசமைப்பில் இதற்கு இடமில்லை. சிங்கள பௌத்தர்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற தொனிப்பட கருத்துக்களை ஹெல உறுமய மென்று விழுங்கியுள்ளது. தமிழர்களுக்கான உரிமை நிதானங்களை நிந்தித்துள்ளது.

ஆக,இவை அனைத்தையும் தாண்டி சர்வதேசத்தின் தந்திர எல்லைகளுக்குள் மட்டுப்பட்டுள்ள போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்பான பதில் சொல்லல் என்பதும் நீதி தரல் என்பதும் தீர்வின் பொருள் முகமாக முன்னிலைப் படவில்லை. மேலோட்டமான பார்வைகளினுள் அரச நகர்வுகள் நல்வடிவமாக தோற்றம் தருகின்ற போதும், நீதி சமத்துவம்,இணக்கம் என்ற பொதியிடல்களினுள் உப்பி செரித்துக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களுக்கான நிதியும்-நீதியும் நிர்க்கதியில் நின்றிருக்கிறது! ஜனநாயகம் ஏய்க்காட்டப்படுகிறது.! இவை யதார்த்தமானவை. எவரும் உணர்ந்து கொள்ளக்கூடியவை. காலம் புரிந்து நடக்க வேண்டியவர்களை தட்டிக்கொடுக்க வேண்டும்! அவர்களும் தங்கள் செயல்நிலைகளில் விரைவுற வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவநாயகம் தேவானந்த்

# போர் என்றால் மக்கள் சாகத்தான் செய்வார்கள் என்றவர் தான் ஜெயலலிதா

10



ஜெயலலிதா ஈழத்தமிழர்களுக்கு எதிரான பார்ப்பனீய ஊடகங்களான தினமலர் போன்ற ஊடகங்களுடனும், இந்து பத்திரிகையின் ஆசிரியர் ராம், துக்ளக் சோ மற்றும் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி போன்றோரின் ஆலோசனைகள் வழிகாட்டலின்படியே தனது ஆட்சியைக் கொண்டு நகர்த்தினார் என்பது அரசியல் விமர்சகர்களினது கருத்தாகும். இதனால் அவர் தனது ஆட்சிக்காலம் முழுவதும் ஈழத்தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்திருந்தார் எனலாம். ராஜீவ் காந்திகொலை செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட நிலைமைகள் ஜெயலலிதாவின் நிலைப்பாட்டுக்கு மேலும் வலுச்சேர்த்திருந்தன.

தமிழ்நாட்டில் தி.மு.க ஆட்சி, ஈழத்தமிழர் விவகாரத்தில் மென்போக்கையே கடைப்பிடித்து வந்திருக்கிறது. ஒருவகையில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவானதான தளத்தையே அது பேணி வந்தது என்றும் சொல்லலாம். கருணாநிதியின் இந்த நிலைப்பாட்டுக்கு நேர் எதிரான நிலைப்பாட்டையே ஜெயலலிதா கொண்டிருந்தார். இது அவரது அரசியல் தந்திரோபாயமென்றாலும், மேலே குறிப்பிட்ட தமிழர் எதிர்ப்பாளர்களால், அது இந்தியத் தமிழராக இருந்தாலென்ன, இலங்கைத் தமிழராக இருந்தாலென்ன, தமிழர்களுக்கு எதிரான போக்கைக் கொண்டவர்களாக தம்மை இனங்காட்டிக் கொண்டவர்களால், ஜெயலலிதா மூளைச்சலவை செய்யப்பட்டு ஈழத்தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை உண்மையிலேயே கொண்டிருந்தார் எனலாம். இது அவரால் மனதளவில் விரும்பி மேற்கொள்ளப்பட்ட ஒன்று எனலாம்.

**தமிழ் அறிஞர்களை அனுமதிக்காதமையை அவமதிப்பாகக் கருதிய தமிழ் மக்கள்**

இதற்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு, 1995 ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தந்த சுவீடன் நாட்டின் உப்சாலா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வேலுப்பிள்ளை மற்றும் சுவீடன் அறிஞர் பீட்டர் ஷால்க், இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் விமான நிலையத்திலேயே திருப்பி அனுப்பப்பட்டனர். இவர்களால் தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ஜெயலலிதா அரசினால் காரணம் கூறப்பட்டது.

உலகறிந்த தமிழ் அறிஞர்கள் உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகிறார்கள் என்பதைத் தெரிந்திருந்தும், அவர்களைத் திருப்பி அனுப்பியது என்பது, உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்கான அவமானமாகப் பார்க்கப்பட்டது. இது தமிழகத்துக்கான தீராத அவமானத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்தக் கறைபடிந்த வரலாற்று நிகழ்வுக்கும், ஜெயலலிதாவே சொந்தக் காரியானார்.

இந்தச் சம்பவம், ஜெயலலிதா ஈழத் தமிழர்கள் தொடர்பாகக் கொண்டிருந்த நிலைப்பாடு, வெறுமனே கருணாநிதிக்கெதிரான தத்திரோபாய நகர்வல்ல என்பதை வெளிகாட்டி நின்றது.

புலிகளின் ஆயுதக் கலாசாரத்தால் தமிழ்நாட்டில் பொது ஒழுங்குக்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் ஆபத்து ஏற்பட்டு விட்டது என்று தி.மு.க ஆட்சிக்கு எதிராக அடிக்கடி அறிக்கைகளையும், குற்றச்சாட்டுக்களையும் முன்வைப்பதை ஜெயலலிதா தனது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ராஜீவ் கொலைக்கு முன்பே தன்னைக் கொல்லச் சதிநடப்பதாகக் கூறி, சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருந்தார்.

ராஜீவ் கொலை நடந்தபோது, தமிழ்நாட்டின் சாதாரண மக்களின் மனநிலைக்கு மாறாக ஈழத்தமிழர்கள் அனைவரையும் இந்தியாவிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்று ஜெயலலிதா பரபரப்பாகச் செவ்வியளித்தார்.

> என்னைக் கொல்லப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைப்படை தமிழகத்துக்குள் ரகசியமாக ஊடுருவி உள்ளது என்று கூறி புலிகளைத் தடை செய்யவேண்டுமென்று கோரினார். இதன் தொடர்ச்சியாகப் புலிகள் அமைப்பைத் தடை செய்யவேண்டுமென மத்திய அரசைத் தொடர்ந்து நிர்ப்பந்தித்தார். புலிகள் மீது மத்திய அரசு தடை விதித்ததும், புலிகள் மீதான தடைவிதிப்பு தமிழ் நாட்டில்சட்டம்– ஒழுங்கைப் பராமரிப்பதை எளிதாக்கி இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

**விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தோரை மிரட்டிய ஜெயலலிதா ஆட்சி**

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து, ஈழத்தமிழர் நலன்கள் என்ற பெயரில் மாநாடுகள், பொதுக்கூட்டங்களில் பங்கேற்றாலோ, ஏற்பாடு செய்தோலோ, சுவரொட்டி ஒட்டினாலோ அவர்கள்மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும்; தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாயும் என்று சதா காலமும் எச்சரிக்கை செய்து வந்தார் ஜெயலலிதா.

1991 செம்ரெம்பர் மாதம் ராஜீவ் கொலையுண்டபின்னர் நடைபெற்ற, ஈழ அங்கீகரிப்பு மாநாடு, சென்னை அம்பத்தூர் ஈழ அகதிகளை வெளியேற்றுவதை எதிர்த்து நடைபெறவிருந்த மாநாடு, ஈழஆதரவு தெருமுனைக் கூட்டம் என்பவற்றை நடத்திய பெரியார் மார்க்சிய பொதுவுடமைக் கட்சி, தமிழ்நாடு இளைஞர் பேரவை போன்ற அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாடநூலாக இருந்த கவிஞர் அப்துல் ரகுமானின் 'சுட்டுவிரல்' கவிதைத் தொகுப்பை, ஈழ ஆதரவு மற்றும் புலி ஆதரவைக் கொண்டிருப்பதாகக் கூறி பாடத்திட்டத்திலிருந்து நீக்கியது ஜெயலலிதாவின் ஆட்சி.

"என்னைக் கொல்லப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைப்படை தமிழகத்துக்குள் ரகசியமாக ஊடுருவி உள்ளது" என்று கூறி புலிகளைத் தடை செய்யவேண்டுமென்று கோரினார். இதன் தொடர்ச்சியாகப் புலிகள் அமைப்பைத் தடை செய்யவேண்டுமென மத்திய அரசைத் தொடர்ந்து நிர்ப்பந்தித்தார். புலிகள் மீது மத்திய அரசு தடை விதித்ததும், புலிகள் மீதான தடைவிதிப்பு தமிழ் நாட்டில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதை எளிதாக்கி இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்

1991ஆம் ஆண்டு ஈழத்தமிழ் அகதிகள் தமது குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள காவல் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென ஜெயலலிதா அரசாணை பிறப்பித்தார்.

1992ஆம் ஆண்டு தமிழர் வாழ்வுரிமை மாநாடு நடத்தி புலிகளை ஆதரித்துப் பேசியமைக்காக பா.ம.க தலைவர் ராமதாஸ், பண்ருட்டி ராமச்சந்திரன், த.தே. கட்சியின் தலைவர் ப.நெடு மாறன் உட்பட ஏழு பேரை தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி ஜெயலலிதா சிறையில் அடைத்தார். 1993ஆம் ஆண்டு புலிகளின் தளபதி கிட்டு கொல்லப்பட்டபோது, கிட்டுவின் மரணத்துக்கு இரங்கல் தெரிவித்தும், இந்தியாவின் அத்துமீறிய நடவடிக்கையைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றியதற்காக ப.நெடுமாறன், சுப.வீ.புலமைப்பித்தன் ஆகியோரைக் கைது செய்தார்.



**பிரபாகரனை இந்திய அரசு கைது செய்ய வேண்டுமென்று கூறிய 'ஜெ'**

இதன் பின்னர் 2002ஆம் ஆண்டில் ஜெயா சட்டசபையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பிடித்து இந்தியா கொண்டுவர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார். இதே ஆண்டு விடுதலைப் புலிகளை ஆதரித்து மதுரை திருமங்கலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியதைக் காரணம் காட்டிய வை.கோவை ஜெயலலிதா கொடிய பொடா சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தார். தமிழ்ச்செல்வன் இறந்தபோது, கருணாநிதி அவருக்கு இரங்கற்பா எழுதியிருந்தார். அந்த இரங்கற்பா எழுதியதற்காக கருணாநிதியின் ஆட்சியைக் கலைக்கவேண்டும் என்று கோரினார் ஜெயலலிதா. இதற்குப் பதிலளித்த கருணாநிதி, இலங்கையில் கொல்லப்பட்டது ஒரு தமிழன். என் உடம்பில் ஓடுவது தமிழ்க் குருதி. அதனால்தான் இரங்கல் தெரிவித்தேன் என்றார். அதற்கு 'ஜெ' நானும் தமிழச்சிதான் என்று கருணாநிதிக்குப் பதிலளித்திருந்தார்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக, இலங்கையில் இறுதிப் போர் நடைபெற்றபோது, பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது போர் என்றால் மக்கள் சாகத்தான் செய்வார்கள் என்று ஜெயலலிதா வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோலக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆனால் திடீரென தடாலடியாக 2010ஆம் ஆண்டு தி.மு.க காங்கிரஸ் கூட்டணியை தோற்கடிப்பதற்காக ஈழ ஆதரவுக் கோஷத்தை எழுப்பினார் ஜெயலலிதா.ஈழத்தமிழர்களுக்குத் தமிழீழம் பெற்றுக் கொடுப்பேன் என்றார். இந்த மனமாற்றம் கண்டு தமிழ்நாட்டின் ஈழ ஆதரவாளர்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் எனப்பலரும் ஜெயலலிதாவின் பின்னால் அணிதிரள வேண்டியதாயிற்று. இதற்கு முக்கிய காரணம் காங்கிரஸ் என்ற பொது எதிரியை வீழ்த்துவது என்பதாக இருந்திருக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒஸ்கார் விருதுக்கான பட்டியலில் ஏ.ஆர். ரஹ்மான் பெயர்

இரண்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்றுள்ள இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இந்த முறை மீண்டும் ஒஸ்கார் விருதுக்காக பட்டியலில் இடம்பெற்று உள்ளார்.

சிலம்டாக் மில்லியனர் படத்துக்காக 2009 ஆம் ஆண்டு 2 ஒஸ்கார் விருதுகளைப் பெற்று உள்ள ஏ.ஆர்.ரஹ்மான் 87 ஆவது ஒஸ்கார் விருதுக்காக தி ஹண்டரு புட் ஜெர்னி, மில்லியனர் டொலர் ஆர்ம் மற்றும் ரஜினிகாந்த் நடித்த கோச்சடையான் ஆகிய படங்களுக்காக பரிந்துரைக்கப்பட்டார். ஆனால், இறுதிப் பட்டியலில் அவரது பெயர் இடம் பெறவில்லை.

தற்போது 2016 ஆம் ஆண்டு முன்னாள் பிரபல கால்பந்து வீரரான பீலேவின் வாழ்க்கையை பீலே ஒரு லிஜண்ட் பிறந்துள்ளார் என்ற படத்துக்கு இசை அமைத்து உள்ளார். இந்தப் படத்துக்காக ஏ.ஆர். ரஹ்மானின் பெயர் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

அந்தப் படத்தில் வரும் ஜிங்கா பாடலுக்காக- சிறந்த பாடலுக்கான பிரிவில் ரஹ்மானின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், சிறந்த இசைப் பிரிவிலும் அவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒஸ்கார் விருது விழா அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி அமெரிக்காவின் ஹொலிவூட் பகுதியில் இருக்கும் டால்பி திரையரங்கில் மற்றும் ஹைலேண்ட் சென்டரில் நடைபெறவுள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



**தீரன் சூர்யா** @Suryah_ 1h

இயற்கை அழியாது, அழிக்கவும் முடியாது. இயற்கையால்தான் நமக்கு வாழ்வும் அழிவும்.





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** குடும்பத்தினரின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் பெருகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். உறவினர்களால் உதவி உண்டு.

**இடபம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். சுயநல நோக்கில் பழகுபவரிடம் விழிப்புடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** நட்புணர்வுடன் அனைவரிடமும் பழகுவீர்கள். சமூகத்தில் உங்கள் மீதான மதிப்பு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். சேமிக்க வாய்ப்புண்டு. பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**கடகம்:** அனுபவசாலிகளின் ஆலோசனை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். சுமாரான அளவில் லாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர நோக்கில் செலவழிக்கக் கூடாது.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்களுக்கு பாராட்டு வெகுமதி கிடைக்கும். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து முன்னேறுவர்.

**கன்னி:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் விரும்பிய பணிமாற்றம் கிடைக்கப் பெறுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும்.

**துலாம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். சமயோசிதமாக விலகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது அவசியம். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**விருச்சிகம்:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பண விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர்.

**தனுசு:** சமூக அக்கறையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். உறவினர் மனம் மகிழ்ந்து பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**மகரம்:** திறமையுடன் செயற்பட்டு, பாராட்டு பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**கும்பம்:** நண்பரின் குறையை பெரிதுபடுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர். தாயின் ஆறுதல் பேச்சு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**மீனம்:** எண்ணம், பேச்சில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் வளர, கூடுதல் உழைப்பு தேவைப்படும். சுமாரான லாபம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**பெண் 1 :** என் மாமியார் ரொம்ப தொந்தரவு பண்ணுகிறார், என்ன பண்ணுறது எனத் தெரியலடி...



**பெண்2:** எதாச்சும் காரணம் சொல்லி, அப்போலோல அட்மிட் பண்ணி விட்டுடுடி... மத்தவையெல்லாம் அவங்களே பார்த்துக்குவாங்க...

என்ன இவ! இன்றைக்கு இட்லில இவ்ளோ ஓட்ட போட்டு வச்சிருக்கா...
"என்னாங்க இடியாப்பம் எப்பிடி இருக்கு?"



ஆத்தி இடியாப்பமா இது!!! சூப்பர் தங்கம்

நித்யானந்தாவின் பெட்ரூமுக்கு உள்ளே கமரா வைக்க தெரிந்த ஊடகங்களுக்கு..!



5 நாளா அப்போலோவில் ஒரு போட்டோ எடுக்கத் துப்பில்ல... அப்புறம் எதுக்குடா... கமராவும் கையுமா திரிறீங்க? த்த்தூ...

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 2 |
| | | 7 | 6 | 2 | | 1 | | |
| | 2 | | 5 | | | | | 3 |
| 2 | | | | | | 7 | | 5 |
| | 8 | 5 | | 7 | | 4 | 2 | |
| 3 | | 6 | | | | | | 9 |
| 7 | | | | | 1 | | 8 | |
| | | 8 | | 9 | 4 | 2 | | |
| 9 | | | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 4 | 6 | 3 | 8 | 5 | 9 | 1 |
| 6 | 8 | 5 | 2 | 1 | 9 | 7 | 3 | 4 |
| 9 | 3 | 1 | 7 | 5 | 4 | 2 | 6 | 8 |
| 1 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 4 | 5 |
| 8 | 9 | 3 | 4 | 7 | 5 | 6 | 1 | 2 |
| 4 | 5 | 6 | 3 | 2 | 1 | 9 | 8 | 7 |
| 5 | 4 | 8 | 9 | 6 | 7 | 1 | 2 | 3 |
| 3 | 1 | 9 | 5 | 4 | 2 | 8 | 7 | 6 |
| 2 | 6 | 7 | 1 | 8 | 3 | 4 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**ரீச்சர்:** 2இல 2 போன மிச்சம் எவ்வளவு?

**மாணவன்:** சரியா புரியல ரீச்சர் மறுபடியும் சொல்லுங்க!

**ரீச்சர்:** டே உன் கிட்ட 2 இட்லி இருக்குனு வச்சிக்கோ. நீ 2 இட்லி சாப்பிட்டால் மிச்சம் என்ன இருக்கும்?

**மாணவன்:** சட்னி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை அலங்காரம்




1, 2 நீளமற்ற தலை முடியைக் கொண்டிருந்தால், இந்தக் கொண்டை பொருத்தமானதாக அமையும். முன்பகுதி தலை முடியை வேறாக்கி, பின்பகுதியை போனிரெயில் இடவும்.
3, 4 கீழ் பகுதி முடியையும் பான்ட் இட்டு, மேலாக சுருட்டி அழுத்தி கிளிப் செய்க.
5 முன்பகுதி முடியை வாரி இழுத்து, முன் பகுதிக்கு பம் செய்க.
6 இதர தலைமுடியை பின்பகுதிக்கு இழுத்த கிளிப் செய்க, அல்லது கன்னப் பகுதியில் அலங்காரமாக விடவும்.
7 அலங்காரம் தயார்.

# சவ்வரிசி பிட்டு







## தேவையான பொருள்கள்

சவ்வரிசி - 200 கிராம்
பச்சரிசி மா - அரை கப்
தேங்காய் - ஒரு மூடி
சீனி - 100 கிராம்
ஏலக்காய் - 3
உப்பு
- கால் தேக்கரண்டி

## செய்முறை

பச்சரிசியில் தண்ணீர் ஊற்றி நன்கு கழுவி தண்ணீரை வடித்து விட்டு வெயிலில் உலர்த்தவும். பின்னர் அதை மில்லில் கொடுத்து அரைத்து எடுத்துக் கொள்ளவும். அரைத்த மாவை வெறும் சட்டியில் போட்டு வறுத்து நிறம் மாறுவதற்கு முன் எடுத்து விடவும். இது ஒரு வருடம் வரை வீணாகாமல் இருக்கும். தேங்காயை துருவிக் கொள்ளவும். ஏலக்காயை பொடி செய்து கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் சவ்வரிசியை போட்டு மூழ்கும் அளவு தண்ணீர் ஊற்றி முதல் நாள் இரவே ஊற வைத்து விடவும். உடனே செய்ய வேண்டும் என்றால், தண்ணீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி நன்கு கொதிக்க வைத்து அதில் சவ்வரிசியை போட்டு அரை மணிநேரம் ஊற வைத்து செய்யவும்.

மறுநாள் ஊற வைத்த சவ்வரிசியை எடுத்து தண்ணீரை வடித்து விட்டு, ஒரு அகலமான பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளவும்.

பிறகு சவ்வரிசியுடன் உப்பு, தயாரித்து வைத்திருக்கும் அரிசி மா சேர்த்து கலந்து கொள்ளவும்.

ஒரே அளவிலான 5 சிறிய கிண்ணங்கள் அல்லது சிறிய டம்ளர்களை எடுத்துக்கொள்ளவும். கிண்ணத்தில் நெய் தடவி முதலில் தேங்காய் துருவலை கால் பகுதி அளவு வைத்துக் கொள்ளவும்.

பிறகு அதில் கலந்து வைத்திருக்கும் சவ்வரிசியை முக்கால் பகுதி வைத்து அதன் மேலே மீண்டும் கால் பகுதி தேங்காய் துருவலை வைக்கவும். இதேபோல 5 கிண்ணங்களிலும் சவ்வரிசி கலவை மற்றும் தேங்காயை வைத்து நிரப்பவும்.

இட்லி பானையில் 2 கப் தண்ணீர் ஊற்றி சூடுபடுத்தவும். அதில் இட்லி தட்டை வைத்து சவ்வரிசி, தேங்காய் கலவை நிரப்பிய கிண்ணங்களை வைக்கவும்.

இட்லி பானையை மூடி வைத்து 8 நிமிடம் வேக வைத்து எடுத்துக்கொள்ளவும்.

பின்னர் வெந்த சவ்வரிசி பிட்டை எடுத்து ஒரு தட்டில் கவிழ்த்து அதனுடன் மீதமுள்ள தேங்காய் துருவல், சீனி மற்றும் பொடி செய்து வைத்திருக்கும் ஏலக்காய் சேர்த்து கலந்து கொள்ளவும்.

சுவையான சவ்வரிசிபிட்டு தயார். தேவைப்பட்டால் முந்திரியை நெய்யில் வறுத்து அதனுடன் சேர்த்து பரிமாறலாம்.

# இதயத்தை பாதுகாக்கும் அவரைக்காய்

நாம் உண்ணும் உணவு நல்லதாகவும், சத்துள்ளதாகவும் இருக்க வேண்டும்.

அவரைக்காய் கெட்ட கொழுப்பைக் குறைத்து, குருதி அழுத்தத்தைச் சீராக்கி, நரம்புகள் மற்றும் இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

இரும்புச்சத்து, நிறைந்துள்ளதால், குருதிச்சோகை குணமாகும். அவரைக்காயில் உள்ள இரும்புச் சத்து, நம் உடல் சிவப்பு குருதி அணுக்கள் உற்பத்தி செய்ய மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

விற்றமின்கள் 'ஏ' மற்றும் 'சி', நீர்ச்சத்து, புரதம் நிறைந்துள்ளது. அவரைக்காயில் பொட்டாசியம், எலெக்ட்ரோலைட்டுகளின் உதவியுடன் நம் உடலில் உள்ள நீர் மற்றும் அமிலங்களின் அளவுகளை சீராக வைக்க உதவுகிறது.

நார்ச்சத்து நிறைந்துள்ளதால், மலச்சிக்கல் பிரச்சினை தீரும். கர்ப்பக் காலத்தின் ஆரம்பத்தில் சாப்பிட்டால், குழந்தையின் மூளை வளர்ச்சி சிறப்பாகும்.

நம் எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்குத் தேவையான கல்சிய சத்தும் அவரைக்காயில் கணிசமான அளவில் உள்ளது.





# குமிழி வடிவ மோதிரங்கள்

குமிழி வடிவ மோதிரங்கள் அறிமுகமாகியுள்ளன. பல்வேறு வர்ணங்களில், பிரத்தியேக கற்கள் வேலைப்பாட்டில் அறிமுகமாகியுள்ளன. இவை [illegible] ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியை குளிர்விக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள்

பூமியின் வெப்பநிலை அதிகரித்து வரும்நிலையில் அதனைக் குளிர்விப்பதற்காக விஞ்ஞானிகள் புதிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையிலே சூரியனிலிருந்து வெளிவருகின்ற அபாயகரமான புற ஊதாக் கதிர்களைத் தடுத்து பூமியின் வெப்பநிலையை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வதுடன் சமனிலையைப் பேணி பாதுகாத்து வருவது ஓசோன் படலங்களே.

ஆனாலும் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் காபன்டைஒக்சைட் கலந்த புகை மற்றும் பசுமைத் தன்மையற்ற வாயுக்கள் ஓசோன் படலத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் பூமியின் வெப்பநிலையை தொடர்ச்சியாக அதிகரிக்கச் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது.

இதன்காரணமாக அந்தாட்டிக்கா உள்ளிட்ட பனிப் பிரதேசங்களில் பனி உருகி கடல் மட்டம் அதிகரித்து வருவதாகவும் கடலோரப் பகுதிகள் நீரில் மூழ்கிப் போகும் அபாயம் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

அத்துடன் இதற்கான தீர்வாக ஹார்வார்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டு கால்சைட் தூசுகளை வளிமண்டலத்தில் தூவுவதன் மூலம் பூமியின் வெப்பநிலையைக் குறைக்க முடியும் என்று கண்டறிந்துள்ளனர்.

இதற்கு முன்பதாக சல்பர்டைஒக்சைட் மூலம் பூமியின் வெப்பநிலையைக் குறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த முறையில் ஓசோன் படலத்துக்கு பாதிப்பு ஏற்படுவதான தகவல் விஞ்ஞானிகளால் வெளியிடப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது.

இந்த நிலையில் தற்போது கண்டறிந்துள்ள கால்சைட் முறையால் வளிமண்டலத்தின் பாதுகாப்பு அரணாக விளங்கும் ஓசோன் படலத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளதுடன் மேற்படி தூசுப்படலம் வளிமண்டலத்தில் உள்ள வெப்பக் காரணிகளை ஈர்க்கும் தன்மை கொண்டதாக இருக்கும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**சிவசாமி றஞ்சன்**

(முன்னாள் ஊழியர் - பெற்றோலியக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்)



தோற்றம்
10.05.1959

மறைவு
07.12.2006

திதி:அபரபக்க திருதியை

அன்பு பாராட்டி ஆதரவாய் எமக்கிருந்து
இங்கிதமாய்ப் பேசி ஈடின்றி வாழ்ந்தவரே
உங்கள் பிரிவுத் துயர் இன்னும் தான் நீங்கவில்லை

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

11/5, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (ஜ/6884)(11.18)

மனைவி,
பிள்ளைகள்.

## ஒன்பதாம் ஆண்டின் நினைவுகளுடன்....



அமரர் **தம்பையா கார்த்திகேசு**

தோற்றம்
03.08.1933

மறைவு
27.11.2007

திதி: திருதியை

உழைப்பிற்கு உதாரணமான எங்கள் தலைவனே!
எம்மைவிட்டு எங்கேதான் சென்றீர்களோ!
உங்கள் பிரிவுத்துயர் சுமந்து ஒன்பதாண்டானாலும்
நாம் வாழ்வதெல்லாம் உங்கள் நிழலில்தான்.

கைதடி மேற்கு,
கைதடி. (J/6878) (13.18)

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
26
.
11
.
1988

உதிர்வு
13
.
12
.
2011

அமரர்

**செல்வநாயகம் கோபிநாத்**

திதி: திருதியை (16.12.2016)

உதிர்ந்து விடவில்லையடா இன்றும் உன் புன்னகை முகம்
உலர்ந்து விடவில்லையடா எம் கண்ணின் நீர்த்துளிகள்
புலர்ந்து விடும் ஒவ்வொரு பொழுதுகளிலும் - உன்
மலர்ந்து விடும் முகம் காண பார்த்திருக்கும் எம்விழிகள்
கலைந்து விடும் கனவுகளைக் காணும் எம் கண்முன்னே
நிலைத்துவிடும் ஓர் உறவாய் எம் குடும்பத்தில் நீயும் வர
அழைத்து நிற்கிறோமடா வந்திடடா எம்முடனே

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி. (J 6881) (14.17.18)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20
.
04
.
1953



உதிர்வு
20
.
11
.
2013

அமரர் விஸ்வகீர்த்தி லயன் **குழந்தைவேலு நடராசா**

திதி:- கார்த்திகைத் திருதியை (16.12.2016)

ஆண்டுகள் மூன்று ஆனதுவே துயர் ஆறவில்லை
நீங்கள் இன்றி நாமின்று நிர்க்கதியாய்த் தவிக்கின்றோம்
வாராயோ இன்னொருகால் எம்மோடு வாழ்வதற்கு
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

'நகுலகிரி' கச்சாய் றோட்,
கொடிகாமம்.
077 667 9391

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

(J/2700)(11.18)

## 100ஆவது பிறந்தநாள் ஞாபகார்த்தம்



மண்ணில்
16.12.1916

விண்ணில்
24.12.2014

திருமதி

**தெய்வானைப்பிள்ளை செல்லத்துரை**

அவர்கள் மயிலை நக்கட்டியோடையைப் பிறப்பிடமாகவும், கருகம்பனை புதுவீட்டைப் புகுந்த இடமாகவும் கொண்டு, மேலும் பல இடப் பெயர்வுகள் காரணமாக சங்கானை, கோப்பாய், வரணி, இளவாலை முதலிய இடங்களில் வசித்து வந்தவரும், எங்கள் குடும்ப விளக்காக விளங்கியவருமாகிய திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லத்துரை அவர்களின் நூறாவது (100ஆவது) பிறந்தநாளாகிய இன்று, அவரை மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஆகிய அனைவரும் நினைவு கூருகின்றோம். அவரவர் இருப்பிடங்களில் அஞ்சலி செய்து ஆச்சியின் ஆன்மா இறைவன் திருவடியில் பேரின்பப் பெருவாழ்வு பெற இறைவனைப் பிரார்த்திப்போமாக.

புதுவீடு,
கருகம்பனை.

குடும்பத்தினர்.
(மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேசசபையின் வரவு செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனை கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் 16.12.2016 ஆம் திகதியிலிருந்து 21.12.2016 ஆம் திகதி வரை பார்வையிடலாமென சபையின் செயலாளர் திரு.சி.தயாபரன் தெரிவித்துள்ளார்.

- தலைமை அலுவலகம் - கருவப்புலம் லேன் கொக்குவில்.
- நல்லூர் உப அலுவலகம் - அடியபாதம் வீதி, திருநெல்வேலி.
- கொக்குவில் உப அலுவலகம் - பிறவுண் வீதி கொக்குவில்.
- பொது நூலகம் கோண்டாவில். – ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
- பொது நூலகம் கொக்குவில். – பிறவுண் வீதி, கொக்குவில்
- பொது நூலகம் நல்லூர் - கலாசாலை வீதி, திருநெல்வேலி.

திரு.சி.தயாபரன், செயலாளர்
நல்லூர் பிரதேச சபை

// 27082) (11.18)

## அறிவித்தல்

**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்**

**2017 ஆம் ஆண்டிற்கான சாவகச்சேரி பிரதேச சபையின் நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத்திட்டம் 1987ஆம் ஆண்டு பிரதேசசபை கட்டளைச் சட்டத்தின் 15ஆம் இலக்க 168ஆம் பிரிவிற் கமைய தயாரிக்கப்பட்டு 16.12.2016ஆம் திகதி தொடக்கம் 22.12.2016ஆம் திகதி வரை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.**

**செயலாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**வள்ளிப்பிள்ளை நடேசு**



எமது அலுவலகத்தில் ஆசிரிய மத்தியநிலை முகாமையாளராக கடமையாற்றும் **ந.செந்தில்வடிவேல்** அவர்களின் அன்புத்தாயார் **அமரர் வள்ளிப்பிள்ளை நடேசு** அவர்கள் 15.12.2016 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.**

## இதய அஞ்சலி



பளை மத்திய கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்து எமக்கெல்லாம் வழிகாட்டியவரும் ஓய்வு நிலை பிரதிக்கல்வி பணிப்பாளருமாகிய **திருவாளர் ஆ. ஶ்ரீஸ்கந்தமூர்த்தி** மற்றும் **செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்** ஆகியோரின் பாசமிகு அன்னை

திருமதி **சரஸ்வதி ஆறுமுகம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

எப்போது சென்றாலும் பாசத்தோடு பசியாற்றி வழியனுப்பும் எமக்கும் அன்னையான அன்னாருக்கு எமது இதயம் நெகிழும் கண்ணீர்க்காணிக்கை செய்கின்றோம்
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் யாவருக்கும் எமது துயரினைப் பகிர்கின்றோம்.

**பளை மத்திய கல்லூரி பழைய மாணவர்கள்,**
**க.தெய்வேந்திரம் - செயலாளர் பேரவைச் செயலகம் வடமாகாணசபை,**
**க.சுந்தரலிங்கம் - உபஅதிபர் வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை,**
**க. உதயகுமார் - அதிபர் யா/மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்,**
**த. அம்பலவாணர் - அதிபர் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி,**
**திருமதி வே. பாலபத்மினிதேவி - அதிபர் பளை மத்திய இந்து ஆரம்ப வித்தி.**

## சிலை வடிக்கும் சிலந்தி

உலகில் உள்ள உயிரினங்களில் 40 வீதம் பூச்சிகள் தான். அந்தவகை யிலே ஏனைய மிருகங்களை நாம் பார்க்க முடியாமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. ஆனால் பூச்சிகளைப் பார்க்காமல் இருக்க முடியாது. பூச்சிகளின் மொத்த எடைதான் பூமியில் உள்ள மொத்த உயிரின எடைகளில் முதன்மையானது என சொல்லப்படுகிறது. இத்தனை பெருமைகளை பூச்சிகள் கொண்டிருந்தாலும் உலகில் உள்ள அதிகளவான மிருகங்களின் உணவாக இவை காணப்படுகின்றன.

பட்டாம்பூச்சிகளும், அந்திப்பூச்சி களும் தம் இறக்கைகளில் பெரிய பளபளப்பான கண்கள் போன்ற வடிவங்களை உருவாக்கிக் கொள்கின்றன. இந்த உருவ அமைப்பானது ஓணான் போன்ற பிராணிகளை மிரளச் செய்யவதற்கென சொல்லப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே தன்னைப் போலவே சிலை செய்துகொள்ளும் தந்திரம் என்பது முற்றிலும் புதிய விடயமாக பார்க்கப்படுகிறது. சிலந்தியை வேட்டையாடிச் சாப்பிடும் குளவிகள் இந்தப் பொய் பொம்மையை என்ன செய்கின்றன என்பது தொடர்பில் விஞ்ஞானிகள் ஆராய்ந்ததாகவும் அதன்படி சிலந்தியின் எதிரிகள் நிஜம் என்று அவற்றை எண்ணி தாக்குவதாகவும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிஜ சிலந்திகள் தப்பித்துக் கொள்வதாகவும் கண்டறிந்துள்ளனர்.

## தவறவிடப்பட்டது

சுன்னாகத்திற்கும் மருதனார்மடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் சாரதிப்பத்திரம் தவறவிடப்பட்டுள்ளது. (பெயர்:- **பரமசாமி பகீஸ்வரன்**) கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.
**076 920 6219, 077 512 1994**

## உடன் தேவை

PLOD SECURITY SERVICE இல் பணிபுரிவதற்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆண்கள் தேவை.
பணிபுரியும் இடம் - உயர்தொழில்நுட்பவியல் கல்லூரி- குருநகர்.
077 176 9063


நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

# இந்தியன் செலக்ஷனின் மாபெரும் மெகா சேல்

**இன்று 16/12/2016 - 31/12/2016 வரை**



அதிரடி விலைக்கழிவில்
சகல விதமான
சாறிவகைகள், சல்வார், சல்வார்த் துணிகள்
மற்றும் ஆண், பெண், சிறுவர்,
சிறுமியர்களுக்கான
ஆடைத் தெரிவுகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்
**இந்தியன் பஜாருக்கு**




இடம்
**வீரசிங்கம் மண்டபம் – யாழ்ப்பாணம்.**

**இந்தியன் செலக்ஷன்**
கஸ்தூரியார் வீதி,
மாநகரசபைக் கட்டடத் தொகுதி, யாழ்ப்பாணம்.

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள் இந்தியன் பஜாருக்கு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலிலியோ செயற்கைக்கோள் வழிகாட்டி சேவை ஆரம்பம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் குடிமக்களுக்கு உலகிலேயே மிகத்துல்லியமான செயற்கைக்கோள் வழிகாட்டி தொழில் நுட்பத்தை வழங்கும் நோக்கில், ஒன்றியத்தின் கலிலியோ அமைப்புமுறை தன்னுடைய முதல் சேவைகளை வழங்கத் தொடங்கியுள்ளது.

தொடக்கத்தில், குறைந்த அளவிலான திறன்பேசிகள் மற்றும் கார் வழிகாட்டும் அமைப்புகளுக்கு மட்டுமே இந்த சேவை கிடைக்க உள்ளது.

கலிலியோ வலையமைப்பில் உள்ள செயற்கைக்கோள் அணு கடிகாரங்களைக் கொண்டிருப்பதால் ரஷ்யா அல்லது அமெரிக்க ராணுவ சேவைகளான ஜிஎல்ஓஎன்ஏஎஸ்எஸ் மற்றும் ஜிபிஎஸ் காட்டிலும் மிகத்துல்லியமாக இது இடங்களை காட்டும் என நம்பப்படுகிறது.

தற்போது இந்தத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், கலிலியோவின் தகவல்களை பயன்படுத்தும் செயலிகளை இயங்கச் செய்யும் மைக்ரோசிப்களை விநியோகம் செய்ய தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஐரோப்பிய ஆணைய அதிகாரிகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். 2020 ஆம் ஆண்டில் முழு செயல்பாட்டில் வரும்போது, புவிசார் இடங்களை கண்டறியும் துல்லியத் தன்மை பத்து மடங்கு அதிகரிக்கும் என்று ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவர் மார்கோ செஃப்கோவிக் தெரிவித்தார். (வ)

# 3 பெற்றோர்கள் இணைந்து குழந்தையை உருவாக்க

## பிரிட்டனில் ஒப்புதல்

மூன்று பெற்றோர்கள் இணைந்து மருத்துவ ரீதியாக ஒரு குழந்தையை உருவாக்குவதற்கு பிரிட்டனின் செயற்கை கருவுறுதல் ஒழுங்குமுறை அமைப்பு ஒப்புதல் கொடுத்துள்ளது. இது வரலாற்று ரீதியான முடிவாகும்.

இன்விட்ரோ பெர்டிலைசன் என்று அறியப்படும் சோதனைக்குழாய் மூலம் கருத்தரிப்பு முறையிலேயே ஒரு மேம்பட்ட முறையைப் பயன்படுத்தி, இதைச் செய்யத் தேவையான உரிமத்தை பெற மருத்துவமனைகள் செயற்கை கருத் தரிப்பை ஒழுங்குபடுத்தும் பிரிட்டன் அரசின் ஆணையத்திடம் விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்ததொழில் நுட்பத்தால், கொடிய மரபணு நோய்களோடு குழந்தைகள் பிறப்பதைத் தடுக்க முடியும் என்று கூறப்படுகிறது. இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் எல்லா மருத்துவமனைகளும், ஒவ்வொரு முறையும் இந்த அமைப்பின் ஒப்புதலை பெறவேண்டும். இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம், ஓர் அமெரிக்கக் குழு இந்தத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒரு ஆண் குழந்தையை உருவாக்கியது. அந்தக் குழந்தையை உருவாக்க மெக்ஸிகோவில் உள்ள மூன்று நபர்களின் மரபணுக்கள் பயன்படுத்தப் பட்டன என்று தெரிவிக்கப் பட்டது. (வ)

# உறைநிலை திசுக்களிலிருந்து உயிர்பெற்ற உலகின் முதல் சிசு

பெண்கள் கருத்தரிப்பதில் மிகப்பெரும் அறிவியல் முன்னேற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

லண்டனில் பெண் ஒருவர், குழந்தை பருவத்தில் நீக்கப்பட்ட சினைப்பையிலிருந்து எடுத்து உறைய வைக்கப்பட்ட திசுவால் கருவுற்று குழந்தை பெற்றெடுத்துள்ளார். பூப்பெய்தாத பெண் ஒருவரின் சினைப்பையில் இருந்த திசுக்களை மருத்துவர்கள் உறைநிலையில் வைத்திருந் தனர்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அதைப் பயன்படுத்தி, செயற்கை கருவூட்டல் மூலம் அந்தப் பெண் கர்ப்பமாகி ஆண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்துள்ளார். 24 வயதாகும் மோசா அல் மட்ருஷி என்னும் அந்த பெண் மணி, தன்னால் மேலும் ஒரு குழந்தையை பெற்றுக் கொள்ள முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

டுபாயில் பிறந்த மோசா அல் மட்ருஷி, சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றால் ஆபத்தான நிலைக்கு தள்ளப்படும் பீட்டா தலசீமியா என்னும் வழிவழியாக வரும் குருதிக் கோளாறால் பாதிக்கப்பட்டு வந்தார்.

எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சைக்கு முன்னதாக கீமோ தெரபி அவருக்கு தேவைப்பட்டது. ஆனால் இந்த சிகிச்சை முறை சினைப்பைகளை சேதப்படுத்தும்.

அதனால் அந்தச் சிகிச்சைக்கு முன்னதாக, அவருக்கு ஒன்பது வயது இருக்கும் போது, அவரது வலது சினைப்பை ஒரு அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு அதன் திசுக்கள் உறைய வைக்கப்பட்டன.

அவரது சினைப்பை திசு துண்டுகளில், கிரையோப்ரொடக்டிவ் ஏஜண்ட்ஸ் என்னும் திசுக்களை பாதுகாக்கும் பொருள் கலக்கப்பட்டது. மேலும் திரவ நைட்ரஜனில் வைக்கப்படுவதற்கு முன்பு மெதுவாக 196 செல்சியஸ் அளவிற்கு வெப்பநிலை குறைக்கப்பட்டது.

கடந்த வருடம், டென்மார்க்கை சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்களால், மோசாவின் சினைப்பை திசுக்கள் ஐந்தாக பிரிக்கப்பட்டு, அதில் நான்கு அவரின் செயலிழந்த இடது பக்க சினைப்பையில் பொருத்தப்பட்டன. மேலும் ஒன்று அவரின் கர்ப்பப்பையின் பக்கம் தைக்கப்பட்டது. இந்த வருடத்தின் தொடக்கத்தில் மோசாவுக்கு கரு முட்டைகள் பொருத்தப்பட்டன.

கருவுறுதல் தன்மை மீண்டும் மீட்கப்பட்டு உலகம் முழுவதும் 60க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறந்துள்ளன. ஆனால் பூப்பெய்தலுக்கு முன்னர் உறைய வைக்கப்பட்ட சினைப்பை கொண்டு குழந்தை பெற்றுக் கொண்ட முதல் பெண்மணி மோசாதான். மேலும் பீட்டா தலசீமியா சிகிச்சைக்கு பின்னர் கருவுற்ற முதல் பெண்ணும் இவர்தான் என்ற சிறப்பையும் பெறுகிறார் மோசா. (வ)


## சாவகச்சேரிபிரதேசசபை

01.01.2017 முதல் 31.12.2017 வரை இறைச்சிக்கடைகள்,களஞ்சியஅறைகள்,பொதுமலசலகூடம் என்பவற்றைகுத்தகைக்குவிடுவதற்கான மீள்கேள்விஅறிவித்தல் - 2017

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 16.12.2016 –29.12.2016வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 30.12.2016 மு.ப 10.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 30.12.2016 மு.ப 10.30மணி

கேள்விஅறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகைவிபரம் | ஆகக் குறைந்தகேள்விதொகை (VAT,NBT தவிர) | கேள்விப் வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBTதவிர) |
|---|---|---|---|---|
| | கச்சாய் உப அலுவலகம் | | | |
| 01 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1051100.00 | 10500.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் சந்தைகோழி இறைச்சிக்கடை | 1337600.00 | 13400.00 | 750.00 |
| 03 | களஞ்சியஅறை இல - 01 | 33100.00 | 500.00 | 750.00 |
| 04 | களஞ்சியஅறை இல - 02 | 31600.00 | 500.00 | 750.00 |
| 05 | கொடிகாமம்மத்திய பஸ்தரிப்புநிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 9000.00 | 500.00 | 750.00 |
| | கைதடி உப அலுவலகம் | | | |
| 06 | கைதடிமாட்டிறைச்சிக்கடை | 200100.00 | 2000.00 | 750.00 |
| | மிருசுவில் உப அலுவலகம் | | | |
| 07 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 367100.00 | 3700.00 | 750.00 |
| 08 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 65000.00 | 700.00 | 750.00 |
| 09 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 50100.00 | 500.00 | 750.00 |

- மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமைஅலுவலகத்தில் கடமைநேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
2016.12.16.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## வேலை வாய்ப்பு

**(20 பேர் மட்டும்)**

உங்கள் கல்வித்தகைமை எதுவானாலும் சாதாரண தர பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களுக்கும் மேல் சித்தியடைந்திருந்தால் நீங்களும் அழைக்கலாம்.

*சர்வதேச தரம் வாய்ந்த பயிற்சிகளுடன் 20 வெற்றிடங்கள்
*பயிற்சியின் போது மாதவருமானம் (18000 - 22 000 )
*பயிற்சியின்பின் 40 000 இற்கு மேல்
*தங்குமிட வசதிகள் உண்டு.
*நிர்வாக அதிகாரி *செயற்றிட்ட அதிகாரி
*மேற்பார்வையாளர் *முகாமைத்துவ பயிலுனர்கள்

வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடனடியாக அழையுங்கள்
077 999 4807, 076 756 5659 (யாழ்ப்பாணம் - வவுனியா),
077 124 9164 (கிளிநொச்சி)


## கண்ணீர் அஞ்சலி



இணுவிலைப் பிறப்பிடமகாவும்,
நல்லூரை வசிப்பிடமாகவும்
கொண்ட

திருமதி **சரஸ்வதி ஆறுமுகம்**
**(இளைப்பாறிய உபஅதிபர்)**


அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு துயருற்றிருக்கும் இவ்வேளையில் அன்னாரின் சகல குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயரத்திலும் பங்கு கொள்கின்றோம்.

**திரு.திருமதி கணேசலிங்கம் - ஆனந்தி குடும்பத்தினர்.**
**கிராம உத்தியோகத்தர் / ஆசிரியர்**
**271/3, நாவலர் லேன், ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.**

(ஜே/6893)19.20)

## மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் செல்லத்துரை



முதலாம் வட்டாரம், மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் 6ம் வட்டாரம் வேலணை மேற்கு,சிற்பனை முருகன் கோயிலடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் செல்லத்துரை (14.12.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-வள்ளியம்மை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் இராசம்மா, தங்கம்மா காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மனோன்மணி காலஞ்சென்ற சதாசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சறோஜினிதேவி காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் நகுலேந்திரன், மகாலட்சுமி , மனோகரன், இரத்தினசிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனபாலசிங்கம், புவனேஸ்வரி, பத்மசுலோசனா, விமலநாதன், சகுந்தலாதேவி, ஞானசோதி ஆகியோரின் மாமனாரும் நிவேதிகா,மலரவன், சனோஜன், பிரியலக்ஷன்(கிராமஅலுவலர்) நிதர்சனா, அபிரா, ரக்ஷினி, அதிரவன், ஆதித்தியன், விதுஷன் ,விஜங்கா, அக்ஷயா, அனோஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6ஆம் வட்டாரம்,**
**வேலணை மேற்கு, சிற்பனை.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## விற்பனைக்குண்டு

யாழ் கஸ்தூரியார் வீதியில் அன்ரா பதிப்பகத்துக்கு முன்பாக 3 பரப்புக் காணியும், யாழ் வைத்தியசாலை வீதியில் HNB வங்கிக்கும் சத்திரச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் 3 கடைகள் 3 மாடிகள் கொண்டவையும், மின்சாரநிலைய வீதியில் பஸ்நிலையத்திற்கு பின்புறமாக இருமாடிக் கடைகள் சகல வசதிகளுடனும், பருத்தித்துறை வீதியில்ஆரியகுளம் சந்திக்கு அருகில் 5 பரப்புடன் கூடிய வீடும், யாழ் மானிப்பாய் வீதியில் 3 பரப்புடன் கூடிய வீடும், யாழ் K.K.S. வீதியில் 5 பரப்புக் காணியும், யாழ் வைத்தியசாலை வீதியில் பஸ்நிலையத்திற்கு முன்பாக 50 அடி அகலமும் 300 அடி நீளமும் கொண்ட வெற்றுக் காணியும், யாழ் பரமேஸ்வரா சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட 5 பரப்புக் காணியும், யாழ் பிறவுண்வீதியில் 6 பரப்புக் காணியும், உடன் விற்பனைக்கு உண்டு.

**கனகசபை தர்மகுலசிங்கம், 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

**077 723 2535**

(J.6864) (22.18)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
## வரவு செலவுத் திட்டம்-2017

1987 ஆம் ஆண்டு மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் அத்தியாயம் (252), (212) பி பிரிவின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கு கிடைக்கக் கூடிய வருமான மதிப்பீட்டினையும் உத்தேச செலவின் விவரங்களையும் உள்ளடக்கிய யாழ். மாநகராட்சி மன்றத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 16.12.2016 தொடக்கம் 22.12.2016 வரை மாநகரசபை அலுவலகம், பிரதான பொது நூலகத்திலும் அலுவலக நேரத்தின் போது பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**திரு.பொ. வாகீசன்**
**மாநகர ஆணையாளர்**
**மாநகரசபை , யாழ்ப்பாணம்.**

குருவே துணை

**வாழ்க வையகம்** **வாழ்க வளமுடன்**



## யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா பயிற்சிகள்

மனிதனின் நிறைவான, வளமான வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது நல்ல உடல் நலமும் மனவளமுமே. உடலும் மனமும் எவ்வளவு வளமாக இருக்கிறதோ அந்தளவு மனித வாழ்வு நிறைவாக அமையும்.அவ்வாறு உடலையும் மனத்தையும்.வளமாக்கிட ஒரு நிறைவான வாழ்க்கையைக் கொடுக்கும் உன்னதமான பயிற்சியே மனவளக்கலையாகும். இவற்றையே அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் மனிதகுலம் மேம்பாடடையவென இவ்வுலகுக்கு அளித்துச் சென்றுள்ளார்கள்.

## முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்

**காலம் :- 17.12.2016 தொடக்கம் 23.12.2016 வரை**
**நேரம் :- பிற்பகல் 5 மணி தொடக்கம்**
**இடம் :- அறிவுத் திருக்கோவில், யாழ்ப்பாணம்.**

பயிற்சி வழங்குபவர் :- மனவளக்கலை பேராசிரியர்
அருள்நிதி ச.இந்திரா அவர்கள் (தமிழ்நாடு - இந்தியா)

**வழங்கப்படும் பயிற்சிகள்**

1. காயகல்ப பயிற்சி
2. எளியமுறை உடற்பயிற்சிகள்
3. எளியமுறை தியானப் பயிற்சிகள்
4. அகத்தாய்வுப் பயிற்சிகள்

மனவளக்கலை யோகா பயிற்சிகளைப் பயின்று பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**யாழ்.அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, கொக்குவில்,**
**யாழ்ப்பாணம் - 021 222 2772**

**யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை**

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2017 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

- நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இதனால் அறிவிக்கப்படுகின்றது.

01. கட்டளைச் சட்டத்தின் 160(3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10% மான வரியொன்றினை 2017 ஆம் ஆண்டு முறையே மார்ச்31, யூன்30, செப்ரெம்பர்30, டிசம்பர்31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு காலாண்டு தவணைகள் மூலம் செலுத்தப்படவேண்டும்.

02. 2017 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்காலாண்டிற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக காலாண்டு விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

03. மேற்சொல்லப்பட்ட பந்தி-1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாத விடத்து வெற்றுக்காணிகள், வதிவிடங்கள் மீது 15%உம் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% உம் விரார்ந்துக் கட்டணம் அறவிடப்படும்.

04. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2017 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் [illegible]

நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
**14.12.2016**

**கா.சண்முகதாசன்,**
**செயலாளர்,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

# குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும் பெருந்தகை..!

**– அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் –**



யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் மூத்த குருக்கள், யாழ்.மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர், யாழ்.புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் முன்னாள் அதிபர், உலகத் தமிழர் பேரவையின் தலைவர் என பல்பரிமாணங்களில் தனது சேவைத்துவத்தை முன் னிலைப்படுத்திய பெருந்தகை அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் தனது குருத்து வாழ்வில் 50 வருடங் களை (1966 - 2016) நிறைவு செய்து இன்றைய தினம் பொன்விழாக் காண்கிறார்.

தற்போது அடிகளார் ஜேர்மன் நாட்டில் வசித்துவருகின்ற போதும், அங்கிருந்து கொண்டு இறை பணியையும் தமிழ் மக்களின் உரிமைக்கான பணியையும் முன்னெடுத்து வருகின்றார். சர்வதேச அரங்கில் தமிழர்களின் உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுத்து ஓயாது செயற்பட்டுவரும் அருட்திரு. எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளாரை மனதார வாழ்த்து வோம். அவருடைய நற்பணிகளுக்காக அவருக் கும் இறைவனுக்கும் நன்றி கூறுவோம். இந்தநிலையிலே இன்று இலங்கையில் குறிப்பாக தமிழர் பிராந்தியங்களில் உள்ள மறை மாவட்டங்களில் பணியாற்றும் பெரும்பாலான குருக்கள் இவரிடம் இறையியல் கற்றும் பயிற்சி பெற்றும் வெளிவந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. சிறந்த இறையியல் அறிஞராகத் திகழும் அடிகளார் ஆசிய இறை யியலாளர்களில் ஒருவராகக் கணிக்கப்படுகின்றார்.

1934ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் பிறந்த இவர், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் பாடசாலைக் கல்வியைக் கற்றார். பின்னர் 1958 ஆண்டில் கொழும்பில் உள்ள இலங் கைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று விஞ்ஞானப் பட்ட தாரியாக வெளியேறினார். தனது பட்டப்படிப்பை நிறைவு செய்ததன் பிற்பாடும், குருத்துவ வாழ்வைத் தேர்வு செய்வதற்கு முன்பாகவும் இடைப்பட்டிருந்த காலப்பகுதியில் ஆசிரியராகவும் ஊடக வியலாளராகவும் பணியாற்றினார்.

இந்தச் சந்தர்ப்பத்திலே உரோ மையில் உள்ள ஊர்பானியா பல்கலைக் கழகத்தில் இணைந்து கொண்டு மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியைக் கற்றுக்கொண்டதுடன், 1966ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி உரோமையில் உள்ள புனித பேதுரு பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருவாகி நாடு திரும்பிய அடிகளார் சில ஆண்டுகள் யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றினார்.அதனைத் தொடர்ந்து 1976ஆம் ஆண்டு மீண்டும் உரோமை சென்று அங்கே தனது உயர் கல்வியை மீண்டும் தொடர்ந்ததுடன் இறையியலில் கலா நிதிப்பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.அதன் பிற்பாடு நாடு திரும்பிய அவர் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் 1976ஆம் ஆண்டு தொடக் கம் 1986ஆம் ஆண்டு வரையான பத்தாண்டு காலப்பகுதிகளை இறை யியல் விரிவுரையாளராகவும் இறையியல் பீடத் தலைவராகவும் பணியாற்று வதிலே செலவிட்டுக் கொண்டார்.

அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய அடிகளார் 10 வருடங்களாக யாழ் கொழும்புத்துறையில் அமைந் துள்ள புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் அதிபராகப் பணி யாற்றினார். 1997ஆம் ஆண்டு வரை அவர் யாழ். மறைமாவட்டத்தின் குரு முதல்வராகவும் பணியாற்றினார். தமிழ் மக்களின் நியாயமான உரி மைகள் குறித்து சர்வதேசத்தின் மனச்சாட்சியை உலுக்கியவராகப் பேசியும் எழுதியும் வந்த அடிகளார், 2010 ஆம் ஆண்டு உலகத் தமிழர் பேர வையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இன்று தனது 82 ஆவது வயதிலும் துடிப்புள்ள ஒரு குருவாக மக்கள் பணியாற்றுகின்றார்.

இவர் எழுதிய பல ஆங்கில மற்றும் தமிழ் நூல்களில் தனது சிந்தனைகளை தெளிவாக முன்வைத்துள்ளார். குறிப்பாக தமிழ் மக்களின் போராட்டத்துக்கான நியாயங்கள், திருச்சபையின் பங்களிப்பு, இலங்கை அரசின் கடினப் போக்கு போன்ற விடயங்களை விரிவாக ஆராய்ந்துள்ளார்.

தனிப்பட்ட முறையிலே ஏழைப் பிள் ளைகளின் கல்விக்காக குறிப்பாக மலையகப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக பல ஆண்டுகளாக உதவி வருகின்றார். இவருடைய உதவியினால் பல மலையகப் பிள்ளைகள் கல்வி கற்று இன்று வள மான வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளனர்.

இவைதவிர, அண்மைக் காலங்களில் தமிழர்களின் சமகாலச் சூழ்நிலைகள் தொடர்பில் தனது நிலைப்பாட்டையும் உல கத்தமிழர் பேரவையின் நிலைப் பாட்டையும் தெளிவாக்கியுள்ளார். இன்றைய போருக்குப் பின்னரான யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் மக்களின் தலைவர்களோடு இணைந்து செயலாற்றவேண்டும் எனக் கூறும் இன்றைய இலங்கை அரசுக்கு விமர்சன ஒத்துழைப்பை வழங்குவதாகவும் குறிப்பிடுகின்றார். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகச் செயலாற்றும் அமைப்புக்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றார்.

இந்தநிலையிலே இன்றையதினம் தனது குருத்துவப் பொன்விழா நாளில் பாப்பரசர் பிரான்சிஸ் அவர் களுடன் இணைந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கின்றார். முதிர்ந்த வயதிலும் நோயின் பிடியிலும் உள்ளத்து உறுதி தளராது எம் மக்களின் உரிமைக் காகக் கண்டங் கள் கடந்து பயணம் செய்தும் ஓயாது பேசியும் எழுதியும் வரும் அடிகளாரை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் சார்பாக வாழ்த்துகின்றோம். சிறப்பாக அவரிடம் இறையியல் கல்வி பயின்றும் குருத்துவ உருவாக்கம் பெற்றும் குருக்களாகப் பணியாற்றிக்கொண்டி ருக்கும் கத்தோலிக்க குருக்கள் சார் பாக அடிகளாரை வாழ்த்துகின்றோம்.

## கடை வாடகைக்கு உண்டு

சுன்னாகம் பஸ் நிலையத்தில் கடை வாடகைக்கு உண்டு. தனியாகவோ, தளபாடங்களுடனோ பெற்றுக்கொள்ளலாம். நீளம்-40 அடி. அகலம்-14 அடி.

**077 853 5599, 021 224 0405**

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் பொற்பதிப் பகுதியில் உடையார் Lane இல் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(நேரடி விற்பனை மட்டும்)

**077 703 7058**

## தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதி முகப்புடன் HNB வங்கிக்கும் இலங்கை வங்கிக்கும் இடைப்பட்ட தூரத்தில் அகலம் 150-200 அடி வரைக்கும் உள்ள காணி 5 பரப்பு-10 பரப்பு வரைக்கும் உடன் தேவை. விலை மூன்று கோடி தொடக்கம் ஐந்து கோடி வரைக்கும் கொள்முதல் செய்யப்படும்.

**077 723 2535**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



3D
மஜெஸ்டிக் ப்ளாட்டினம்
10.00 / 1.00 / 7.00 4.00 p.m
சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2826 திகதி 14.12.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
**39 41 62 73** Q **34**
**ரூ.40,934,750/-**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், சட்டநாதர் கோயிலுக்கு முன்பாக உள்ள இராச வீதியில் ஐந்து (05) அறைகளுடன் விசாலமான வரவேற்பறையும் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று அலுவலக பாவனைக்கும் மற்றும் தனியார் [illegible] வாடகைக்கு

**T.P : 077 586 1959**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றையாட்சி...

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புத் தொடர்பாகக் கட்சியின் மையக் குழு வெகுவிரைவில் கூடி ஆராயவுள்ளது. இதனைத் தொடர்ந்து எமது நிலைப்பாட்டை நாம் அரசமைப்புச் சபையிடம் அறிவிக்கவுள்ளோம். மாகாண முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்களுக்கான அதிகாரங்கள் தொடர்பாகவும் ஏனைய சில முக்கிய விடயங்கள் தொடர்பாகவுமே தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்த சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு நாட்டு மக்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். அதுவரை இந்த விடயம் குறித்து உறுதியான கருத்தைக் கூறமுடியாது. நாட்டின் இறையாண்மைக்கும், ஒற்றையாட்சிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலான எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் சுதந்திரக் கட்சி ஆதரிக்காது என்றார். (த-5)

## கே.கே.எஸ். ...

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவது:

நாடு எங்கு சென்றுகொண்டிருக்கின்றது என்பதை விழித்திருந்து அவதானித்துக் கொண்டிருக்க வேண்டிய ஒரு யுகம் உருவாகி இருக்கின்றது. தற்போது நாடு மிகவும் நெருக்கடியான நிலையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. தொழிலாளர் சட்டங்களுக்கு மாறாக ஊழியர்கள் பணியில் இருந்து நீக்கப்படுகின்றனர்.

நாட்டின் துறைமுகத்தை மட்டுமல்லாது காணிகளையும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் நிலை உள்ளது. அம்பாந்தோட்டையைச் சீனாவுக்குக் கொடுப்பதற்குத் தீர்மானித்துள்ள இவர்கள், திருகோணமலையை அல்லது காங்கேசன்துறையை யாருக்குக் கொடுப்பார்களோ எனத் தெரியவில்லை.

துறைமுகம் இல்லாது போனால் துறைமுக அதிகாரசபை இருக்க முடியாது. அவ்வாறு துறைமுக அதிகாரசபை இருந்தால் தொழிலை இழந்த அனைவருக்கும் நான் அதிகாரத்துக்கு வந்த உடனேயே மீண்டும் தொழிலை வழங்குவேன். என் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்திச் சுமத்தி நாட்டை மேலும் நெருக்கடி நிலைக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கின்றனர் - என்றார். (த-5)

## போராட்டத்தை...

கோரியே இவர்கள் கடந்த எட்டு தினங்களாகப் போராட்டம் நடத்தி வந்தனர். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறு வனத்துக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குவதால், அந்த நிறுவனம் தம்மைப் பணி நீக்கம் செய்துவிடும் என்றும் அதனால் துறைமுக அதிகார சபைக்குள் உள்வாங்குமாறு கோரியுமே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் போராட்டத்தினால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வந்த கப்பல்கள் வெளிச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. கடந்த சனிக்கிழமை கடற்படையினர் நேரடியாகத் தலையிட்டுக் கப்பல்களை விடுத்திருந்தனர்.

இதன் பின்னரும் துறைமுக ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். நேற்று முன்தினம் இவர்களுக்கு ஆதரவாக மக்களும் போராட்டத்தில் இணைந்திருந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, நாளை (நேற்று) பி.ப. 2 மணிக்கு முன்னர் ஊழியர்கள் பணிக்குத் திரும்பாவிட்டால் அவர்கள் பதவி விலகியதாகக் கருதப்படுவார்கள் என்று தெரிவித்தார். இதனையடுத்து நேற்றைய தினம் தமது போராட்டத்தைக் கைவிட்டு ஊழியர்கள் பணிக்குச் சென்றனர். (த-5)

## எமில்காந்தனுக்கு...

ஜினி வீரவர்தன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவருக்கு இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ராடா எனப்படும் மீள்கட்டுமாண மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் 200 மில்லியன் ரூபா சுனாமி நிதியை மோசடி செய்தமை தொடர்பான வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ராடா நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிரான் அலஸ், வடக்கு - கிழக்கு மாகாண தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் நிதிப் பொறுப்பாளர் எமில்காந்தன், ராடாவின் முன்னாள் நடவடிக்கைப் பிரிவு தலைமை அதிகாரி சாலிய விக்கிரமசூரிய, கலாநிதி ஜயந்த டயஸ் சமரசிங்க ஆகிய நால்வரும் இந்த வழக்கில் சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணைகளின்போது நீதிமன்றத்தில் முன்னிலையாவதை எமில்காந்தன் தொடர்ந்தும் தவிர்த்துவரும் நிலையில், அவருக்கு பன்னாட்டுப் பிடியாணை உத்தரவை நீதிபதி பிறப்பித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு பெரிய அழிவை ஏற்படுத்திய சுனாமி இடரைத் தொடர்ந்து வீடமைப்புத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியதாகச் சந்தேக நபர்களுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டது.

குற்றவியல் கோவை மற்றும் பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் நான்கு சந்தேகநபர்களுக்கும் எதிராகச் சட்டமா அதிபர் குற்றபத்திரிகை தாக்கல் செய்திருந்தார். வழக்கு மீண்டும் அடுத்த ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று நீதிபதி அறிவித்தார். (த-5)

## நாடு...

முன்வைக்கவில்லை. திட்டங்கள் பற்றி எழுத்து மூலத்தில் கூட அரசு இன்னும் அறிவிக்கவில்லை. இதனால் பாதிக்கப்பட்டுள்ளோம். இவ்வாறு, புலம்பெயர்ந்து சென்று மீளவும் நாடு திரும்பியுள்ள துறைசார் நிபுணர்கள் உள்ளிட்ட பலரும் அரசு மீது குற்றம் சுமத்துவதோடு கவலையும் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளுக்குச் சென்ற துறைசார் நிபுணர்கள் அனைவரும் திரும்பி வாருங்கள். சகல வசதி வாய்ப்புகளும் செய்து தரப்படும். நாட்டுக்குத் திரும்பிவந்து உங்களையும் நாட்டையும் முன்னேற்றுங்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல தடவைகள் கூறியிருந்தார். அவர் மட்டுமன்றி அரச அமைச்சர்கள் சிலரும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அதனை நம்பியே நாம் தாய்நாட்டுக்குத் திரும்பினோம். ஆனால் இங்கு வந்த பின்னர் எமக்கான எவ்வித வசதி வாய்ப்புகளும் செய்து தரப்படவில்லை. நாம் பல தடவைகள் மாகாண முதலமைச்சருக்கும் மத்திய அரசுக்கும் அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எம்மை இந்த அரசு கண்டுகொள்வதாக இல்லை.

போர்க்காலச் சூழ்நிலையால் வடக்கு - கிழக்கைச்சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள், நிபுணர்கள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் 1983ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாடுகளுக்குச் சென்றனர். தற்போதைய அரசின் அழைப்பையடுத்து நாம் திரும்பிவந்துள்ளோம். அரச உத்தியோகத்திலிருந்து சென்றவர்களும் வந்துள்ளோம். துறைசார் நிபுணர்களான நாம் மீண்டும் அரச உத்தியோகம் செய்வதற்கு முயன்றும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்னும் ஏமாற்றத்துடன் தான் உள்ளோம். அரச உத்தியோகத்தில் துறைசார் நிபுணர்களுக்குப் பற்றாக்குறை உள்ளதாகக் கூறப்பட்டுவரும் நிலையில், முன்னர் அரச உத்தியோகம் புரிந்த எமக்கு மீண்டும் அரச உத்தியோகம் வழங்கப்படவேண்டும். அவ்வாறு மீண்டும் அரச உத்தியோகத்தில் ஈடுபடுவதற்கான அனுமதியை மத்திய அரசுதான் முன்னெடுக்கவேண்டும். நாம் முன்னர் பணிபுரிந்த அரச உத்தியோகத் துறையில் இன்னும் வெற்றிடம் நிலவுவதை உறுதிப்படுத்தியுள்ளோம்.

அதற்கான முயற்சியில் ஈடுபட்டபோதும் இவ்வாறு நாட்டுக்கு மீளவும் திரும்புபவர்களுக்கென்று திட்டங்கள் எதுவும் இதுவரை அரசிடம் இல்லை. திட்டங்கள் இல்லை என்பதனையும் நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

உதாரணமாக பொலிஸ் திணைக்கள முன்னாள் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி நாட்டுச் சூழ்நிலை காரணமாகப் புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவுக்குச் சென்றார். தற்போதைய அரசு அவரை மீண்டும் நாட்டுக்கு வர அனுமதி வழங்கியிருந்தது. முன்னைய அரச உத்தியோகம் தனக்குக் கிடைக்கும் என்று அவர் முன்னர் கூறியிருந்தார்.

முன்னைய அரசு உருவாக்கியிருந்த எழுத்துமூலச் சுற்றறிக்கைதான் இருந்தது. அதுவும் காலாவதியாகிவிட்டது. எனவே தற்போதைய அரசு எமது பிரச்சினைக்கு உரிய தீர்வை சுற்றறிக்கையாக முன்வைக்க வேண்டும். அதன் மூலமாக வேலைவாய்ப்பு உள்ளிட்ட நலன்கள் கிடைக்கவேண்டும். அவ்வாறு கிடைக்கும்போதுதான் வெளிநாட்டிலுள்ள ஏனையவர்களும் இங்குவந்து சிக்கலின்றி வாழமுடியும் - என்றனர். (த-4)

## அளவுக்கதிகமாக...

தொடர்ந்தும் அச்சத்தின் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அமரா பெண் தலைமைத்துவம் தாங்கும் பெண்களின் பிரதிநிதி கதிர்செல்வம் கருணாநிதி தெரிவித்தார்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களை வலுப்படுத்தல், நல்லிணக்க வழிமுறையின் முன்னேற்றப் பாதை, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான தேசிய மாநாடு ரில்கோ ஹோட்டலில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பெண் தலைமைத்துவத்தின் பாதுகாப்பு என்ற தலைப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்குப் பாதுகாப்பான நிரந்தர வீடுகள் இல்லை. இப்போதும் பல குடும்பங்கள் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றன. ஐந்து பெண் பிள்ளைகளை வைத்திருக்கும் ஒரு பெண் தலைமைத்துவக் குடும்பம் பாதுகாப்பு அற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றது. திட்ட அடிப்படையில் கொடுக்கப்பட்ட வீடுகளும் முழுமையாக முடியாமல் கதவுகள், யன்னல் அமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

பாதுகாப்புத்தரவேண்டிய பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று வருகின்றபோது பாலியல் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. இரவு வேளைகளில் தொலைபேசிகளுக்கு அழைப்பெடுப்பது, மோட்டார் சைக்கிள்களில் செல்லும்போது பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்றவுடன் மறிப்பது என்று பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றோம். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எல்லாம் ஒரு பாதுகாப்பற்ற ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவே நாங்கள் உணர்கின்றோம். பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலையைக் கருத்தில் சிந்தித்து செயற்படவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய யாழ். மாவட்டச்செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன், சுகாதாரப் பிரச்சினை, பாதுகாப்புப் பிரச்சினையை பெண் தலைமைத் துவக் குடும்பங்கள் யாழ்ப்பாணத்திலும் எதிர்கொள்கின்றார்கள்.

இங்குள்ள தேச வழமைச் சட்டம், கண்டியச் சட்டம், முஸ்லிம் சட்டம் என்பவற்றில் பெண்களுக்குச் சரியான சமமான உரித்துக்கள் - உரிமைகள் வழங்கப்படவில்லை.

சமூக ரீதியில் பெண்களுக்கு வாழாவெட்டி, கைம்பெண் என்று அழைக்கப்படுவதால் பெண்கள் மன ரீதியில் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். இவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகின்ற பெண்களை வளர்த்தெடுத்து அவர்களது ஆற்றலை மேம்படுத்தவேண்டும். அவர்களின் வாழ்வாதாரத்துக்கான வழிவகைகளை நாங்கள் அனைவரும் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (த-5-7)

## கடற்படைத்...

ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பிரதேச ஊடகவியலாளர்கள் சங்கம், மத்திய மாகாண ஊடகவியலாளர்கள் சங்கம், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியன இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டன.

இதில் கலந்துகொண்ட ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் தர்மசிறி லங்காபேலி, முன்னரை விடவும் இன்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் இருப்பதால் தகவல் அறிவதற்கான உரிமை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது பெருமைக்குரிய விடயம் என்றும் ஊடகத்துறை அமைச்சர் பெருமை பாராட்டுகின்றார். இப்படிப்பட்ட நிலையில்தான் அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற தகவலை வழங்கவே ரொசான் முன்வந்தபோது கடற்படைத் தளபதியினால் கன்னத்தில் அறையப்பட்டது. இதுவரை விசாரணையும் நடத்தப்படவில்லை. இன்னும் சிலர் ஒழுக்கக்கோவையை ரொசான் மீறியிருப்பதாகக் கூறுகின்றனர். அங்கு மோதலை உருவாக்கியது கடற்படைதான். துறைமுக ஊழியர்களின் கோரிக்கை நியாயமானது. மகிந்த ராஜபக்சவினால் 4 வருடங்களாகத் தற்காலிக சேவையில் ஈடுபட்டவர்கள் சீனாவுக்கு அந்தப் பகுதியை வழங்கும்போது தமது தொழில் பாதிப்படையும் என்ற அச்சத்தில் உள்ள நிலையில் இன்று நிரந்தர நியமனத்தைக் கோருகின்றனர். இதுவே இந்த நாட்டின் சுதந்திரம். ஒரு சம்பவம் இடம்பெற்ற பின்னர் ஊடக ஒழுக்கக்கோவை பற்றிப் பேசுவதில் பிரயோசனம் இல்லை. அதற்கு முன்னரே அதுகுறித்து முறையான வேலைத்திட்டம் அவசியமாகும் என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர், தன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்படவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார். (த-5)

## அதிகாரப்...

வதற்கு அளவுகோல் இருக்கின்றதா? என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பிரதமர், இணக்கத்துக்கு அளவுகோல் இருக்கத்தான் வேண்டும். இந்த விடயம் தொடர்பில் மாகாண முதலமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், ஆளுநர்களுடன் கதைத்துள்ளோம். மேலும் கொழும்பு அரசுக்கும் - மாகாணத்துக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வு எப்படி இருக்கவேண்டும் என்று ஆராய்வதற்கு மூவர் அடங்கிய உபகுழு நியமித்துள்ளோம். மேலும், தமிழ்க் கட்சிகள் குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரப் பகிர்வு விடயத்தில் காத்திரமான பங்களிப்பைச் செய்கின்றது. எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத நிலையில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் இறங்கியுள்ளோம். இதுவும் நல்லதுதான்.

புதிய அரசமைப்பில் அரசின் தன்மை எப்படி இருக்க வேண்டும் என்பது பெரிய பிரச்சினையாக இருக்காது என்று நான் நினைக்கின்றேன். எவ்வளவோ பிரச்சினைக்குரிய விடயங்களைத் தீர்த்துள்ளோம்.

புதிய அரசமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் அடுத்த மாதம் விவாதம் நடைபெறும். இந்தக் காலப் பகுதியில் வழி நடத்தல் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் - என்றார். (த-5)

## உண்மையான...

தெரிவித்தார்.கொழும்பிலுள்ள அவரது அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களாக வேலைத்திட்டங்கள் மட்டுமே முன்னெடுக்கப்பட்டன. இதனால் நன்மைகள் வெளியில் விளங்கியிருக்க வாய்ப்பில்லை. தற்போது வேலைகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன. இனி மேல் அனைவரும் அதற்கான பலனை அனுபவிப்பீர்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய், டிசெ. 16

**மனோகராவின்**
**கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட**
**கரப்பந்தாட்டம்**

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் தொடரின் ஆட்டங்கள் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதவுள்ளது. (ம-23-108)



# யங்கம்பன்ஸ் வி.கழகம் முன்னேற்றம் மனோகராவின் கால்பந்துத் தொடரில்

யாழ்ப்பாணம், டிசெ. 16

மனோகராவின் கால்பந்துத் தொடரில் விக்னேஸ்வராவை வீழ்த்தி சுப்பர் 8 சுற்றுக்குச் செல்வதை உறுதிப்படுத்தியது கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம்.

மனோகராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதிபெறும் என்ற காரணத்தினால் இரு அணிகளும் வாழ்வா? சாவா? என்ற நிலையில் களமிறங்கின. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் யங்கம்பன்ஸ் அணியின் குகரதன். வேறு எந்த மாற்றங்களும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 29 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணியின் பிரகாஸ் தனது அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். ஓர் முனையில் நிமிடங்கள் உருண்டோட மறுமுனையில் யங்கம்பன்ஸின் வெற்றி உறுதியாகிக் கொண்டிருந்து. ஆட்டம் நிறைவடைய சில நிமிடங்கள் இருந்த வேளையில், விக்னேஸ்வரா அணியின் ரகுபதி முதல் கோலைப் பதிவு செய்தார். இறுதியில் யங்கம்பன்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-108)



இங்கிலாந்து அணியின் இளம் துடுப்பாட்ட வீரரான ஹமீட், இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சினை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்தார். நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலேயே ஹமீட் அறிமுகமாகியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# யங்ஸ்ரார் – சென்றலைட்ஸ் நாளை எதிர்த்து மோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 16

இலங்கை துடுப்பாட்டச் சங்கம் நடத்திவரும் தொடரில் வவுனியா யங்ஸ்ரார், யாழ். சென்ற லைட்ஸ் அணிகள் நாளை மோதவுள்ளன.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக குறித்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

மாவட்டச் சுற்றுக்களில் யாழ்ப்பாணத்தில் சென்ற லைட்ஸ் அணியும், வவுனியாவில் யங்ஸ்ராரும் சம்பியனான காரணத்தால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம-23)




றோயல் டேர்ப் கழகத்தின் ஏற்பாட்டில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு, நுவரெலியா குதிரைப் பந்தயத் திடலில் நடைபெற்ற குதிரைப் பந்தயப் போட்டியில் வெற்றிபெற்ற குதிரையின் உரிமையாளர்களான ரென்ஸி எட்வர்ட் மற்றும் தீபிகா ஜயகொடி ஆகியோருக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிரி ஜயசேகர, ஜேர்மன் நாட்டுத் தூதுவர் ஜோன் ரூட் ஆகியோர் பரிசுகளை வழங்கினர். (ம)

# சமநிலை!

யாழ்ப்பாணம், டிசெ. 16

மயிலங்காடு-ஞான முருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இளவாலை யங்ஹென்றிஸ், மன்னார் கில்லறி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெற்றது. இரு அணிகளுக்கும் கோல்பெறும் வாய்ப்புக்கள் கிடைத்தன. வாய்ப்புக்கள் எவையும் பயன்படுத்தப்படாத நிலையில், கோல்கள் இன்றி முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதேநிலைதான். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவு வரை கோல்கள் எவையும் பதிவு செய்யப்படாத நிலையில் ஆட்டம் சமநிலை கண்டது. (ம-23)

# இளைஞர் – றோயல் காலிறுதியில் நாளை

யாழ்ப்பாணம், செப். 16

மயிலங்காடு-ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டம் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இந்த ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. (ம-23)

# ஆவரங்கால் மத்தி. நேர் செற் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் பதிவு செய்துள்ள அணிகளுக்கு இடையில் நடத்தும் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஆவரங்கால் மத்தி. நேர் செற் வெற்றிபெற்றது. கலைமதியின் மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:18, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி. இதனால் ஆட்டத்தின் தனது இருப்பை உறுதியாக்க மூன்றாவது செற்றில் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடியான நிலைமை அச்சுவேலி யுத் அணிக்கு ஏற்பட்டது. ஆனால் மூன்றாவது செற்றையும் 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்தி 3:0 என்று நேர் செற்றில் வெற்றியைப் பதிவுசெய்தது. (ம-108-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனியுடன் முரண்பாடில்லை இப்படித் தெரிவித்தார் கம்பீர்

டோனிக்கும் தனக்கும் இடையில் எவ்வித கருத்து முரண்பாடும் இல்லை என்று தெரிவித்தார் கௌதம் கம்பீர்.

2007 ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ணத்தையும் அதன் பின்னர் உலகக்கிண்ணத்தையும் இந்திய அணி கைப்பற்ற கம்பீர் முக்கிய காரணமாக இருந்தார். பின்னர் தொடர்ந்து தடுமாற்றத்தை வெளிப்படுத்தியதன் காரணத்தால் வேறு பல அனுபவ வீரர்களுடன் அணியிலிருந்து ஓரங்கட்டப்பட்டார். யுவராஜ், சேவாக், ஹர்பஜன் போன்ற வீரர்கள் அணியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு டோனியே காரணம் என்று தெரிவிக்கப்பட்டதைப் போல் கம்பீரின் நீக்கத்துக்கும் டோனியே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகளும் உள்ளன என்றும் சொல்லப்பட்டது. இந்த நிலையில் அவ்வாறான குற்றச்சாட்டை கம்பீர் மறுத்துள்ளார்.

டோனி ஒரு சிறந்த வீரர். நல்ல மனிதர். அவர் சிறந்த தலைவர். எங்களுக்கு இடையில் மோதலில்லை. ரி-20 உலகக்கிண்ணம், உலகக்கிண்ணம் போன்ற பெரும் தொடர்களைக் கைப்பற்ற இருவரும் கடுமையாகப் போராடினோம். தற்போது அணியில் இல்லாதமையால் வருத்தமடையவில்லை. எனது பங்களிப்புத் தொடரில் திருப்தியாகவே உள்ளேன் என்று கம்பீர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் முடிந்த நியூசிலாந்துக்கு எதிரான தொடரிலும், நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் கம்பீர் அணியில் சேர்க்கப்பட்டிருந்தார். சில வாய்ப்புக்களை வீணடித்தமையால் அவர் மீண்டும் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





# இந்தியா - இங்கிலாந்து 5ஆவது டெஸ்ட் இன்று

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் சென்னையில் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முதல் ஆட்டம் சமநிலை கண்டது. அடுத்த மூன்று ஆட்டங்களிலும் இந்தியா வென்று 3:0 என்று முன்னிலை பெற்றுள்ளது. இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் இந்தியாவிடமே செல்லும்.

ஐந்தாவது ஆட்டம் நடைபெறும் சென்னை ஆடுகளம் சுழலுக்குச் சாதகம் என்று சொல்லப்படுவதால் இந்த ஆட்டத்திலும் இந்தியாவின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அஸ்வின் இந்தியாவின் முக்கிய துருப்புச் சீட்டாக இருப்பார். அவர் தனது சொந்த மண்ணில் களமிறங்குகின்றமை மேலும் அதிக பலம். அதேபோல் கோக்லியின் திறன் சிறந்த முறையில் உள்ளது. இன்றைய ஆட்டத்திலும் அவரது வேட்டை தொடரலாம்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உயிரிழந்தமையை அடுத்து அங்கு, குறிப்பாக சென்னையில் நடைபெறும் முதல் ஆட்டம் இது என்பதால் தமது கவலையை வெளிப்படுத்தும் விதமாக இந்திய வீரர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்து விளையாடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா தொடரை 4:0 என்று முடிக்கும் என்று முன்னாள் வீரர்கள் பலரும் எதிர்வுகூறியுள்ளனர். ஆனால் இங்கிலாந்து இறுதியாட்டத்தில் வெற்றிபெற முனைப்புக் காட்டும் என்று அந்த அணியின் தலைவர் குக் கடந்த ஆட்டத்தில் வைத்துத் தெரிவித்தார். இவை இன்றைய ஆட்டத்தின் மீது மேலும் சுவாரஸ்யத்தை அதிகரித்துள்ளன. (ம)

## சிந்து வென்றார்

உலக சம்பியன்ஷிப் பூப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஜப்பான் வீராங்கனையமாகுச்சியை வீழ்த்தினார் சிந்து.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 12:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் சிந்து. இதனால் அடுத்த இரண்டு செற்களிலும் வென்றால் மட்டுமே சிந்துவால் வெற்றி பெற முடியும் என்ற நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அந்த இரு செற்களையும் முறையே 21:8, 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய அவர் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)



# செல்சி, சிற்றிக்குத் தண்டம்

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் மைதானத்தில் மோதல் போக்கைக் கடைப்பிடித்தமைக்காக செல்சி, மன்செஸ்டர் அணிகளுக்கு தண்டம் விதிக்கப்பட்டது.

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் இந்த இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டமொன்றில் 3:1 என்ற கோல் கணக்கில் செல்சி வெற்றிபெற்றது. ஆட்டத்தின் இரண்டாம் பாதியின் போது இரு அணி வீரர்களும் கடுமையாக வாக்குவாதம் செய்தனர். கைகலப்பிலும் ஈடுபட்டனர். நடுவர்களின் தலையீட்டை அடுத்து விவகாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இங்கிலாந்து கால்பந்து சம்மேளனம் குறித்த காணொலியை பரிசீலித்துப் பார்த்து தனது தீர்ப்பை அறிவித்தது. செல்சி அணிக்கு ஒரு



லட்சம் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களும், மன்செஸ்டர் சிற்றிக்கு 35 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களும் தண்டமாக விதிக்கப்பட்டது. (ம)

# உலக சம்பியன்ஷிப்; தடுமாறுகிறார் மரின்

உலக சம்பியன்ஷிப் பூப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டமொன்றில் ஒலிம் பிக் சம்பியனான கரோலினா மரின் நேர் செற் கணக்கில் தோல்வியடைந்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் ஸ்பெய்ன் வீராங்கனையும் ஒலிம்பிக் சம்பியனும் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவருமான கரோலினா மரினை எதிர்த்து சீனாவின் சன் யு மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 18:21, 22:24 என்ற அடிப்படையில் இழந்ததை அடுத்து நேர் செற் தோல்விகண்டார் மரின். இருப்பினும் அவர் தொடரிலிருந்து வெளியேற்றப்படவில்லை. இன்னும் சில வாய்ப்புக்கள் அவருக்கு எஞ்சியுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது டெஸ்ட், சென்னை- சேப்பாக்கம் ஆடுகளத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், பழைய மரபுகளைப் பயன்படுத்தி (நிலக்கரிகளை) மைதானத்தின் ஈரலிப்புத் தன்மை போக்கப்பட்டது. (ம)

# பாகிஸ்தானுக்குச் செல்லோம் இலங்கை கிரிக்கெட் உறுதி

பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடும் எண்ணம் இல்லை என்று இலங்கை கிரிக்கெட் சபை உறுதியாகத் தெரிவித்தது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் செய்து விளையாடிபோது ஆயுததாரிகள், வீரர்கள் சென்ற பஸ் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டனர். அதிர்ஷ்டவசமாக எவரும் சாவடையவில்லை. இதன் பின்னர் பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடுவதற்கு ஒவ்வொரு நாடுகளும் மறுத்து வருகின்றன. சிம்பாப்வே மட்டும் ஒரு முறை சென்று விளையாடியுள்ளது.

குண்டுதுளைக்காத பஸ்கள், அதியுயர் பாதுகாப்புக்கள் என்பவற்றை வழங்குவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தயாராக இருந்த போதிலும் தமது நிலையிலிருந்து ஏனைய கிரிக்கெட் சபைகள் இறங்கி வருவதாக இல்லை. இந்த நிலையில் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் தலைவர் சேதி, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை அணிகள் பாகிஸ்தானில் வந்து விளையாட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தார். இதனால் பாகிஸ்தானுக்கு இலங்கை அணி விரைவில் செல்ல வுள்ளது என்று பரவலாக செய்திகள் வெளியாகின. குறித்த செய்திகளை இலங்கை கிரிக்கெட் சபை முழுவதுமாக மறுத்துள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேரவும் மறுப்புத் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியை பாகிஸ்தானுக்கு அனுப்பும் திட்டம் துளிகூட இல்லை என்று தயாசிறி தெரிவித்தார். (ம)



2009ஆம் ஆண்டு தாக்குதலை அடுத்து இலங்கை வீரர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டபோது...

## சிமித் சதம்; ஆஸி. அசத்தல் ஆரம்பம்

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றை முதல் நாள் நிலவரத்தின் படி சிமித்தின் சதம் கைகொடுக்க ஆஸ்திரேலியா வலுவான ஆரம்பம் கண்டது.

பிரிஸ்பெய்னில் ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது. ரென்சொவ், வோர்ணர் இணை சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கியது. இணைப் பாட்டமாக 70 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஆட்டமிழந்தார் வோர்ணர். வீழ்த்தியவர் ஆமிர். நான்கே ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் கவாயா. அரைச்சதம் கடந்தார் ரென் சொவ். சிமித்தும் சிறப்பான ஆட்டம். காயம் காரணமாக ஆமிர் பாதியில் பவிலியனுக்குத் திரும்பியமை பாகிஸ்தானுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியது. 71 ஓட்டங்களுடன் ரென்சொவை வீழ்த்தினார் ரியாஸ்.

சிமித், ஹான்ட்ஸ் கொம் இணைந்து இன்னிங்ஸை திறம்படக் கட்டமைத்தனர். இருவரும் அரைச் சதம் கடந்தனர். சிமித் சதத்தையும் நிறைவு செய்தார். இணைப் பாட்டம் 100 ஓட்டங்களைத் தாண்டியது. நாள் முடிவில் ஆஸ்திரேலியா 288-3 என்றுள்ளது. சிமித் 110 ஓட்டங்களுடனும் ஹான்ட்ஸ்கொம் 64 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

குழு, தனி வகுப்புக்கள்
ACCOUNTING (A/L)
ஆசிரியர்- O.KAYLAN
077 611 4238

அரிய சந்தர்ப்பம் நாளை தவறவிடாதீர்கள்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா
மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர், தையல் இயந்திர திருத்துநர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

| JOB CATEGORY | QTY | SALARY (RM) |
|---|---|---|
| 01. உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200+OT |
| உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200+OT |
| 02. தையல் இயந்திர திருத்துநர் | 10 | 1800-2500 |

நிபந்தனைகள்
+ இலவச தங்குமிட வசதி மற்றும் மருத்துவ வசதி 3 வருடங்கள்
+ வேலை நேரம் 08 மணித்தியாலங்கள். மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாட்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
+ வாரத்தில் இரண்டு நாட்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
+ முன்னனுபவம் தேவையில்லை.
+ அரசாங்க அனுமதிக் கட்டணம் ரூபா 50,000.
+ வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம், புகைப்படம், கடவுச் சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

இடம் : சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். ஆஸ்பத்திரி பின்வீதி)
காலம் : 17.12.2016 (சனிக்கிழமை) காலை 9 மணி
முற்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணம் - 0779729481, 0767183799
கொழும்பு - 0115244446

Capital Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo 14.
அரச அனுமதி இலக்கம் LL No : 2248 advt/2248/17/18/16

18ஆம் திகதி நடைபெறவுள்ள
வடமாகான பட்டதாரி ஆசிரியர்களுக்கான
விசேட இறுதிக் கருத்தரங்கு
காலம்
17.12.2016 சனி
9.00- 4.00
விரிவுரையாளர்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
மற்றும் துறைசார் விரிவுரையாளர்.
கட்டணம் 500/=
முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்கள் விரிவாக ஆராயப்படும்.
அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு
A/R, F/R
காலம்
18.12.2016 ஞாயிறு
9.00-4.00
விரிவுரையாளர்
P.சத்தியமூர்த்தி
கட்டணம் 500/=
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்
077 469 6695

போட்டிப் பர்ட்சை வகுப்புக்கள்
சனி
9.30 - 2.00
புதிய பிரிவு
சனி, ஞாயிறு
9.00 - 4.00
சனி, ஞாயிறு
9.30 - 4.00 மணி வரை
சனி 1.00 மணி
தொடர்பு - 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி கொமர்ஷல் வங்கிஅருகில் )

சுந்தர்சன் நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனை
WARRANTY
இத்தினங்களில் ரூபா 10,000 இற்கு மேல் கொள்வனவு செய்யும் அதிஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 40 பேருக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்
1st Prize - Sofa Set
2nd Prize - Washing Machine
3rd Prize - LED TV
10.12.2016 தொடக்கம் 17.12.2016 வரை
138, யாழ் வீதி, மானிப்பாய்

கலண்டர்கள், டயறிகள், போன்றவற்றை
மிக மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
ES Printers
#357, Kasthuriyar Road, Jaffna. 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.